# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 17 செவ்வாய்க்கிழமை (04.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 312





03 வடக்கில் சிங்களக் குடியேற்றமா?





இந்தச் சதி புதிதான ஒன்றல்ல 14





23 சிட்னி நகரில் வெடித்தது உக்கிர மோதல்





25 செயில் முழக்கம் பெங்களூர் வெற்றி


# தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதியை ஐ.நாவிடம் சொல்வதில் தவறு என்ன?

## பேரினவாதிகளின் கொக்கரிப்பு அர்த்தமற்றது; கூட்டமைப்பு எம்.பி. அரியநேத்திரன் காட்டம்

கொழும்பு, ஒக்ரோபர் 04

''தமிழர் பிரச்சினைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.நா. வரை கொண்டு சென்றுவிட்டது என சிங்கள பேரினவாதிகள் கொக்கரிக்கின்றனர். நாம் எமது பிரச்சினைகளை ஐ.நா.வரை கொண்டு சென்றாலும் அதில் என்ன தவறு?''

- என்று ஆத்திரத்துடன் கேள்வி யெழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரகசியமாகத் தகவல்களை வழங்கியுள்ளது என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

சிங்கள ஊடகங்களில் இந்தச் செய்தி வெளியான மறுகணமே பேரினவாதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்யவேண்டும் என்றும், அவர்களுக்கு எதிராக அரசு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியிருக்கின்றனர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே அரிய நேத்திரன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பக் 27

## கூட்டமைப்பு ஒருபோதும் தகவல் வழங்கியிருக்காது

கொழும்பு, ஒக்.4

ஐ.நா. நிபுணர் குழுவுக்கு எந்தவொரு தகவலையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கியிருக்காது என்ற நம்பிக்கை எமக்குள்ளது என அரசு நேற்றுத் தெரிவித்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் விடயத்தில் இதயசுத்தியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாம் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றோம். இவ்

### அரசு நம்பிக்கை

வாறானதொரு நிலையில் நாட்டுக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படாது என்ற நம்பிக்கை எமக்குள்ளது என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கையில் இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் குற்றங்கள் மற்றும்

பக் 27

## கூட்டமைப்பினைத் தடை செய்யுங்கள்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 4

அரசுக்கும் பாதுகாப்பு தரப்புகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் ஐ.நா. நிபுணர் குழுவுக்கு இரகசியத் தகவல்களை வழங்கியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடனடியாகத் தடை செய்து அதன் அனைத்து உறுப்பினர்களையும் விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

''அரசு இனி எந்தவொரு பேச்சுக்களையும் கூட்டமைப்புடன் நடத்தக்கூடாது'' - என்று இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர வலியுறுத்தினார். இனப்பிரச்சினையை மையப்படுத்திய பேச்சுக்களை உடனடியாக ரத்துச் செய்துவிட்டு நாட்டுக்கு எதிரான சக்திகளைத் தண்டிக்க வேண்டும் என்றும் அவர் சீறினார்.

இது தொடர்பாக கலாநிதி குணதாஸ அமரசேகர தெரிவித்ததாவது:-

புலிப் பயங்கரவாதிகளின் அரசியல் பிரிவுதான் கூட்டமைப்பு. இவர்கள் தொடர்ந்தும் இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டுக் கொண்டே இருகிறார்கள். தேசிய அரசியலில் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு நாட்டுக்கு எதிராக அவர்கள் செயல்படுவதை இனி ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

நாட்டுக்கு எதிரான தகவல்களைக் கூட்டமைப்பு, ஐ.நா. விற்கு வழங்கியிருக்குமாயின் அக்கட்சியை உடனடியாக தடைசெய்ய வேண்டும். அது மட்டுமன்றி அதன் அனைத்து உறுப்பினர்களையும் விசாரணை செய்து தண்டனை வழங்க வேண்டும். நாட்டுக்கு எதிராகச் செய்றபடுபவர்களை பதவி தராதரம் பாராமல் தண்டிப்பதே சிறந்தது.

பக் 27

## அரசு - கூட்டமைப்பு பேச்சு எதிர்வரும் 16 ஆம் திகதி

கொழும்பு, ஒக்.4

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் 12ஆவது சுற்றுப்பேச்சு எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த இந்தப் பேச்சு அரச பிரதிநிதிகளால் ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்வரும் 8ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள் தேர்தல் பிரசார நட வடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ள காரணத்தால் பேச்சு ஒத்திவைக்கப்பட்டதாக அரசு

பக் 27

## பயங்கரவாத தடைச்சட்ட சரத்துகளுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல்கள் மனு

### உயர்நீதிமன்றில் தாக்கல் செய்தது கூட்டமைப்பு

கொழும்பு, ஒக்.4

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டு, அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் மூன்று புதிய ஒழுங்குப் பிரமாணங்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராசா தாக்கல் செய்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் ஒழுங்குப் பிரமாணப் பிரயோகத்தை நீடித்தல், தடுப்புக்காவல் கைதிகள் மற்றும் விளக்கமறியல் கைதிகள், சரணடைந்தோர் பராமரிப்பு மற்றும் புனர்வாழ்வு தொடர்பான ஒழுங்குப் பிரமாணங்கள் கடந்த ஒகஸ்ட் மாதம் 29ஆம் திகதி அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

அடிப்படை உரிமைமீறல் மனுவில் சட்டமா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு, பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகளும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தன் முன்னால் ஆஜர்செய்யப்படும் தடுப்புக்காவல் கைதிகளை விடுதலை செய்வதற்றாக உத்தரவுகளைப் பிறப்பிக்கும் நீதிவானின் தற்துணிவு அதிகாரத்தை இந்த ஒழுங்குப் பிரமாணங்கள் நீக்க முயல்கின்றன என்று மனுதாரர் தெரிவித்திருக்கிறார்.

நபரொருவர் ஏதாவது சட்டவிரோத நடவடிக்கையில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்ற நியாயமான நம்பிக்கையின் அடிப்படையில் மட்டுமே பாதுகாப்பு அமைச்சர் - பாதுகாப்புச் செயலாளர் அதற்கான நடவடிக்

பக் 27

## தமிழருக்கு சுதந்திரம் கிடைக்கும் விரைவில்

### கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

ஒன்றாரியோ, ஒக். 4

இலங்கைத் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழும் காலம் வெகுவிரைவில் வரும் என எதிர்வுகூறி இருக்கிறார் கனேடிய பழமைபேண் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பற்றிக் பிரவுண்.

''உலகின் பழமைவாதம் தழுவிய ஆட்சியாளர்கள் சுதந்திரத்தின் பக்கம் திரும்புகின்றனர் என்பதைக் கண்டு கொண்டிருக்கிறோம்.

பக் 25

## வெளிநாடுகளில் உள்ளோரும் வாக்காளர்களாகப் பதியலாம்

யாழ்ப்பாணம், ஒக்.4

வெளிநாடுகளில் வாழ்பவர்கள் இங்கு தம்மை வாக்காளர்களாகப் பதிய விரும்பினால் தமது உறவினர்கள் ஊடாக கிராம சேவையாளர்களிடமோ அல்லது தேர்தல் திணைக்களத்திடமோ விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவுகளை மேற் கொள்ளலாம் என்று யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி தெரிவித்தார்.

பக் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

## இன்றைய வானிலை

31⁰ C

| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
|---|---|---|---|---|
| யாழ் | | 32⁰c | 28⁰c | |
| மன் | | 31⁰c | 27⁰c | |
| வவு | | 34⁰c | 25⁰c | |
| முல் | | 32⁰c | 26⁰c | |
| கிளி | | 32⁰c | 26⁰c | |

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இடி மின்னலும் பிற மாவட்டங்களில் தெளிவான வானிலையும் நிலவும் சாத்தியம்

# தேசியமட்ட பாடசாலை தடகளப் போட்டி: வடக்கு 17 பதக்கங்கள் பெற்று 7 ஆம் இடம்

## மாகாணத்தின் சிறந்த வீரனாக யாழ். இந்துவின் மைந்தன் தெரிவு

கொழும்பு,ஒக்.04

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான தேசிய மட்டத் தடகளப் போட்டியில் வடக்கு மாகாணம் 17 பதக்கங்களைப் பெற்று 93 புள்ளிகளுடன் ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளது.

தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்று முடிந்த போட்டிகளில் 3 தங்கம், 6 வெள்ளி, 8 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தம் 17 பதக்கங்களையும் 3 வர்ண விருதுகளையும் வடமாகாணம் பெற்றுள்ளதாக வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் நேற்றிரவு உதயனுக்கு தெரிவித்தார்.



வி.ஜஸ்மினன்

மாகாண ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட சிறந்த வீரர் வரிசையில் வடமாகாணத்தின் சிறந்த வீரனாக-யாழ். இந்துக் கல்லூரி மாணவன் வி.ஜஸ்மினன் தெரிவானார். இவருக்கு 25 ஆயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது.

நேற்றைய பரிசளிப்பு நிகழ்வில் பிரதமர் டி.எம்.ஜயரட்ண, கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தன ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

மாகாண ரீதியாகப் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் விவரம் வருமாறு:-

மேல் மாகாணம் - 728, மத்திய மாகாணம் -441, வடமேல் மாகாணம்-359, சப்ரகமுவ மாகாணம்-357, தென் மாகாணம் - 175, வட மத்திய மாகாணம் - 100, வட மாகாணம்-93, கிழக்கு மாகாணம்-47, ஊவா மாகாணம்-20.

இதேவேளை , வடக்கின் வீர, வீராங்கனைகள் பலரும் நான்காவது இடத்தைப் பெற்றும் பதக்கங்களைப் பெறத் தவறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-23)

# தொல்புரத்தில் இன்று நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.4

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்புக்கும் நிரந்தர தீர்வுக்குமான செயற்றிட்டத்தால் தொல்புரம் பிரதேச மக்களுக்காக நடமாடும் சேவை ஒன்று இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணி வரை தொல்புரம் (ஜே/169) கிராம அலுவலர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பதிவாளர் நாயகத் திணைக்களம், சங்கானைப் பிரதேச செயலகம், மானிப்பாய் கல்வி வலயப் பணிமனை , சுகாதார வைத்திய அதிகாரி, சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, மானிப்பாய் பொலிஸ் நிலையம், பால் நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு, கடற்தொழில் திணைக்களம், விவசாயத் திணைக்களம், மானிப்பாய் பிரதேச சபை, மின்சார சபை ஆகியன சேவையில் ஈடுபடவுள்ளன.

தொல்புரம் பிரதேச மக்களுக்கான இந்த நடாமாடும் சேவையில் பிரதேச மக்கள் பங்குகொண்டு பயன்பெறுமாறு யாழ். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்ட பிராந்திய நிகழ்ச்சித் திட்ட அதிகாரி அறிவித்துள்ளார். (ஒ-311)

# இசை வகுப்புகள்

தென்மராட்சி, ஒக.4

வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் நவராத்திரி விழா இறுதி நாளான விஜய தசமியை முன்னிட்டு நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இசை வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

இசைத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வலி காமம் வடக்கு, பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் அறிவித்துள்ளார். (ஒ-323)

# பதினொரு வருட காலத்தின் பின்னர் பாடசாலைக்கு கிடைத்தது விடிவு

தென்மராட்சி, ஒக்.4

பதினொரு வருடகால இடைவெளியின் பின்னர் எழுதுமட்டுவாழ் கரம்பகம் அ.த.க பாடசாலை நேற்று மீள இயங்க ஆரம்பித்துள்ளது.

2000- மார்ச் 27 ஆம் திகதி இடம்பெற்ற யுத்தத்தின் போது மூடப்பட்ட இந்தப் பாடசாலை அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திந்ததனால் இது வரை காலமும் ஆரம்பிக்கப்படவில்லை.

கரம்பகம், ஓட்டுவெளி ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாகியும் பாடசாலை திறக்கப்படாமலிருந்தது. இது குறித்து மக்கள் அடிக்கடி தென்மராட்சி கல்வி வலயத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர். அதைத் தொடர்ந்து நேற்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தலைமையிலான அதிகாரிகள் சென்று பாடசாலையை ஆரம்பித்து வைத்தனர். (ஒ-207)

# இலங்கைக் கடற்பரப்பில் தொழில் செய்ய இந்திய மீனவரை அனுமதிக்க முடியாது

கொழும்பு, ஒக்.4

இரு நாடுகளும் பரஸ்பரம் தமது கடல்களில் மீன்பிடிக்கக் கூடிய இந்தியாவின் திட்டத்தை இலங்கை மறுத்துள்ளது.

இலங்கையின் கடற்பரப்பில் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க விடுவதில் எந்தவிதமான பரஸ்பர சம்மதமும் மேற்கொள்ளப் படாது என மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.

மீன்பிடி விடயம் தொடர்பாக கொழும்பில் இலங்கை-இந்தியப் பேச்சுக்கள் அடுத்த வாரம் இடம்பெற உள்ள நிலையில் இவரது இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்பும் இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத் துறைய மைச்சின் செயலரும் தற்போதைய அமெரிக்காவின் இந்தியத் தூதுவருமான நிருபமாராவும் இவ்வாறான இரு நாட்டு மீனவர்களும் இரு நாட்டுக் கடலில் பரஸ்பரம் மீன்பிடிக்கக் கூடியவாறான திட்டம் ஒன்றை முன்வைத்திருந்தார்.

ஆனால் இதற்கு சேனாரத்னவினால் இலங்கையின் மீனவர்கள் இந்தியாவிற்குள் செல்ல மாட்டார்கள் என்றும் அது போலவே இந்தியாவின் மீனவர்களும் இலங்கைக் கடற்பரப்பிற்குள் வரக்கூடாது எனவும் வலியுறுத்திக் கூறினார்.

பாக்கு நீரிணையின் மீன்பிடியானது தொடர்ச்சியானதொரு கலந்துரையாடும் விடயமாக இருந்து வருகின்றது.

சர்வதேச கடல் எல்லைக் கோட்டின் அடிப்படையில் தான் இருநாட்டுக் கடற்படைகளையும் கடற் பாதுகாப்பில் ஈடுபடுகின்றன.

இருப்பினும் இரு நாடுகளதும் மீனவர்கள் தான் எல்லை மீறித் தமது மீன்பிடித்தல்களை மேற்கொள்கின்றனர்.

இது சிலவேளைகளில் கைதுகளிலும் தடுத்துவைப்பிலும் சென்றுமுடிகின்றது.

இந்தியப் பாதுகாப்பு மற்றும் மீன்பிடி அமைச்சுக்களின் அதிகாரிகள் கொழும்பில் வைத்து இதுபற்றிய பேச்சுக்களை வெள்ளியன்று தொடங்கியுள்ளனர்.

இலங்கையின் சார்பாக வெளியுறவுத்துறையின் செயலர் கருணாரத்ன அமுனுகமவும் மீன்பிடி அமைச்சின் மேலதிகச் செயலர் சாந்தா பண்டாரவும் இதில் பங்குபற்றுவர். (ஒ-10)

# மட்டக்களப்பில் கொள்ளை கோஷ்டி பிடிபட்டது

மட்டக்களப்பு ஒக் 04

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் நீண்டகாலமாகக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த கும்பல் ஒன்றைப் பொலிஸார் சுற்றிவளைத்து கைது செய்ததாக மாவட்ட தலைமை பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சித் வனராஜ தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்களிடமிருந்து 12 லட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்கள், கணினிகள், ஒலிபெருக்கி சாதனங்கள் தங்க நகைகள் உட்பட பெருமளவிலான பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (10)

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
ஐப்பசி 03 2011

பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,783.39↓
மிலங்கா(MPI) 6,031.97↓

உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2,119.11Mn
பங்குகளின் அளவு(No.) 72.04Mn
வியாபாரம்(No.) 19,558

விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ஆசிரி சென்றல் 258.10
கரிச்சந்திரா 2950.00
சி.எவ்.ரி 11.20
மீறம பீச் 319.70
ஹெயிலீஸ் எம்.ஜீ.ரி 35.00

குறைவு(Top 5 losers) - விலை Rs.
மொறிசன் 3050.00
லேக்வுஸ் பிறின் 170.00
பின்லே கொழும்பு 300.30
மஸ்கலியா 22.20
கொன்பிபி ஹொட்டல் 220.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# நிகழ்வுகள்

**கைதடியில் முதியோர் தினம்**

கைதடி சாந்தி நிலையத்தின் முதியோர் தினத்தை முன்னிட்டு நடைபெற்றுவரும் முதியோர் வார நிகழ்வுகளில் இன்று காலை நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராம அவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெசீலியன் கலந்துகொள்வார். (ஒ-313)

**சான்றிதழ் வழங்கும் நிகழ்வு**

கரவெட்டி கரணவாய் மேற்கு பகுதியில் அமைந்துள்ள இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழிற் கல்விகற்ற மாணவர்களுக்கான என்.வி.கியூ தரச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஒ-323)

**சிறப்புச் சொற்பொழிவு**

இயற்கை, பண்பாடு மரபுவளப் பாதுகாப்பு மையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையத்தில் இன்று மாலை 2.30 மணிக்கு நவீனத்துவமும் தமிழ்ப்புலமைப் பாரம்பரியமும் என்ற தலைப்பில் சிறபபுச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

மேற்படி மையத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் வீ.அரசு சிறப்புரையை வழங்குவார். (ஒ-38)

**சிங்கள கிராமிய நடனம்**

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தின் பிரஜா பிரிவின் ஏற்பாட்டில் சிங்கள கிராமிய நடன நிகழ்வு நடைபெறவுள்ளது. இதற்கென களுத்துறையிலிருந்து விசேட நடனக் குழுவினர் வரவுள்ளனர். இந்த நிகழ்வு இன்று இரவு 7 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்திலும் நாளை அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறும். (ஒ-38)

**கலந்துரையாடல்**

தென்மராட்சிப் பிரதேச செயலாளர் பிரிவை இரண்டு பிரதேச செயலகப் பிரிவாக உருவாக்குவது தொடர்பில் பொது மக்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் தொடர்பில் ஆராய்வதற்கான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. (10-15)

**நெடுந்தீவுப் பிரதேச சபையில்**

நெடுந்தீவு பிரதேச சபையின் நடவடிக்கைகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு நெடுந்தீவுப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும். (ஒ-313)

**பயிலரங்கு**

வலிகாமம் கிழக்கு பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் கவின்கலை பயிலரங்கு நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.இந்த நிகழ்வில் தோரணங்கள் ஆக்குதல், நிறைகுடம் வைத்தல், மாவிலை அலங்காரம் முதலிய பண்பாட்டுக் கூறுகள் குறித்த செயன்முறைப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. (10-319)

**பனை தென்னை அபி. சங்க கலந்துரையாடல்**

வடமாகாண பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று முற்பகல் 11 மணிக்கு பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் சமாசக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் அச்சுவேலி, கரவெட்டி, சுன்னாகம், வேலணை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களை கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-313)

**அபிவிருத்திச் சங்கக் கூட்டம்**

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் சிங்களக் குடியேற்றமா? கூட்டமைப்பினர்தான் சொல்கிறார்கள்

## ஆச்சரியம் தெரிவிக்கிறார் கோத்தா



கொழும்பு, ஒக். 04

வடக்கில் சிங்களக் குடியேற்றமா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான் அடிக்கடி இப்படிக் கூறுகின்றனர். சிங்களவர் வடக்கில் குடியேற்றப்படுகின்றனர் என்று அவர்கள் தான் சொல்கிறார்கள்.

எங்கே எப்படிக் குடியேற்றங்கள் என்று கூறட்டும் பார்க்கலாம். பொதுவாகக் கூறுவதைத் தவிர்த்து எங்கே எப்படி என்று பெயர் விவரங்களோடு அவர்கள் கூறட்டும்.

இப்படிக் கூறினார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி'க்கு வழங்கியிருந்த நீண்ட செவ்வியில் 'சிங்களக் குடியேற்றம்' குறித்த கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

கோத்தபாய இது குறித்து மேலும் கூறியதாவது;

நான் சிறிய வயதிலிருந்து யாழ்ப்பாணத்தில் இருந்தவன். 1974 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நான் யாழ்ப்பாணத்தில் இருந்தவன். 74ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாணம் சென்ற போது பெருமளவான சிங்களவர்கள் இருந்தனர். யாழ். நகரத்தில், சுன்னாகத்தில், வவுனிக் குளத்தில், பூநகரியில், முல்லைத்தீவில் பெருமளவானோர் இருந்தனர். அவர்கள் இன்று எங்கே? அவர்களில் ஒருவர் கூட இல்லை. கூட்டமைப்பிடம் இதனைக் கேளுங்கள். கூட்டமைப்பு இவர்களை இப்போது கூப்பிட வேண்டும். வாருங்கள் என்று வரவேற்க வேண்டும்.

கொழும்பில் இன்று எத்தனை தமிழர்கள் அதிகரித்துள்ளனர். 80 ஆம் ஆண்டு காலப் பகுதியை விட எவ்வளவு பேர் இன்று அதிகரித்துள்ளனர். ஏன் இந்த நிலை யாழ்ப்பாணத்தில் கொண்டு வரப்படக்கூடாது? ஏன் கிளிநொச்சியில் கூடாது? தாம் விரும்பும் இடங்களுக்குச் செல்லும் உரிமை மக்களுக்கு இருக்கவேண்டும்.

அம்பாந்தோட்டையைப் பாருங்கள். முன்னர் ஒரு தமிழர் கூட இருக்கவில்லை. இப்போது எத்தனை தமிழர்கள் இருக்கிறார்கள்? ஏன் இந்த நிலைமை? ஏன் இது நாடு முழுவதும் ஏற்படக் கூடாது? வேண்டிய ஒருவருக்கு வேண்டிய இடத்தில் வாழும் உரிமை இருக்கிறது. அந்த உரிமை வழங்கப்பட வேண்டும். அது தான் தேவை-என்றார். (ஒ-சி)

# உயிரா...? வேலியா...?

தென்மராட்சி, ஒக்.4

உயிரா, வேலியா?. இது சினிமாப் படம் அல்ல. தென்மராட்சி மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியே இது.

தற்போது ஏ-9 வீதியில் போக்குவரத்து அதிகரித்துள்ளதால் சிறிய வாகனங்கள் மாற்று வீதிகளைப் பயன்படுத்தி வருகின்றன. இந்த நிலையில் தமது வீதியோர வேலியைப் பாதுகாக்க வேலி அருகே பெரிய கற்களை வரிசையாக அடுக்கி வைத்துள்ளார்கள் குடியிருப்பாளர்கள்.

இரு வாகனங்கள் எதிரெதிராக வந்து விட்டால் வீதியோரக் கற்களால் வாகனங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்த வீதிகளில் மோட்டார் சைக்கிளில் வருவோர் வேகத்தைக் கட்டுப் படுத்த முடியாமல் கற்களின் மீது சில்லு ஏறி விழுந்து காயமடையும் சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

வேலியைப் பாதுகாக்கப் போடப்படும் கற்கள் மனித உயிரையே பறித்துவிட்டால் என்ன செய்வது?

இதேவேளை, படையினரின் காவலரண்கள் முன்பாகவும் வாகனங்கள் வராதபடி அடுக்கி வைக்கப்பட்டுள்ள கற்கள் மீது மோட்டார் சைக்கிள் சில்லுகள் ஏறி வீழ்ந்து காயமடைவோரும் ஏராளம். (ஒ-207)

# 'கொடிய அரக்கனை அழிப்போம்' போதை ஒழிப்பு தினத்தில் பிரசுரம்

## நேற்று பொதுமக்களுக்கு விநியோகம்

தென்மராட்சி, ஒக்.4

சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும், சாவகச்சேரி மதுவரி திணைக்களத்தினரும் இணைந்து துண்டுப் பிரசுரம் ஒன்றை நேற்று வெளியிட்டிருந்தனர்.

போதைப் பொருள்கள் வைத்திருத்தல், பாவனை போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளைச் சுட்டிக் காட்டி அவற்றை வைத்திருப்பது சட்ட விரோத செயல் எனவும் இதற்காக நீதிமன்றத்தால் தண்டனைகள் அல்லது ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்க வாய்ப்புள்ளதையும் அதில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

அந்தப் பிரசுரத்தில்-

''இன்று (03.10.2011) உலக போதை ஒழிப்புத் தினமாகும். போதைப் பொருளானது பெரும்பாலான நாடுகளுக்கு ஓர் அச்சுறுத்தலாக விளங்குகின்றது. மனிதனுக்கு ஏற்படுகின்ற பெரும்பாலான நோய்களுக்குப் போதைப் பொருள் பாவனையானது மூல காரணமாக அமைந்துள்ளது. உலகெங்கும் நடைபெறுகின்ற வீதி விபத்துகளுக்குப் போதைப் பொருள் பாவனையே முக்கிய பங்கு வகிக்கின்றது.

அத்துடன் உலகெங்கும் நடைபெறுகின்ற கொலை, கொள்ளை, வன்புணர்வுச் சம்பவங்களுக்குப் பிரதான காரணியாகப் போதைப் பொருள் பாவனையே செல்வாக்குச் செலுத்துகின்றது. இதனாலேயே உலக நாடுகள் போதைப் பொருளினால் ஏற்படும் குற்றங்களுக்குக் கடும் தண்டனை வழங்குகின்றன.

எனவே இந்தக் கொடிய அரக்கனை நாம் இந்த உலகில் இருந்து முற்றாக அழிக்க இன்றைய நாளில் சபதமெடுத்து நமது வீட்டில் இருந்து ஆரம்பிப்போம். நமது வீட்டில், ஊரில், நாட்டில் உள்ள குடிமக்களுக்குப் போதைப் பொருளால் ஏற்படும் தீமைகளை இடித்துரைத்து அவர்களை இந்தக் கொடிய பழக்கத்தில் இருந்து மீட்டெடுப்போம்'' - என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ஒ-207)

## கைவிடப்பட்டது பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம்

கொழும்பு, ஒக்.4

நாடளாவிய ரீதியில் இன்று நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளதாக நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது உரையாற்றிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உப செயலாளர் உபுல் குணசேகர தெரிவித்தார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவரின் தனிப்பட்ட ஆவணங்கள் லஞ்ச ஒழிப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப் படவிருந்தது.

இதேவேளை, இந்தப் பணிப் பகிஷ்கரிப்புக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)



அலரி மாளிகையில் வைத்து கடந்த வாரம் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட 1800 முன்னாள் போராளிகளில் 1000பேர் நேற்று திங்கட்கிழமை வவுனியா, தமிழ்க் கலவன் பாடசாலையில் வைத்து அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## ஆசிய திறன் அபிவிருத்தி அமைப்பின் மாநாடு

கொழும்பு, ஒக்.4

ஆசிய மற்றும் பசுபிக் வலயத்தில் 20 நாடுகளின் உறுப்பினர்களைக் கொண்ட ஆசியதிறன் அபிவிருத்தி அமைப்பின் வருடாந்த மாநாடு நேற்று கொழும்பில் ஆரம்பமானது.

இந்த மாநாடு எதிர்வரும் 9ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. தெற்கு மற்றும் பசுபிக் ஆசிய வலயத்தில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

இந்தியா, சீனா, ஈரான், காம்போடியா, இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகள் இதில் கலந்து கொண்டுள்ளன. (ஒ-சி)

# மகாத்மா காந்தியின் ஜெயந்தி தினத்தில் சிறுவர் இல்லம் அங்குரார்ப்பணம்

## கிளிநொச்சி, உருத்திரபுரத்தில்

கிளிநொச்சி, ஒக்.4

மகாத்மா காந்தியின் 143 ஆவது ஜெயந்தி தின விழா உருத்திரபுரம் காந்தி சேவா சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறுவர் இல்ல அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

மகாத்மா காந்தி மற்றும் கிளிநொச்சி காந்தி நிலைய [illegible] னாள் நிர்வாகி அமரர் [illegible] வேலாயுதம்பிள்ளை ஆகியோரின் உருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவித்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வில் கிளிநொச்சி பாத்திமா கல்லூரி அதிபர் அருட் சகோதரி அன்ரனீற்றா மார்க், கரைச்சி பிரதேச சபைத் தலைவர் நா.வை. குகராஜன், தமிழ்ச் சங்கத் தலைவர் எஸ்.பத்மநாதன், மகாதேவா ஆச்சிரம குருமுதல்வர் கணேசானந்த மகாதேவ சுவாமிகள், காந்தி சேவா நிலையச் செயலாளர் வி.ஜி.தங்கவேல், சிறுவர் நன் [illegible] உட்படப் பலர் உரையாற்றினர். (ஒ-207)

# செய்தித் துளிகள்

மாத்தளை விகாரை வீதியிலுள்ள ஜே.வி.பியின் மாவட்ட தேர்தல் பிரசார அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வான் மற்றும் கெப் ஆகிய வாகனங்களில் வந்த 20 பேர் கொண்ட குண்டர் குழு அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்குச் சேதம் ஏற்படுத்தியுள்ளது. வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களுக்கும் சிறுசேதம் ஏற்பட்டுள்ளது என ஜே.வி.பி. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***

உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பில் ஜே.வி.பியின் இறுதிப் பிரசாரக் கூட்டம் நாளை கொழும்பு மாளிகாவத்தை பி.டி. சிறிசேன விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பாக ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இதன்போது மக்களைத் தெளிவுபடுத்தவுள்ளனர்.

***

வியட்நாம் ஜனாதிபதி ட்ரொன்க் டெரன்க் சென்க் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் 13 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

இலங்கை வரவுள்ள வியட்நாம் ஜனாதிபதி இரு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடவுள்ளார் என்பதோடு ஜனாதிபதி உள்ளிட்ட பலரையும் அவர் சந்திக்கவுள்ளார்.

***

ஏ-9 வீதியின் நவகம பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் பலியானார். ஒருவர் காயமடைந்துள்ளார்.

வவுனியாவிலிருந்து அநுராதபுரத்துக்குப் பயணித்த வான் மீது மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களில் 38 வயதுடைய இளங் குடும்பஸ்தர் உயிரிழந்தார். காயமடைந்தவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### சின்னப்பு கனகசபை மதியழகன்

(திலகன்)



மண்டைதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு கனகசபை மதியழகன் நேற்று (03.10.2011) திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னையா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## தரம் 6 அனுமதி 2012
### யா/யூனியன் கல்லூரி
### தெல்லிப்பழை

எமது கல்லூரிக்கு 2012 ஆம் ஆண்டில் தரம் 6ற்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக தமிழ் மொழி, ஆங்கில மொழிமூலமான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை பாடசாலை நாள்களில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 31.10.2011

அனுமதிப் பரீட்சை பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

அதிபர்

## சாரதிகள் தேவை

*Vendol Venivel* தயாரிப்புக்களை யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்துவதற்கு வாகனச் சாரதிகள் இருவர் தேவை

**தகைமைகள்**

1. பாரவூர்தி சாரதி அனுமதிப்பத்திரம் (5 Years அனுபவம்)
2. வயது 25-45

*சுயவிவரத்துடன் 05.10.2011 அன்று 2-5 மணிக்கு இடையில் நேரில் வரவும்.*

சங்கீதா ஏஜென்ட்
412,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.0777570488

40 ஆவது ஆண்டில்
1973 - 2013

KIDS GARDEN

ஏடு தொடக்குவதும்
முன்பள்ளி வகுப்பு ஆரம்பமும்
06.10.2011 விஜயதசமி அன்று
பேராசிரியர் க. தேவராஜா
அவர்களால் ஏடு தொடக்கி வைக்கப்படும்
முன்பதிவுகள் விரும்பத்தக்கது

The Express Institute
Irupalai Junction Kopay.
- அதிபர்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## இரண்டாம் ஆண்டு நினைவு கூரல்

அமரர்
### வசந்தமல்லிகா கெங்காதரன்



மலர்வு 08.08.1944 — உதிர்வு 26.09.2009



இரண்டு ஆண்டுகள் இன்றோடு
கடந்து போனதம்மா ஆனால் இன்னும்
உங்கள்
நினைவோடு ஒளியின்றி தவிக்கின்றோம்
அம்மா !
துடிக்கும் எங்களுக்கு ஆறுதல் கூற
ஒருமுறை வாம்மா உன்னைக்காண...

314, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
021-2228415

கலாபூஷணம்
எல்.கெங்காதரன் ஆச்சாரியார்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## வெளிநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள சுற்றறிக்கையின்படி வெளிநாட்டில் உள்ளவர்களும் தம்மை வாக்காளர்களாகப் பதிய முடியும்.

குடும்பமாக வெளிநாட்டில் இருப்பவர்கள் தமது உறவினர்கள் ஊடாக இங்கே தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்யலாம். இதற்கான விசேட விண்ணப்பப் படிவங்கள் கிராம சேவையாளரிடம் வழங்கப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பத்தில் வெளிநாட்டில் உள்ளவர்களது பெயர்களைப் பதிவு செய்து கொடுக்கும்போது கட்டாயமாக அவர்களது கடவுச் சீட்டு இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். இதேபோன்று குடும்பத்தில் ஏதாவது ஓர் அங்கத்தவர் வெளிநாட்டில் இருப்பின் அவரையும் இங்கு வாக்காளராகப் பதிய முடியும்.

குறித்த விசேட விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்து கொடுக்கப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-15)

SHAMROCK
•Computer Course
•Spoken English
•சிங்களம்
•(குறைந்த கட்டணம்)
•Gr 1 முதல் O/L வரை
•Eng. MED. 6 To 11
•Eng. LIT. 10, 11
•புலமைப் பரிசில் (5)

## தவறிவிட்டது

தில்லைநாதன் பகீரதன் ஆகிய எனது அடையாள அட்டை (இல.841523369V), சாரதி அனுமதிப் பத்திரம், A.T. M காட், ஜொப் காட், இன்சூரன்ஸ், ரைக்ஸ் ஆகியன மருதனார்மடத்துக்கும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கும் இடையில் தவற விடப்பட்டுள்ளன. இதனைக் கண்டெடுத்தவர்கள் மகா சில்க்ஸ், நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளை அண்டி சிறிய குடும்பம் ஒன்றுக்கு குடியிருக்க வீடு வாடகைக்குத் தேவை பொருத்தமான முற்பணம், வாடகை வழங்கலாம். தொடர்புகளுக்கு: 0714220002

## விற்பனைக்கு

டேவிட்சன் 701($A_1$)பிறிண்டிங் மெசின் விற்பனைக்கு உண்டு.(முழுமையாக சேவிஸ் செய்யப்பட்டது)

தொடர்புகளுக்கு:-0773068982

## எழுதுவினைஞர் தேவை

தமிழ்மொழி அறிவும், ஓரளவு ஆங்கில மொழி அறிவும் உள்ள பெண் எழுதுவினைஞர் தேவை. மாநகர எல்லைக்குள் வாழ்பவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

விளம்பரதாரர்
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

NISSAN VANNET(MAZDA MODEL)R2 ENGINE PARTS,HOOD CARIER (அலுமினியம்), SIDE MIRROR (LEFT) என்பன பார்வையிடுவதற்கும் ஏனைய தொடர்புகளுக்கும் 0772306653

## கண்ணீர் அஞ்சலி



எமது விரிவுரையாளர் வ.திலீபன் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் சின்னையா வல்லிபுரம்**

அவர்களின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

HND IT மாணவர்கள், உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் 36 வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற

அமரர்
### சங்கரப்பிள்ளை செல்லத்துரை
(பிரதம முகாமைத்துவ உதவியாளர்)

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருடன் துயர் பகிர்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை,
கைதடி.

வைத்தியசாலைச் சமூகம்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை வடிவேலு

(ஓய்வு பெற்ற எழுதுநர், கச்சேரி, யாழ்ப்பாணம்)



பருத்தித்துறை புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வடிவேலு நேற்று (03.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் புலோலி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காங்கேசன்துறையைச் சேர்ந்தவர்களான காலஞ்சென்ற கந்தையா -மாரிமுத்து தம்பதியரின் அருமை மருமகனும் காலஞ்சென்ற வடிவேலு பாக்கியவதியின் (முன்னாள் தலைமைத்தாதி Matron, யாழ்.போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும், சிவகலாவின் (கௌரி) பாசமிகு தந்தையும், பாலச்சந்திரனின் (ஆசிரியர், யா/உடுப்பிட்டி, அமெரிக்க மிஷன் கல்லூரி) அருமை மாமனும், காலஞ்சென்ற பூரணம் (பருத்தித்துறை) மற்றும் கனகாம்பிகை (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பரமேஸ்வரியின் (பருத்தித்துறை) மைத்துனரும் சாஜீசன், சைலகிரீசன், மதுரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்
அரசடி வீதி,புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி கௌசல்லியா இராகவன் அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி சிவராசா பவளமலர்**

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியும், துயரமும் அடைந்துள்ளோம். அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/உடுவில் மல்வத்தை றோ.க.த.க. பாடசாலை.

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் புஸ்பராஜா (தாறா)

லண்டன்



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட **பாலசிங்கம் புஸ்பராஜா** கடந்த 26.09.2011 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம்-செல்லம்மா தம்பதியரின் அன்புமகனும் சிவராஜவதியின் அன்புக் கணவரும், நிதர்சன், நிதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பநாதன், கருணாகரன் (பிரான்ஸ்), பத்மாவதி (சுவிஸ்), ஆனந்தராஜா (நெதர்லாந்து), மகேந்திரராஜா (சுவிஸ்), காலஞ்சென்ற பஞ்சநாதன், உமாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு லண்டனில் நடைபெறும் அதேவேளை அன்னாரின் பிறப்பிடமான சிறுபிட்டி தெற்கில் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்·இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரவி இல்லம்,
அல்வாய் வடக்கு.

தகவல்:
பா.புஸ்பநாதன்
(சகோதரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பிரதான ஜனநாயக உரிமையை கைநழுவிச் செல்ல விடாதீர்கள்

கடந்த வருடம் நடத்தப்பட்ட வாக்காளர் கணக்கெடுப்பின் போது தமது பெயர் மற்றும் விவரங்களைப் பதிவு செய்யாததால் வாக்குரிமையை இழந்தவர்களுக்கு அரசாங்கம் ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளது. தமது பெயர்களைப் பதிவுசெய்யாதவர்கள் இந்த மாதம் பதினைந்தாம் திகதிக்குப் பிந்தாமல் அதனைச் செய்யமுடியும்; மீள்பதிவு செய்யலாம் என்று சொல்லப்படுகிறது.

மீள்பதிவுக்கான விசேட விண்ணப்பப் படிவங்களைத் தேர்தல் திணைக்களம் தயாரித்து விநியோகித்துள்ளது. அகில இலங்கை மட்டத்தில் குறிப்பிட்ட வாக்காளர் மீள்பதிவுப் பணி நடைபெறத் தொடங்கி உள்ளது.

வடக்கு, கிழக்கிலே மிகப்பெரும் எண்ணிக்கையில் வாக்காளர்கள் தமது பெயர்களைக் கடந்த வருடத்தில் பதிவுசெய்ய முடியாமல் ஜனநாயக உரிமைகளில் மிகப் பிரதானமானதாக விளங்கும் வாக்குரிமையை இழந்துள்ளனர். யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திலும், வன்னித் தேர்தல் மாவட்டத்திலும் பல்லாயிரக்கணக்கா னோர் தமது வாக்களிக்கும் தகுதியை இழந்துள்ளனர்.

போரினால் உண்டான இடப்பெயர்வுகள் அதற்கான முழுமுதற் காரணங்களில் ஒன்று. அது மட்டுமன்றி, அகதி முகாம்களிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களும் வாக்காளர் பதிவுகளைச் செய்வதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. அந்த வகையில் அரசாங்கமும் அதற்கான பிரதான பொறுப்பாளிகளில் ஒன்றாகிறது.

எப்படியோ, அரசு இப்போது வழங்கியுள்ள சந்தர்ப்பத்தைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நாள்கள் விரைந்தோடி விடும். ஆகையால் இன்றே இது தொடர்பில் உங்கள் கவனத்தைச் செலுத்தி, செயலில் இறங்குங்கள்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் வாக்காளர்கள் பதிவுகளை மேற்கொள்வதற்கு உதவும் விரைவு நடைமுறையைத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான அமைப்பு (கபே) செயற்படுத்த ஆரம்பித்துள்ளது. மேற்சொன்ன ஐந்து மாவட்டங்களிலும் விண்ணப்பப் படிவங்களை விநியோகிக்க ஆரம்பித்துள்ளது. அதற்கான பிரசார நடவடிக்கைகளையும் அவ்வமைப்பு முடுக்கிவிட உள்ளது.

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் அவற்றைப் பூர்த்திசெய்து தத்தமது பிரிவுக்குரிய கிராம சேவகர்களின் உறுதிப்படுத்தலுடன் தங்கள் பகுதியின் உதவித் தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

இப்போதைய விசேட ஏற்பாட்டின் பிரகாரம், கிராமசேவகரிடம் உறுதிப்படுத்துவதில் சிரமம் இருப்பின், விண்ணப்பப் படிவங்களை உதவித் தேர்தல் ஆணையாளரிடம் நேரடியாகச் சமர்ப்பிக்கலாம்.

உதவித் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிப்போர், சொந்தக் கிராம சேவகர் பிரிவின் பெயர், கிராமத்தின் பெயர், வீட்டு இலக்கம் ஆகியவற்றைத் தவறாது குறிப்பிட வேண்டும்.

அவற்றோடு, சொந்த இடத்தில் இருந்து வெளியேறிய காலம், சொந்த இடத்தில் இருந்து வெளியேறியதற்கான காரணம், கடந்த வருடம் நடைபெற்ற வாக்காளர் கணிப்பீட்டின் போது தங்களுடைய கிராமசேவகர் பிரிவுக்குச் செல்ல முடியாமைக்கான காரணம் ஆகிய விவரங்களைத் தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

தாம் பூர்த்திசெய்த விண்ணப்பப் படிவங்களைக் கிராம சேவகர் அல்லது உதவித் தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்க முடியாதவர்கள், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை "கபே" அமைப்பின் பிரதிநிதிகளிடம் அல்லது அவர்களின் பிரசார வாகனங்களில் சமர்ப்பிக்கலாம் என்றும் "கபே" நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழ் மக்கள் 2011 ஆம் ஆண்டு (இப்போதைய) தேர்தல் வாக்காளர் இடாப்பில் தமது பதிவுகளைச் செய்வதற்கு, முன்னர் வாழ்ந்த பகுதியின் கிராம சேவகர்கள் ஊடாக விசேட விண்ணப்பப் படிவத்தினைப் (PE1/64 (2011) பெற்றுப் பதிவுசெய்ய முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. அதன் போது தங்கள் கையொப்பத்துக்குப் பதிலாக கடவுச்சீட்டு இலக்கத்தைக் கட்டாயமாகக் குறிப்பிட வேண்டும் என்றும் அறிவிக்கப்படுகிறது. விண்ணப்ப படிவங்கள் அடுத்த மாதம் - நவம்பர் மாதம்- முப்பதாம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் பிரதேசங்களில் - உள்நாட்டில் வாழ்பவர்களில் வாக்காளராகப் பதிவுசெய்யாதவர்களின் எண்ணிக்கையை விட, வெளிநாடுகளில் அகதிகளாகப் புலம் பெயர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை பலப்பல மடங்கு அதிகம். அதனால் புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் இங்கு வாக்காளராவதற்கு உரிய விண்ணப்பங்களை அக்கறையுடன் அனுப்ப வேண்டும். தாம் வெளிநாடுகளில் வாழ்வதால் இலங்கை வாக்குரிமை தேவையற்றது என்று எண்ணி வாளாவிருந்து விடக்கூடாது; அசட்டை காட்டலாகாது.

தாம் வாழும் நாடுகளில் நிரந்தர பிரசாவுரிமை பெற்றுள்ள தமிழ் மக்களின் எண்ணிக்கையை விட, அகதிகளாகவும் வெவ்வேறு தரங்களில் தற்காலிக வதிவிடச் சீட்டுப் பெற்றும் வசிப்பவர்களே மிகமிக அதிகம். அவர்கள் தாம் பிறந்த மண்ணின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்பைத் தக்கவைத்துக் கொள்ள முன்வர வேண்டும்.

மொத்தத்தில், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள தமிழ் மக்கள் தங்கள் இனத்தின் நலனுக்கான தவிர்க்க முடியாத கடமையைச் செய்வதற்குத் தாமதம் காட்டாது செயலில் இறங்கவேண்டும். இதனைச் செய்வீர்; அதனை நன்றே செய்வீர். உங்களின் ஜனநாயக உரிமைகளில் பிரதானமான வாக்குரிமையைக் கைநழுவிச் செல்ல விட்டுவிடாதீர்கள்.

# தமிழர்களுக்குச் செய்யவேண்டியதை சரியான தருணத்தில் செய்வோம்

## சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 4

தமிழ் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் சரியான தருணத்தில் திறம்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்யும் என கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுத் தெரிவித்தார்.

ஊடகங்களில் வெளியாகும் எல்லா செய்திகளுக்கும் தன்னால் பதிலளிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அரசுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐ.நா.நிபுணர் குழுவுக்கு இரகசியத் தகவல்களை வழங்கியுள்ளது எனத் தகவல்கள் வெளியாகின. இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை கேட்க முனைந்த போதே சம்பந்தன் எம்.பி., தமிழ் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை தாம் சரியான நேரத்தில் திறம்பட செய்வோம் எனக் கூறினார். (ஒ-சி)

# கொமன்வெல்த் அமைப்பிலிருந்து இலங்கையை உடன் வெளியேற்றுக

## கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்

கொமன் வெல்த் நாடுகளின் அமைப்பிலிருந்து இலங்கையை வெளியேற்றும் நடவடிக்கைக்கு கனடா தனது ஆதரவை வெளிப்படையாக வழங்க வேண்டும் என கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜிம் கல்ஜியானிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒட்டாவாவில் உள்ள கனேடிய நாடாளுமன்ற வளாகத்தில் கனேடிய தமிழ் காங்கிரஸ் அமைப்பின் ஏற்பாட்டில் திரையிடப்பட்ட இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பான சனல்-4 வீடியோக் காட்சிகளை பார்த்த பின்னர் செய்தியாளருக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில் கொடிய யுத்தத்தின்போது தான் தனது சொந்த மக்களைக் கொலைசெய்த குற்றத்தை ஒப்புக் கொண்டு தகுந்த நீதி வழங்கப்படும் வரை இலங்கை அரசின் சர்வதேச செயற்பாடுகளுக்குத் தடை விதிக்க வேண்டும் என்றார். (எ)

# தேசிய சுகாதார வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.4

சுகாதார அமைச்சரினால் நேற்று முதல் எதிர்வரும் 9 ஆம் திகதிவரை தேசிய சுகாதார வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தேசிய சுகாதாரவார நிகழ்வுகளை ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் வழிகாட்டலுடன் வடமகாண சுகாதார அமைச்சும் சுகாதார சேவைகள் திணைக்களமும் இணைந்து உள்ளூராட்சித் திணைக்களம், கல்வித் திணைக்களம், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் முன்னெடுக்கின்றன. இந்த வேலைத்திட்டம் தேசிய சுகாதார வார செயற்பாடுகளாகவும் நுளம்புக் கட்டுப்பாட்டு வார செயற்பாடுகளாகவும் வகைப்படுத்தப்பட்டு கீழ் குறிப்பிட்டவாறு முன்னெடுக்கப்படுகின்றது.

* ஆரம்ப தின நிகழ்வு-பொதுமக்கள் உத்தியோகத்தர்கள் தொடர்பு தினம்
* 2 ஆம் நாள்- சுத்தப்படுத்தும் தினம்
* 3 ஆம் நாள் -விழிப்புணர்வூட்டும் தினம்
* 4 ஆம் நாள்-அவதானிக்கும் தினம்
* 5 ஆம் நாள்-ஒழிப்பு தினம்
* 6 ஆம் நாள் -உணர்ந்து பாராட்டும் தினம்
* 7 ஆம் நாள்- நினைவு தினமாக கொண்டாடப்படுதல்
* 8 ஆம் நாள்- மகிழ்வுணர்வு தினம் (த)

# பொன்சேகாவின் வழக்கில் தேர்தல் ஆணையாளரை பிரதிவாதியாகச் சேர்க்க நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, ஒக். 4

நாடாளுமன்ற உறுப்பினருக்கான சகல உரிமைகளுடனும் நாடாளுமன்றத்தில் அமரவும் வாக்களிக்கவும் தன்னை அனுமதிக்கக் கோரி முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனுவில் பிரதிவாதியாக தற்போதைய தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவை சேர்க்கும்படி விடுக்கப்பட்ட கோரிக்கையை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அனுமதித்தது.

இந்த மனுவில் வழக்காளியான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தனது மனு மீதான தீர்ப்பு வரும் வரை 7ஆவது பிரதிவாதியை கொழும்பு மாவட்டத்திலிருந்து முறையாகத் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினராக பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலின் செயலாற்றுகையை நிறுத்தி வைக்குமாறும் நீதிமன்றத்தைக் கேட்டுள்ளார்.

மனு மீதான அடுத்த விசாரணை நவம்பர் 25இல் நடைபெறும் என்று நீதிமன்ற குழாம் தெரிவித்தது. (ஒ-10)

# வியட்நாமில் இருந்து இலங்கைக்கு நியாயமான விலையில் எரிபொருள்

கொழும்பு, ஒக்.4

இலங்கைக்கு நியாயமான விலைகளில் எரிபொருள்களை விநியோகிக்க வியட்நாம் அரசு விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்னர் வியட்நாம் அரசுக்குச் சொந்தமான நிறுவனமொன்று இது தொடர்பாகத் தனது விருப்பத்தைத் தெரிவித்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் மட்டங்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

ஆனால் பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்பட்டு வியட்நாமின் அந்த யோசனை கிடப்பில் போடப்பட்டிருந்தது.

இவ்வாறு ஓர் எரிபொருள் விநியோகம் அமையுமானால் அதன் உள்நாட்டு விநியோக உரிமையாளருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற பிரச்சினையே அந்த யோசனை பின் தள்ளி வைக்கப்பட்டமைக்குக் காரணம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இறுதியில் எரிபொருள் வழங்கல் பற்றிய தீர்மானத்தை மேற்கொள்ளும் அமைச்சர்கள் அடங்கிய உபகுழு இந்த விடயத்தில் தலையிட்டு வியட்நாம் விநியோக நிறுவனத்தின் கோரிக்கையைப் பதிவு செய்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைதீவில் குடிதண்ணீர் இல்லை ஆழ்கடல் செல்லும் மீனவர்கள் சிரமம்

## வசதியை ஏற்படுத்துமாறு கோரிக்கை

சண்டிலிப்பாய், ஒக்.4

காக்கைதீவுக் கடற்கரையிலிருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் குடிதண்ணீரைத் தேடி அலைய வேண்டியிருக்கின்றது. எனவே கடற்கரையிருந்து குடிதண்ணீரைப் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வலி. தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.பரமகுரு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாகக் கூட்டத்தில் அவர் தெரிவித்தவை வருமாறு:

சாவல்கட்டு, காக்கைதீவு, நவாலி ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான கடற்றொழிலாளர்கள் காக்கைதீவுக் கடற்கரையிலிருந்து தொழிலுக்குச் செல்கின்றார்கள். சுமார் 2,3 கிலோமீற்றர் தூரத்திலுள்ள வசிப்பிடங்களிலிருந்து குடிதண்ணீரை எடுத்து வருவதில் ஏற்படும் சிரமம் குறித்து தொழிலாளர்கள் சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதைத் தொடர்ந்து சங்கத் தலைவர் என். பொன்னம்பலம் எடுத்த துரித நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ். மாநகர சபையால் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது.

காக்கைதீவுப் பிரதேசம் வலி. தென்மேற்குப் பிரதேசத்துக்குச் சொந்தமானதால் மனிதாபிமான முறையில் வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீரை மாநகரசபை நிறுத்தியுள்ளது. இதனால் கடற்றொழிலாளர்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றார்கள்.

எனவே தொழிலாளர்களின் நலன்கருதி கடற்கரையிலிருந்து குடிதண்ணீரைப் பெறுவதற்கான ஒழுங்குகளைப் பிரதேச சபை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (த-115)

# சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு நிரந்தர கட்டடம் அமைக்க முடியாத நிலை

## அரச காணிகள் எதுவும் இல்லையாம்

சுன்னாகம், ஒக்.4

சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கென நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு அரச காணிகளில் அதனை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி.தெற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இதனைத் தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் இந்த விடயம் தொடர்பாகச் சபையுடன் கலந்தாலோசித்த பின்னர் பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு தனிப்பட்டவர்களிடம் காணியைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் இல்லாதுவிட்டால் பொலிஸ் நிலையம் அமைக்கக் கூடிய இடத்தில் காணியைச் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச செயலருக்குப் பணித்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையம் 1995 ஆம் ஆண்டில் இருந்து தற்போதுவரை சுன்னாகம்-புன்னாலைக்கட்டுவன் வீதியில் உள்ள தனியார் வீடுகளில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## சின்னச் சின்னக் கைகள்....



யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ். சிவதாசனின் ஒழுங்கமைப்பில் கடந்த சனிக்கிழமை 'சின்னச் சின்னக் கைகள்' என்ற பெயரிலான சித்திரக் கண்காட்சி இடம்பெற்றது. மூத்த ஓவியர் வை. சச்சிதானந்தசிவம் கண்காட்சி மண்டபத்தை நாடா வெட்டித் திறந்து வைக்கிறார். கண்காட்சியை மக்கள் பார்வையிடுகின்றனர். (ம-38)

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு விரைவில் சமாதான நீதிவான் பதவி

யாழ்ப்பாணம், ஒக்.4

வடமாகாணத்தில் உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்களாக உள்ள சகலருக்கும் பதவி வழியான சமாதான நீதிவான் பதவி வழங்கப்படவுள்ளது.

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பெயர், விவரங்களின் படி அந்தந்த உள்ளூராட்சிப் பிரதேச எல்லைகளுக்குள் கடமையாற்றக் கூடிய பதவி வழி சமாதான நீதிவான் பதவியே இவ்வாறு வழங்கப்படவுள்ளது.

இதேவேளை-

மேற்படி விடயத்தைச் சபைகளில் தீர்மானமாக நிறைவேற்றிச் சபைத் தீர்மானத்தின் இயக்கத்துடன் நீதி அமைச்சின் செயலரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் ஒரே தடவையில் மேற்படி தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக குறுகிய காலத்தில் இந்தப் பதவியைப் பெற்றுச் சேவையாற்ற முடியும் என வடமாகாண உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-302)

# காந்தி ஜெயந்தி தின நிகழ்வு



யாழ்ப்பாணம், ஒக்.4

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் 143 ஆவது காந்தி ஜெயந்தி தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 774, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் இடம்பெற்றன.

யாழ்.மாவட்டக் கிளையின் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நிகழ்வின் வரவேற்புரையை ஆசிரியர் எஸ். சத்தியகீர்த்தியும் தலைமையுரையை கா. கார்த்திகேசும் நிகழ்த்தினர்.

நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக யாழ். போதனா வைத்திய சாலையின் உளவளத் துணையாளர் நா. நவராஜ் ''முழுமையாக வாழ்தல்'' என்னும் தலைப்பிலும் யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் ந. சிவகரன் 'அகிம்சை தத்துவம் ஒரு நோக்கு'' என்னும் தலைப்பிலும் உரை நிகழ்த்தினர். (த-313-23)

# பிரதேச சபை உறுப்பினர்களின் உரைகள் இனிமேல் ஒலிப்பதிவு

## வலி.மேற்குக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக்.4

வலி.மேற்குப் பிரதேச சபையில் சபைக் கூட்டங்களில் தலைவர், உறுப்பினர்களின் தீர்மானங்கள், உரைகள் பதிவு செய்யப்படவுள்ளன.

இதற்கான தீர்மானத்தை வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் முன்வைத்துள்ளார்.

சபைக் கூட்டங்களின் போது தலைவர், உறுப்பினர் மற்றும் உப தவிசாளர் ஆகியோரால் முன்வைக்கப்படும் முக்கியமான விடயங்கள், கருத்துக்கள், குறிப்புகள் பிழையேதுமின்றி அறிக்கையிடப்பட வேண்டும்.

இந்த அறிக்கை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலர் ஊடாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலருக்கும் அனுப்பப்பட்டு அதன் ஊடாகப் பிரதேச அபிவிருத்தி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாகவே சபைக் கூட்டங்களின்போது ஒலிப் பதிவுக் கருவி மூலம் உரைகள் பதிவு செய்யப்பட்டு முழுமைப் படுத்தப்படவுள்ளன. (த- 302)

# சிறுவர், முதியோர் தின நிகழ்வு

வலி.தெற்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர், முதியோர் தின் நிகழ்வுகள் சபையின் தலைவர் தி. பிரகாஸ் தலைமையில் சுன்னாகம் பொது நூலகத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன், தெல்லிப்பழை துர்க்கையம் மன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் ஆறு.திருமுருகன், சட்டத்தரணி கு.விசுவலிங்கம், சபையின் உறுப்பினர்களுடன் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டார்கள். (த-86)

# முதியோர் கொடி வாரம்

சண்டிலிப்பாய், ஒக்.4

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட முதியோர் பேரவையினால் கொடி தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. பேரவைத் தலைவர் எஸ்.சிவகுமார் முதலாவது கொடியை மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் கே.இல்ட் சுமணசர்மாவிடம் வழங்கிக் கொடித் தினத்தை ஆரம்பித்து வைத்தார்.

சர்வதேச முதியோர் தினம் யாழ். மாவட்ட முதியோர் பேரவையினால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட விருக்கின்றது. மானிப்பாய் கலாசார மண்டபத்தில் இம்மாதம் 11 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த முதியோர் தின விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண உதவிச் செயலாளர் திருமதி.பி.சிவலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.(த-115)

# குப்பிளானில் வீடமைப்புப் பணிகளை நிறுத்த 'ஜசாக்' நிறுவனத்துக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், செப்.4

குப்பிளான் வடக்குப் பகுதியில் ஜசாக் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்படவிருந்த ஐந்து வீடுகளின் கட்டடப் பணிகளை நிறுத்தும்படி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் பணித்துள்ளார்.

[illegible] 'ஜசாக்' நிறுவனத்தால் குப்பிளான் வடக்கு ஜே/211 கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியேறிய ஐந்து குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான பொருள்கள் வழங்கப்பட இருந்தன. பின்னர் இறுதி நேரத்தில் அவை வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் தன்னிச்சையான முறையில் எந்தவொரு செயற்றிட்டத்தையும் மேற்கொள்ள முடியாது எனவும் உரிய பயனாளிகள் தெரிவு அரச அலுவலர்களான கிராம அலுவலர்கள், பிரதேச செயலர் ஆகியோரினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

உரிய பட்டியலைப் பிரதேச செயலருக்கு அனுப்பி அவருடைய அனுமதி கிடைக்கப் பெற்ற பின்னர் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்படியும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (த-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் முதல் சேந்தாங்குளம்வரை கரையோரம் கடலரிப்பினால் பாதிப்பு

## பாதுகாப்பு அணை அமைக்குமாறு கோரிக்கை

சண்டிலிப்பாய், ஒக்.4

மாதகலிலிருந்து சேந்தாங்குளம் வரையான கடற்கரைப் பிரதேசம் கடலரிப்பால் நாளாந்தம் அழிந்து கொண்டு போகின்றது. இதனால் இந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு நாளடைவில் பாரிய பாதிப்பு ஏற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்தப் பிரதேசத்தைக் கடலரிப்பிலிருந்து பாதுகாக்கும் வகையில் கருங்கல்லால் பாதுகாப்பு அணையை அமைத்துத் தருமாறு மாதகல் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் என்.சுப்பிரமணியம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பிரதேசம் பாரிய கடற்பிரதேசமாக இருப்பதால் கடலலைகளால் கரையோரத்திலுள்ள முருகைக்கற்கள் கடலுக்குள் அடித்துச்செல்லப்படுகின்றன. இதனால் கரையோரங்களில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. நாளாந்தம் ஏற்பட்டுவரும் கடலரிப்பால் இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் மக்கள் அச்சம் அடைந்துள்ளார்கள்.

எனவே இந்தப் பிரதேசத்தில் குடியிருக்கும் மக்களின் நலன் கருதியும் கடலரிப்பைத் தடுத்து நிறுத்தும் வகையிலும் மாதகலிலிருந்து சேந்தாங்குளம் வரை கருங்கற்களினால் அணைச்சுவரை அமைத்துத் தருமாறு கோரியுள்ள சமாசத் தலைவர், முதற்கட்டமாக மாதகல் பிரதேசத்தில் இந்தப் பணியை ஆரம்பிக்குமாறு கேட்டுள்ளார். (த-115)

# சிவில் பாதுகாப்புக் குழுவுக்கு இளைஞர்கள் பின்னடிப்பு

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் சிவில் பாதுகாப்புக் குழுக்களில் இணைவதற்கு மக்கள் குறிப்பாக இளைஞர்கள் பின்னடிக்கின்றார்கள். இதனால் பொலிஸாரும் கிராம உத்தியோகத்தரும் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றார்கள்.

குடாநாட்டில் அண்மைக் காலங்களாக இடம்பெற்று வரும் கிறீஸ் பூதம், மர்ம மனிதரின் நடவடிக்கைகள் மக்களை ஆட்டிப் படைத்து வருகின்றன. இந்த செயற்பாடுகளிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காகப் சிவில் பாதுகாப்பு குழுக்களைஅமைப்பதற்குப் பொலிஸார் முன்வந்துள்ளார்கள்.

இந்த நிலையில் மானிப்பாய் பொலிஸ் பகுதியில் கிராம உத்தியோகத்தர் பிரிவு தோறும் சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பதில் பொலிஸாரும் கிராம உத்தியோகத்தரும் ஈடுபட்டுள்ளார்கள். குழுக்களை அமைப்பதற்கான கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்ட போதும் தேவையான மக்கள் அங்கு சமுகமளிக்காததால் குழுக்களைத் தெரிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் இரு தடவைகள் கூட்டங்கள்வைக்கப்பட்ட போதும் போதியளவு மக்கள் சமூகமளிக்காதமை பொலிஸாருக்குசிரமங்களை ஏற்படுத்தியுள்ளது. (த115)

# மாதகல் ஜே/ 152 பிரிவில் மக்களின் வீடுகள் உடைப்பு

## தடுத்து நிறுத்தக் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஒக்.4

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மாதகல் பகுதி யில் மக்கள் விரைவில் மீள் குடியமர்த்தப்படவுள்ள ஜே/152 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சேதமடைந்த நிலையிலுள்ள வீடுகள் உடைக்கப்பட்டுக் கற்கள் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

இது குறித்து கவலையடைந்துள்ள மக்கள் இதைத் தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் முன்வரவேண்டுமென்று கோரியுள்ளார்கள்.

மாதகல் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் தற்பொழுது ஜே/ 150 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்தவர்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் தங்கள் இடங்களுக்குச் சென்று காணிகளைத் துப்புரவு செய்து தற்காலிகக் குடிசைகளை அமைத்து வருகின்றார்கள்.

இதேபோல் ஜே/152 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த மக்களும் மிக விரைவில் மீள்குடியமர்த்தப்படவுள்ளார்கள்.

இந்த நிலையில் சேதமடைந்த நிலையிலுள்ள இவர்களின் வீடுகள் இடிக்கப்பட்டுக் கற்கள் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாகக் கூறப்படுகிறது.

கடற்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வீடுகள் இடிக்கப்படுவது குறித்து கவலையடைந்துள்ள மக்கள் உயர் அதிகாரிகள் இதைத் தடுத்து நிறுத்த முன்வர வேண்டும் என்று கோரியுள்ளார்கள்.

இதேவேளை ஆலயங்கள், பாடசாலைகள், கூட்டுறவுச் சங்கம் உட்பட சுமார் 200 க்கும் அதிகமான வீடுகள் அங்கு இருப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (த-115)

# புலமைப்பரிசில் சித்தி பெற்ற மாணவரைக் கௌரவித்தது யாழ். படைத் தலைமையகம்




வலிவடக்கு, ஒக்.4

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் படைகளின் கட்டளைத் தலைமையக சமூக நலத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பொதுசனத் தொடர்பு அலுவலகத்தில் சிறுவர் தின நிகழ்வுகளும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை யில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்வில் புலமைப் பரிசில்பரீட்சையில்சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசில்களை விருந்தினர்கள் வழங்கினார்கள். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, பருத் தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்தநிகழ்வில்கலந்து கொண்ட யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் போது மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் வாடிய முகத்துடன் காணப்பட்டார்.

போரினால் பாதிக்கப்பட்ட கண்கள் அற்ற, கைகளும் பாதிக்கப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் சித்திய டைந்த மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் போதே இவருடைய முகத்தில் மாற்றத்தைக் காணக் கூடியதாக இருந்தது. இந்த நான்கு மாணவர்களுக்கும் தலா இரண்டரை லட்சம் ரூபா வீதம் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகத்தினால் வங்கியில் வைப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-7-86)

# சுகயீனம் காரணமாகவே சேதுராகவன் அமைச்சரின் காலில் விழவில்லையாம்

## மாநகர முதல்வரின் கண்டுபிடிப்பு இது

யாழ்ப்பாணம், ஒக்.4

உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தமை காரணமாகவே முல்லைத்தீவு மாணவன் சேதுராகவன் கல்வி அமைச்சரின் காலில் விழவில்லை. குனிந்தால் பாதிப்பு ஏற்படும் என்பதாலேயே அவர் அவ்வாறு செய்யவில்லை என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். சிவில் பாதுகாப்பு அலுவலகத்தில் நடைபெற்ற ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தலைமையில் நாடைபெற்ற இக் கூட்டத்தில் பேசிய முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,

பிள்ளை தங்களது கால்களிலோ அல்லது கோயிலிலோ விழுந்து வணங்குவது கிடையாது என அந்த மாணவனின் பெற்றோர் கூறியதாக சில பத்திரிகைகள் எழுதியிருந்தன. பத்திரிகைகள் தவறான, பொய்யான தகவல்களை வெளியிட்டு மக்களின் சிந்தனைகளில் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. அவ்வாறான தகவல்களை வெளியிடுவதை ஊடகங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சரியான தகவல்களை உறுதிப்படுத்தி வெளியிட வேண்டும்.

தமது பிள்ளை கோயிலில் கூட விழுந்து வணங்குவதில்லை எனத் தாங்கள் குறிப்பிடவில்லை எனச் சேதுராகவனின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

எமது கல்வித் தரம் இன்று உயர்ந்துள்ளதைக் கண்டு உலகம் வியக்கிறது. அது மேன்மேலும் உயர வேண்டும்.

இதனைக் குழப்பாது எமது கல்வித் தரத்தை மேம்படுத்த உதவ வேண்டும் - என்றார் முதல்வர். (த-7)

# ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவதற்கான முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவில் முறைகேடு

## பாதிக்கப்பட்டவர்கள் கடும் விசனம்

யாழ்ப்பாணம், ஒக்.4

ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவதற்காக யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவின்போது முறைகேடு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஊக்குவிப்புக் கொடுப்பனவு பெறுவதற்கு தகைமையுடைய முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அந்தக் கொடுப்பனவு கிடைக்கவில்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வலி.தென்மேற்கில் 23 வருடங்களாக முன்பள்ளி ஆசிரியராகக் கடமையாற்றிய செல்வி சிவகுரு சிவபாக்கியம் என்பவர் தனக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

நவாலி இந்து சமய விருத்திச் சங்க முன்பள்ளியில் தொடர்ச்சியாக எந்த விதமான ஊதியமும் இல்லாமல் தான் சேவையாற்றி வருவதாக அவர் கூறினார்.

கல்வித் தகைமையும் பள்ளி ஆசிரியருக்கான பயிற்சியையும் பெற்றுத் தேவையான தகைமையைத் தான் கொண்டிருப்பதாகவும் சிவகுரு சிவபாக்கியம் தெரிவித்தார்.

ஊக்குவிப்புக் கொடுப்பனவு பெறுவதற்கான தகைமைகளைக் கொண்டிருக்கும் தான் வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளரால் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கலில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமை தொடர்பாகக் கல்வி அமைச்சின் வடக்கு மாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜெயா தம்பையாவிடம் கேட்ட போது:

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவதற்காக அவர்களைத் தெரிவு செய்யும் போது சில தகுதிகள் மற்றும் தகைமைகள் எதிர்பார்க்கப்பட்டன.

* கல்விப் பொது தராதர, சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
* அவர் கற்பிக்கும் முன்பள்ளி தனியார் நடத்தும் முன்பள்ளியாக இருக்கக் கூடாது.
* தொடர்ச்சியாக ஐந்து வருடங்களுக்கு மேல் ஆசிரியராகக் கடமையாற்றியிருக்க வேண்டும்.
* 5 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவான மாதாந்த சம்பளம் பெற்றிருக்க வேண்டும்.
* 60 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

இவ்வாறான தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள் ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறான தகைமைகளைச் செல்வி சிவகுரு சிவபாக்கியம் கொண்டிருந்தால் அவரும் உள்வாங்கப்பட வேண்டியவரே.- என்றார். (த-14- 302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'ஸ்திரிமேளா (பாதிக்கப் பட்ட பெண்கள் சங்கம்) அமைப்புடன் இணைந்து யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்திய கண்காட்சி மற்றும் இணைக் கருத்தரங்குத் தொடர் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

நிலையப் பணிப்பாளர்கள் திருமதி விசாக்கா தர்மராசா, திருமதி சரோஜா சிவசந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், ஆளுநரின் பிரதிப் பிரதம செயலாளர் இராசநாயகம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிரானி டானியல், சுமித்திர ரட்ணநாயக்கா, முன்னாள் பெண்கள் விவகார அமைச்சர் அமரரத்நாயக்க ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கின்றனர். (311)

## சுதந்திர தின நிகழ்வு அடுத்த வருடம் அனுராதபுரத்தில்

இலங்கையின் சுதந்திர தின நிகழ்வு அடுத்தவருடம் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள சிறி அம்புத்தாவ ஜெயந்தி மாவத்தையில் இடம்பெறவுள்ளது.

தேசத்தின் மகுடம் கண்காட்சி அடுத்த ஆண்டு (2012) அனுராதபுரம் மாவட்டம் ஓயாமடு பிரதேசத்தில் இடம்பெறவுள்ளது. இதனையடுத்தே சுதந்திரதின நிகழ்வு அடுத்த வருடம் பெப்ரவரி 4 ஆம் திகதி அனுராதபுரம் மாவட்டத்தில் நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்மொழிந்துள்ளார். இந்தத் திட்டத்தின் பிரகாரம் பொது நிர் வாக அமைச்சர் டபிள்யூடி.ஜெனி வரட்ணா இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும் ஆலோசனை களையும் பெற்றுள்ளார். (வ-302)

## என்றும் நன்றியுடன்

புலமைப் பரிசில் பரீட்சையில் 179 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மகேந்திரராஜ் அமுதவிழி ஆகிய எனக்கு கல்வி கற்பித்த ஆசிரியர் களுக்கும், என்றும் வழிகாட்டியாக இருக்கும் எனது தந்தைக்கும், போரினால் பாதிக்கப்பட்டு மனமுடைந்த வேளையில் ஆக்கமும் ஊக்கமும் தந்து ஒத்துழைப்புச் செய்த டாக்டர் மனோமோகன் பெரியப்பா குடும்பத்தினருக்கும், எனது தாயாருக்கும், மற்றும் உறவினருக்கும், என்னைப் பாராட்டி வாழ்த்திய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் ஆரம்ப வழிகாட்டியாக இருந்த பெரியமாமாவையும் அவர் குடும்பத்தினரையும் நன்றியுடன் நினைவு கூர்ந்து கொள்கின்றேன்.



கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
மகேந்திரராஜ் அமுதவிழி.




## பாழடைந்த கிணற்றைச் சுத்தம்செய்த குடும்பஸ்தர் விஷவாயுதாக்கி மரணம்

நீண்டகாலமாகக் கைவிடப்பட்டிருந்த பாழடைந்த கிணற்றைத் துப்புரவு செய்வதற்காக அதற்குள் இறங்கிய நால்வர் விஷ வாயுத் தாக்கத்தால் சுயநினைவை இழந்த நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிகிச்சை பயனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளார். ஏனைய மூவரும் சுயநினைவிழந்து நிலையில் உள்ளனர் எனவும் நீர்கொழும்பு கொச்சிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

கடந்த சனிக்கிழமை மேற்படி கிணற்றைச் சுத்தம் செய்ய மரணமடைந்த நபர் முதலில் இறங்கியுள்ளார். சில நிமிடங்களின் பின் அவர் மூச்சு விட சிரமமாக உள்ளதாகக் கூக்குரல் எழுப்பியதையடுத்து வெளியில் நின்ற மூவரும் கிணற்றுக்குள் இறங்கியுள்ளனர்.

அவர்களும் சில நிமிடங்களில் மூர்ச்சையானார்கள். சம்பவத்தைக் கேள்விப்பட்ட நீர்கொழும்பு, கொச்சிக்கடை பொலிஸார் விரைந்து சென்று 60-70 அடி ஆழமான கிணற்றுக்குள் ஒக்சிஜன் சிலிண்டரொன்றை இறக்கி முதலுதவி செய்தபின் நால்வரையும் மீட்டு நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கு ஒருவர் மரணமானதுடன் ஏனைய மூவரும் படிப்படியாகதேறி வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொச்சிக்கடை பொலிஸார் சரியான சமயத்தில் தலையிட்டதாலேயே ஏனைய மூவரின் உயிரையும் காப்பாற்ற முடிந்ததாக மேற்படி பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

கொச்சிக்கடை பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி எல்.பீ. விஜேசூரியவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (வ-5)

## இந்தியா விடுவித்த மீனவர் திரும்பினர்

இந்திய கடற்பரப்பில் அறியாமல் நுழைந்த இலங்கை மீனவர்கள் 34 பேர் இலங்கை கடற்படையினரின் உதவியுடன் கரைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்திய கடற்படையினரின் விஸ்வாட் கப்பலில் இருந்த குறித்த 34 இலங்கை மீனவர்களையும் சர்வதேச கடல் எல்லையில் வைத்து இலங்கை கடற்படையினர் பொறுப்பேற்றுள்ளனர்.

அதன் பின்னர் கடற்படையினர் உதார என்ற கப்பல் மூலம் 34 இலங்கை மீனவர்களை காங்கேசன்துறை கரைக்கு நேற்று முன்தினம் அழைத்து வந்துள்ளனர். அழைத்து வரப்பட்ட மீனவர்களை மீன்பிடித் துறை அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கு முன்னர் கடற்படையினர் அவர்களுக்கு உணவு மற்றும் மருந்து வசதிகளை வழங்கியதாக கடற்படை அலுவலகம் தெரிவித்துள்ளது.

## நாடு தழுவிய ரீதியில் விவசாயிகளிடம் நெல் கொள்வனவு

கொழும்பு, ஒக்.4

நாடு தழுவிய ரீதியில் விவசாயிகளிடம் இருந்து நெல்கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தை முன்னகர்த்துவதற்காக இலங்கை மத்திய வங்கி 5.5 பில்லியன் ரூபாவை அரசுக்குக் கடனாக வழங்கியுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபையும் நாடு முழுவதிலும் உள்ள பிரதேச செயலகங்களும் இணைந்து இதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் இருந்து விவரம் பெறப்படவுள்ளது. (வ-302)

## பின்னவல விலங்குகள் சரணாலய திறப்புவிழா அடுத்த வருடத்தில்

புனரமைக்கப்பட்டுள்ள பின்னவல விலங்குகள் சரணாலயம் அடுத்தவருடம் ஆண்டு ஏப்ரல் மாதம் திறந்து வைக்கப்படவுள்ளதாக இலங்கை உயிரியல் பூங்கா ஆணையாளர் நாயகம் பாஸ்வரா சேனான்க குணரத்ன தெரிவித்துள்ளார்.

பின்னவல விலங்குகள் சரணாலயத்தின் முதல் கட்ட புனரமைப்புப் பணிகள் 48 ஏக்கர் நிலப்பரப்பில் 60 மில்லியன் ரூபா செலவில் நிறைவு பெற்றுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள பகுதியில் விலங்குகள், பறவைகள் மற்றும் நோய்த் தொற்று காணப்படும் விலங்குகள் மாத்திரமே அனுமதிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையின் சிறுத்தைகளை காண்பிக்கும் விசேட பிரிவு ஒன்றும் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பின்னவல விலங்குகள் சரணாலயத்தின் இரண்டாம் கட்ட புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பின்னவல சரணாலயத்தின் 100 ஏக்கர் நிலப்பரப்பும் 250 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது- என்றார் அவர். (வ)

வட இலங்கை சுதேச வைத்திய சபை
උත්තර ලංකා ස්වදේශ වෛද්‍ය සභාව
North Ceylon Board of Indigenous Medicine

### லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
### ලංකා සිද්ධ ආයුර්වේද වෛද්‍ය විද්‍යාලය
### Lanka Siddha Ayurvedic Medical College



வட இலங்கை சுதேச வைத்திய சபையினால் நிர்வகிக்கப்படும் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் 5 வருட கால சித்த ஆயுள்வேத வைத்திய டிப்ளோமா பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்து ஆயுள்வேத திணைக்களத்தின் தலைமைச் செயலகத்தின் பரீட்சைப் பகுதியினால் நடத்தப்பட்ட இறுதிப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான ஆயுள்வேத ஆணையாளரினால் வழங்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களை கொழும்பு தேசிய வைத்திய அமைச்சு அலுவலகத்தில் அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க அவர்களினால் வட இலங்கை சுதேச வைத்திய சபையின் பணிப்பாளர்களான Dr. சு. சிறீவிக்னேஸ்வரா, பேராசிரியர் ந. யோகராஜன், Dr.ஜெ.ஜெயலன் ஆகியோரிடம் உத்தியோகபூர்வமாக கை ளிக்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதன் முதலாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சித்த ஆயுள்வேத வைத்திய டிப்ளோமா பட்டம் என்பது குறிப்பிடதத்க்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 நாடுகளுடனான கூட்டுப் போர்ப் பயிற்சியில் இலங்கை ராணுவத்தைக் கை கழுவியது இந்தியா!

கொழும்பு,ஒக்.4

இந்திய இராணுவம் 16 நட்பு நாடுகளின் படைகளுடன் இணைந்து மேற்கொள்ளவுள்ள போர்ப்பயிற்சியில் பங்கேற்க இலங்கை இராணுவத்துக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 1.13 மில்லியன் படையினரைக் கொண்ட இந்திய இராணுவம் இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் நட்பு நாடுகளுடன் இணைந்து போர்ப்பயிற்சியை மேற்கொள்ளவுள்ளது.

நட்பு நாடுகளின் இராணுவங்களுக்கு இடையிலான உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்தக் கூட்டுப் போர்ப்பயிற்சி மேற்கொள்ளப்படவுள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, மொங்கோலியா, கசாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான், பங்களாதேஷ், மியான்மர், நேபாளம், மாலைதீவு, சிசெல்ஸ், சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய 16 நாடுகளின் இராணுவங்கள் இந்தக் கூட்டுப் போர்ப்பயிற்சியில் பங்கேற்கவுள்ளதாக இந்திய இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அறுபதாண்டு கால போர் அனுபவத்தைக் கொண்டுள்ள தமது இராணுவத்துடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொள்வதற்கு ஏனைய நாடுகளின் இராணுவங்கள் ஆர்வமாக இருப்பதாகவும், குறிப்பாக கிராமப்புற, நகரப்புறங்களில் கிளர்ச்சி மற்றும், தீவிரவாத முறியடிப்பு நடவடிக்கைகளை மையப்படுத்தி இந்தப் போர்ப் பயிற்சிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்திய இராணுவத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்தியாவின் அயல் நாடுகளான பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு, மியான்மர் போன்றவற்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதும் இலங்கைக்கு மட்டும் இந்த அழைப்பு விடுக்கப்படவில்லை.

அண்மையில் திருகோணமலைக் கடற்பரப்பில் இலங்கை கடற்படையுடன் இணைந்து இந்தியக்கடற்படை போர்ப்பயிற்சி ஒன்றை மேற்கொண்டிருந்தது. ஆனால் இந்திய இராணுவம், இலங்கை இராணுவத்துக்கு கூட்டுப் போர்ப்பயிற்சியில் பங்கேற்க அழைப்பு விடுக்காதது சந்தேகங்களை எழுப்பியுள்ளது. இலங்கை இராணுவத்தை மையப்படுத்தியே போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதால், சர்ச்சைகளை தவிர்ப்பதற்காக இந்திய இராணுவம் இலங்கையைக் கழற்றி விட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)



இலங்கை தொண்டர் கடற்படையில் பயிற்சி பெற்ற படையினர் தங்களது பயிற்சிகளை நிறைவேற்றி வெளியேறும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை இலங்கை தொண்டர் கடற்படைத் தளத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் டீ.டபிள்யூ.ஏ.எஸ்.திஸாநாயக்க, தொண்டர் கடற்படையின் கட்டளையிடும் தளபதி ரியர் அட்மிரல் எச்.எம்.பீ.வீரசேகர ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மீனவர்களுக்கு கடற்படை உதவி

கொழும்பு,ஒக.4

இந்தியாவில் விடுதலை செய்யப்பட்டு நாடு திரும்பிய இலங்கை மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையினர் உதவி வழங்கியுள்ளனர். இந்த மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகள் இலங்கைக் கடற்படை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையே காணப்படும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரமே இந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவில் விடுதலை செய்யப்பட்டு நாடு திரும்பிய இலங்கை மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையினர் உதவி வழங்கியுள்ளனர்.

இந்த மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகள் இலங்கைக் கடற்படை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையே காணப்படும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரமே குறித்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.நா. அமைதி காக்கும் பணிக்காக 4,500 படையினர் அனுப்பி வைப்பு

## இராணுவத்தளபதி கூறுகிறார்

கொழும்பு,ஒக்.4

ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் பணிகளுக்காக 4,500 இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட உள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஹெய்ட்டி மற்றும் லெபனான் ஆகிய நாடுகளில் இலங்கை இராணுப் படையினர் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடுவார்கள்.

அமைதி காக்கும் பணிகளுக்காக தெரிவு செய்யபட்ட படை வீரர்கள் ஏற்கனவே தயார் நிலையில் இருக்கின்றனர்- என்றார். (ச)

# சட்டத்தரணியின் வக்கிர புத்தி

கொழும்பு,ஒக்.4

பெண்ணொருவரைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்ததுடன், அவரிடமிருந்த தங்கச் சங்கிலியொன்றையும் பறித்தார் என்ற குற்றச்சாட்டில் சட்டத்தரணியொருவரை மிரிஹான பொலிஸார் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸார் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை புறக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் புறக்கோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேகநபரும் தனது மூக்கிலிருந்து இரத்தம் வடிகிறது என்று தெரிவித்ததையடுத்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# தேர்தல் விதிகளை மீறிய 130 பேர்கைது

கொழும்பு,ஒக்.4

தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் 130 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலுடன் தொடர்புடைய 98 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இவற்றில் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பான 60 முறைப்பாடுகளும் அடங்குகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டியிருந்த 20 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தல் வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளாதக தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. (ச)

# ஜனநாயக உரிமைகளில் தலையிடும் வகையில் செயற்படுகின்றார் கோத்தபாய ராஜபக்ஷ

## கண்டிக்கிறார் முஸம்மில்

கொழும்பு,ஒக்.4

கொழும்பு வாக்காளர்களின் ஜனநாயக உரிமைகளில் தலையிடும் வகையில் பகிரங்கக் கருத்து வெளியிடுகின்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. இதுவும் தேர்தல் விதிமுறைகளுக்கு எதிரான ஓர் அதிகாரத் துஷ்பிரயோக நடவடிக்கையே.

- இவ்வாறு சீறியிருக்கிறார் கொழும்பு மாநகர சபைக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மேயர் வேட்பாளராகப் போட்டியிடும் எம்.கே.எம்.முஸம்மில்.

பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து செயற்படக் கூடிய ஒருவரையே கொழும்பு மேயராக மக்கள் தெரிவுசெய்ய வேண்டும் என்ற சாரப்பட ஊடகங்களுக்கு கோத்தபாய ராஜபக்ஷ கருத்து வெளியிட்டிருக்கின்றமை குறித்து ஊடகவியலாளர்களுக்குத் தெளிவுபடுத்திய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விவகாரம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தபாய ராஜபக்ஷ ஜனநாயக முறைப்படி தெரிவுசெய்யப்பட்டதாகக் கருதப்படும் ஓர் அரசின் ஊழியர். அவர் அரச ஊழியரன்றி அரசியல்வாதியோ அல்லது அரசியல் தலைவரோ அல்லர். மக்கள் தமது ஜனநாயக உரிமைகளைப் பிரயோகிக்கும் தேர்தலில் ஓர் அரச ஊழியராக இருந்துகொண்டு கட்சிப் பிரசாரமோ அல்லது அரசியலோ செய்வதற்கு அவருக்கு இடமில்லை. அப்படிச் செய்வது தேர்தல் விதிமுறைகளுக்கு எதிரான அதிகாரத் துஷ்பிரயோகமாகும்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசுடன் உள்ளூராட்சி நிர்வாகங்களுடன் இணைந்து செயற்படுவதுதான் அரச ஊழியர்களினதும் அரசு கட்டமைப்புகளினதும் பணியே தவிர அரசுக் கட்டமைப்பு ஒன்றுக்கோ அல்லது வழிநடத்திச் செல்லும் அமைச்சு செயலாளர் ஒருவருக்கோ இசைந்து போகக் கூடிய ஜனநாயகத் தலைமை தான் உருவாக்கப்பட வேண்டும் என்று கட்டளையிடுவது அல்ல.

ஏற்கனவே நாட்டின் ஜனநாயகத்தின் பெயரால் குடும்ப சர்வாதிகாரம் சூழ்ந்துள்ளது. அந்தக் கெடுபிடி ஆபத்துக் குறித்து மக்கள் குறிப்பாக சிறுபான்மையினரான தமிழ்பேசும் மக்கள் நன்கு அறிந்து உணர்ந்துள்ளனர்.

தமது பாதுகாப்பு அமைச்சுக்கு தலையசைக்கக் கூடிய, கட்டுப்பட்டுச் செயற்படக் கூடிய, மாநகர நிர்வாகம் தான் உருவாக்கப்பட வேண்டும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வற்புறுத்துவது நாட்டின் இராணுவ ஆட்சியை ஸ்திரப்படுத்தி, நிலைப்படுத்தும் எத்தனமாகும்.

மாறாக மக்களால் தெரிவு செய்யப்படும், மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும், அரசுக்கும்உள்ளூராட்சிக்கட்டமைப்புக்கும் இசைந்து, இணைந்து செயற்படக் கூடியனவாக பாதுகாப்பு அமைச்சு போன்ற அரச பிரிவுகள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். அதுதான் ஜனநாயக விழுமியங்களை மதிக்கும் பிரதான அடிப்படை அம்சமாகும்.



எனவே பாதுகாப்பு அமைச்சுக்கு இசைவான மாநகர நிர்வாகத்தை ஏற்படுத்துங்கள் என பொது மக்களிடம் கோரிக்கை விடுப்பதைத் தவிர்த்து, மக்களால் தெரிவுசெய்யப்படும், அவர்களின் விருப்பத்துடன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும், மாநகர நிர்வாகத்துடன் இசைந்து செயற்படக் கூடிய வகையில் உங்கள் தலைமையில் இயங்கும் பாதுகாப்பு அமைச்சை மாற்றிக் கொள்ளுங்கள். இதுதான் அரசமைப்பும், ஜனநாயக நீதி முறைமைகளும் காட்டும் பண்பாகும்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி பாரதிபுரம் கிராம மக்கள் அடிப்படை வசதிகளின்றி வாழும் அவலம்

கிளிநொச்சி, ஒக்.4

கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி வாழ்ந்து வருவதாக கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்தில் சுமார் 772 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்து வசித்து வருகின்றனர். இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து ஒன்றரை ஆண்டுகளைக்கடந்தபோதும் 589 குடும்பங்கள் வீடுகள் இல்லாத நிலையில் தற்காலிக வீடுகளிலும் தறப் பாள் குடிசைகளிலும் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட 63 குடும்பங்கள் சொந்தக் காணிகள் இல்லாத நிலையில் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் அவர்களது காணிகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் இவ்வாறு மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் தமக்கான அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் வாழ்ந்து வருகின்றன.

பாரதிபுரம் மத்தியில் உள்ள 53 குடும்பங்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. இந்தக் குடும்பங்களுக்கான குடிதண்ணீரை விநியோகித்துதவுமாறு பிரதேச சபையிடம் கோரியுள்ளதாகக் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.'

எனவே மீளக்குடியமர்ந்து ஒன்றரை வருடத்தைத் தாண்டியுள்ள போதும் 63 குடும்பங்கள் காணிகள் இன்றியும் 589 குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இன்றியும் வாழ்ந்து வருவதாகவும் உரிய அதிகாரிகள் கூடிய கவனமெடுத்துப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறும் பிரதேசமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக கரைச்சிப் பிரதேச செயலரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, யூனியன் குளத்தில் காணி இல்லாதவர்களுக்கு அரை ஏக்கர் காணியுடன் 100 வீடுகள் அமைத்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் குடிதண்ணீரை வழங்குவதற்கு கரைச்சிப் பிரதேச சபைக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதற்கென நீர்த்தாங்கிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.அத்துடன் கடும் வரட்சி காரணமாக நீர் நிலைகள் வற்றியதன் காரணமாகவே தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறிய அவர் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படும்போது காணியுள்ள அப்பகுதி மக்களும் உள்ளடக்கப்படுவார்கள்.-என்றார். (க-6)

# தமக்குரிய வீடுகளை அமைக்க தவறியுள்ள 134 பயனாளிகள்

கிளிநொச்சி, ஒக்.4

கிளிநொச்சி மாவட்டத்தில் நேர்ப் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் 134 பேர் தமக்குரிய வீடுகளை அமைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத் தில் நேர்ப் திட்டத்தின் கீழ் புதிய வீடுகளை அமைப்பதற்கும் பகுதி திருத்தத்துக்கும் என 5 ஆயிரத்து 506 பயனாளிகள் கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இதில் 5 ஆயிரத்து 414 புதிய வீடுகளுக்கும் 92 பகுதி திருத்த வீடுகளுக்கும் என 5 ஆயிரத்து 506 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

கண்டாவளைப் பிரதேசத்தில் ஆயிரத்து 273 புதிய வீடுகளும் 25 பகுதி திருத்த வீடுகளும், கரைச்சிப் பிரதேசத்தில் 3ஆயிரத்து 12 புதிய வீடுகளும் 45 பகுதி திருத்த வீடுகளும், பச்சிலைப்பள்ளிப் பிரதேசத் தில் 518 புதிய வீடுகளும், எட்டு பகுதி திருத்த வீடுகளும் பூநகரிப் பிரதேசத்தில் 611 புதிய வீடுகளும், 14 பகுதி திருத்த வீடுகளும் எனப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வீடமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதில் கண்டாவளையில் 39 பயனாளிகளும் கரைச்சியில் 40 பயனாளிகளும் பச்சிலைப்பள்ளியில் 27 பயனாளிகளும் பூநகரியில் 28பயனாளிகளும் என 134 பயனாளிகள் வீடுகளை அமைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மேற்படி வீடுகளை அமைக்கத் தவறிய 134 பயனாளிகளுக்கும் எந்தத் திட்டத்தின் கீழும் வீடுகளை வழங்கக் கூடாது என மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். மேற்படி வீடமைப்புப் பணி களுக்கு உலக வங்கி 1719.83 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் 1602.25 மில்லியன் ரூபா நிதி பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. (க-6)

# ஆரம்பப் பிரிவு போட்டிகள்

கிளிநொச்சி, ஒக்.4

கிளிநொச்சி வலய மட்ட ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான விரைவு கணிதப் போட்டி, வாய்ப்பாடு போட்டி, திருக்குறள் மனனப்போட்டி என்பன எதிர்வரும் 9 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய கோட்டமட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

விரைவு கணிதப் போட்டியில் கோட்டமட்டப் போட்டியில் முதல் 5 இடங்களைப் பெற்ற மாணவர்களும் மற்றைய போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களும் பங்கு கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-405)

# சிவில் பாதுகாப்புக்குழு உறுப்பினர்களை விழிப்புணர்வு செய்யும் நிகழ்வு மன்னாரில்

மன்னார்,ஒக்.4

மன்னார் மற்றும் வவுனியா பிரதிப்பொலிஸ்மா அதிபர் கீர்த்தி த சில்வா தலைமையில் மன்னார் மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட சிவில் பாதுகாப்புக்குழுக்களை வலுப்படுத்தும் முகமாக தெரிவு செய்யப்பட்ட சிவில் பாதுகாப்புக்குழு உறுப்பினர்களை விழிப்புணர்வு செய்யும் நிகழ்வொன்று கடந்த சனிக்கிழமை காலை மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியில் இடம்பெற்றது.






இதன்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள 10 பொலிஸ் நிலையம் மற்றும் 07 துணைப் பொலிஸ் நிலையப்பிரிவுகளில் இருந்து 154 கிராம அலுவலர்கள் பிரிவுகளினூடாகத் தெரிவு செய்யப்பட்ட சுமார் 700 இற்கும் மேற்பட்ட சிவில் பாதுகாப்பு உறுப்பினர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

ஒரு கிராம அலுவலகர் பிரிவில் 25 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் குறித்த நிகழ்வில் ஒரு கிராம அலுவலகர் பிரிவில் இருந்து 5 பேர் மட்டுமே கலந்து கொண்டனர்.

மேற்படி நிகழ்வானது சிவில் பாதுகாப்பை மேன்மேலும் பலப்படுத்தும் முகமாகவே இடம்பெற்றதாக மன்னார் மாவட்ட பொலிஸ் அதிகாரி லக்சிறி விஜயசேன தெரிவித்தார். மேற்படி நிகழ்வில் மன்னார் மற்றும் வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் கீர்த்தி த சில்வா,மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை, மதத்தலைவர்கள், நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள் பொலிஸ் அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (க-604)

# தாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருவதாக வன்னித் தொண்டர் ஆசிரியர் பெரும் விசனம்

கிளிநொச்சி, ஒக்.4

வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்களை ஏமாற்றித் தங்களின் வாழ்க்கையுடன் விளையாடிவரும் ஆட்சியாளர்களுக்கு மனிதாபிமான, மனிதநேயப் பண்புகள் இல்லையா? எனக் கேள்வி எழுப்புகிறார்கள் பாதிக்கப்பட்ட வன்னித் தொண்டர் ஆசிரியர்கள்.

வன்னிப் பகுதியில்தாம் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக எவ்வித ஊதியமும் இன்றிப் பல இன்னல்களுக்கு மத்தியிலும் சேவையாற்றி வருவதாகவும் தமக்குக் கல்வித் தகைமைகள் உட்பட அனைத்துத் தகைமைகள் இருந்த போதிலும் இன்று வரை நிரந்தர நியமனம் வழங்காது புறக்கணித்துள்ளதாகவும் ஆனாலும் தம்மைவிட சேவைக் காலங்களில குறைந்த தொண்டர் ஆசிரியர்களுக்குக் கூட வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் கூறுகின்றனர். யுத்தத்தால் எல்லாவகைகளிலும் பாதிக்கப்பட்டுத் தறப்பாள் கூடாரங்களிலும், தகரக் கொட்டகைகளிலும் காணப்படும் தம்மை மட்டும் புறக்கணித்து ஒதுக்கியுள்ளமை எந்தவகையில் நியாயம் எனவும் இவர்கள் கூறி வேதனைப்படுகின்றார்கள்.

தமது அவலநிலை தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் போன்றோருக்குக் கோரிக்கைகள் அடங்கிய உருக்கமான மனுக்கள் மூலம் பலமுறை தெரியப்படுத்தியும் இன்றுவரை தமது நியமனத்திற்கான எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளாதுள்ளது தமக்கு மென்மேலும் விரக்தியையும் கவலையையும் ஏற்படுத்துவதாக வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்கள் கூறி வருந்துகிறார்கள். ஆனாலும் காலத்துக்கக் காலம் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வந்துள்ளதாகவும் அத னைத் தேவ வாக்காக நம்பி, நம்பி இன்று வாழ வழியற்று வருந்தி நிற்பதாகவும் தொண்டர் ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

இந்த வகையில் கடந்த மே மாதம் வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு ஒரு நேர்முகத் தேர்வு நடைபெற்றது. அதில் ''கௌரவ ஆளுநரின் முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவதற்காக தொண்டர் ஆசிரியர்களின் தகைமைகளைப் பரிசீலனை செய்தல்-2011" என்ற தலைப்பின் கீழ் வன்னிப் பகுதியில் உள்ள வலயக்கல்வி அலுவலகங்களில் நேர்முகத் தேர்வு நடைபெற்றது. இந்த நேர்முகத் தேர்வு வடமாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகளால் நடத்தப்பட்டது. இதில் தொண்டர் ஆசிரியர்களின் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், சேவையாற்றுவதற்குரிய அனுமதிக் கடிதம், கற்பிக்கும் வகுப்புகளில் அடைவு மட்டத்தை உயர்த்தியமையை உறுதிப்படுத்தும் கடிதம், தொண்டர் ஆசிரியர்கள் கற்பிக்கும்போது ஒவ்வொரு ஆண்டுக்கும் உரிய பாட நேரசூசி, கடமையை உறுதிப்படுத்தும் கடிதம் போன்ற 10 வகையான ஆவணங்கள் கோரப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் தாம் சமர்ப்பித்து மேற்படி நேர்முகத் தேர்வில் தோற்றியிருந்ததாகவும் ஆனால் நேர்முகத் தேர்வு நடைபெற்று ஐந்து மாதங்கள் ஆகியும் இன்றுவரை ஆளுநரின் முகாமைத்துவத் திட்டத் தின் கீழ் உதவு தொகையோ எதுவுமே கிடைக்கவில்லை எனவும் இப்படியான செயல்களால் தாம் எதிர்பார்த்திருந்து ஏமாந்து போனவர்களாகத்தான் ஆகிவருவதாகவும் வேதனையுடன் கூறுகின்றார்கள்.

தாம் 10, 13 வருடங்கள் தொண்டர் ஆசிரியராகவேதான் சேவையாற்றிக் கழித்துள்ளதாகவும் இதனால் ஏனைய தொழில்களைத் தேடமுடியவில்லை எனவும் கூறும் இவர்கள் தமக்கான ஆசிரியர் நியமனத்தை விரைந்து வழங்கி இருளடைந்துள்ள தமது வாழ்க்கைக்கு ஒளியேற்றுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன ஆகியோரைமிகவும்பணிவாகவேண்டுவதாக வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்கள் கேட்டுக்கொள்கின்றார்கள். (க-426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளில்

# உதவிகள் வழங்கப்படவில்லையென அரச ஊழியர் குற்றச்சாட்டு; உரிய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்

## கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பதில்

அளம்பில், ஒக.4

போரின் அகோரத்தால் வீடிழந்து, உடைமைகள் இழந்து, உடல் அங்கவீனமுற்றுள்ள தமக்கு இது வரையில் எவ்வித இழப்பீடுகளும் வழங்கப்படவில்லையென முல்லைத்தீவு மாவட்டத்தில் சில பிரதேசங்களில் உள்ள அரச ஊழியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள அளம்பில், குமுழமுனைப் பிரதேச அரச ஊழியர்களே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

செம்மலை, உடுப்புக்குளம், மல்லாவி, கனகராயன்குளம் போன்ற பல பிரதேசங்களுக்கு எவ்வித பேதமுமின்றி வீட்டுத் திட்டம், பகுதியழிவுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் தமக்கு எதுவுமே வழங்கப்படாது ''அரச ஊழியர்கள்'' என்று காரணம் தெரிவித்து உதவிகள் மறுக்கப்படுவதாக அவர்கள் உள்ளம் குமுறுகின்றனர்.

தாம் வேலைத்தளம் செல்லும் போது வீட்டில் எதுவித பாதுகாப்பும் இல்லாமலுள்ளது.

குழந்தைகளுடன் தறப்பாளில் இருக்க இயலாத காரணத்தால் தமது வேதனத்தில் கடன் பெற்று வீட்டைத் திருத்தியவர்களுக்கும் எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லையென்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

போர்ச்சூழலில் எல்லோரையும் போன்றே தாமும் தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்ததாகவும் வீசப்பட்ட செல்லோ வெடிகுண்டோ அரச ஊழியர்கள் என்று விட்டுவிட்டுச் செல்லவில்லை யென்றும் இத்தாக்குதல்களில் பல அரச ஊழியர்கள் தம் உயிரையும் இழந்து தம் அங்கங்களையும் இழந்து தற்போதும் இன்னல்களை அனுபவித்து வருவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

1990 இல் இருந்து காலம் காலமாக இடம் பெயர்ந்து வாழ்ந்த எமக்கு, அரச ஊழியர் என்ற பாகுபாட்டில் வீட்டுத் திட்டம் இல்லையென்பது எவ்விதத்தில் நியாயமாகும் என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

சாதாரணமாக ஒரு கூலித் தொழிலாளி தம் ஒருநாள் சம்பள விகிதத்தைவிட கூடுதலாகப் பெறுகின்றார். அப்படிப் பார்க்கும் போது தமக்கு ஏன் இந்தப் பேதம்? அழிவடைந்த வீட்டுக்கு இழப்பீடாய் ஒரு வீட்டைக் கேட்பது குற்றமா? என அவர்கள் வேதனையுடன் கோரி நிற்கின்றனர்.

தமது அளம்பில், குமுழமுனைப் பிரதேசங்களிலுள்ள அரச ஊழியர்களின் வீடுகள் மட்டுமே ஓலைக் குடிசைகளாகவும் தறப்பாள்களுடனும் காட்சி தருவதாகவும் அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பிரதேசங்களில் போரால் பாதிப்புற்றுள்ள அரச ஊழியர்கள் பெறுகின்ற சலுகைகளைத் தாம் பெற்றுக்கொள்ள முடியவில்லையெனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதில் கொடுமை என்னவெனில் தமது பத்து மாத சம்பள முற்கொடுப்பனவுகளைக் கூட தமது கல்வி வலயம் வழங்கவில்லையென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு துன்புறும் தமக்கு, வீட்டுத்திட்டம் மற்றும் பகுதி அழிவுக் கொடுப்பனவுகள் போன்ற இழப்பீட்டுக் கொடுப்பனவுகளைத் தந்துதவி தம்மையும் மனிதர்களாய்ப் பார்க்குமாறு அவர்கள் கண்ணீருடன் கோரி நிற்கின்றனர்.

இது தொடர்பாக மேலதிக விளக்கங்களைப் பெறுவதற்காக கரைதுறைப் பற்று உதவி அரச அதிபருடன் தொடர்பு கொண்டபோது;

முல்லைத்தீவு மாவட்டத்திலே அரச ஊழியர்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படுவதில்லை என்று கூறினார். மேலும் ஆரம்பத்தில் யூ.என். கபிராற் நிறுவனம் அரச ஊழியர்களின் வீடுகளையும் புனரமைத்து வழங்கியது. பின்னர் அத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் போரினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு மற்றும் சொத்துக்கள் இழந்த அரச ஊழியர்கள் அதற்கான நட்டவீடுகளைப் பெறுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் உள்ளன. உரிய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் அரச ஊழியர்கள் வீடுகளை அமைப்பதற்கு வங்கிகள் முன்னுரிமை அடிப்படையில் கடன்களை வழங்கி வருகின்றன என்று மேலும் கூறினார். (க-555)

# கிருஷ்ணா குழுவினரின் இசைக் கச்சேரி

வவுனியா, ஒக்.4

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகமும் இணைந்து நடத்தும் இந்தியாவின் கர்நாடக இசைத் துறையில் முன்னணியில் திகழும் வித்துவான் ரி.எம்.கிருஷ்ணா குழுவினரின் கர்நாடக இசைக் கச்சேரி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

வடமாகாண கல்வி கலாசார அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வர்த்தக தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் பிரதம விருந்தினராகவும் வவுனியா அரச அதிபர் திருமதி வி.எஸ்.எம்.சாள்ஸ் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் இசை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (க-311)

# கிளிநொச்சி பாடசாலைகள் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கான சுற்றுலா

கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயம்,இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்கள் இணைந்து கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர். கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பஸ் வண்டியில் தமது சுற்றுலாப் பயணத்தை ஆரம்பித்த இவர்கள் பல இடங்களைப் பார்வையிட்டுள்ளனர்.

தரம் 5 இல் புலமைப் பரிசில் பரீட்சை எழுதிய இவர்களின் மனங்களை மகிழ்வூட்டவும், சமயத்தலங்களின் பாரம்பரியங்களை அறிந்து கொள்வதற்காகவும் யாழ்ப்பாணத்தில் உள்ள தலங்களான நல்லூர் கந்தன் ஆலயம்,காரைநகர் ஈழத்து சிதம்பரம்,கீரிமலை சிவன் கோயில்,கேணி,மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்,வல்லிபுர ஆழ்வார் கோயில், வரதராஜப்பெருமாள் கோயில் போன்றவற்றுக்கும் இவர்கள் சென்றுள்ளார்கள்.

இச் சுற்றுலாவில் வட்டக்கச்சி மகா வித்தியாலய அதிபர் எம்.சி.எல்.மனுவல், இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை அதிபர் எஸ்.திரவியம் ஆகியோரும், இவ்விரு பாடசாலைகளிலும் தரம்-5 இல் கல்வி கற்பிக்கும் பொறுப்பாசிரியர்களும் மாணவர்களை அழைத்துச் சென்று அவர்களது வினாக்களுக்கான விளக்கங்களையும் வழங்கியதுடன் பல இடங்களையும் பார்வையிட்டுள்ளார்கள்.இச் சுற்றுலாவானது தமக்கு மிகவும் பயனுடையதாக இருந்ததாக மாணவர்கள் கூறுகின்றார்கள்

தரம் 5 இல் புலமைப் பரிசில் பரீட்சைக்காக பல இன்னல்களுக்கு இடையேயும் கஷ்டப்பட்டுப்படித்த இவர்களைப் போன்ற சிறார்களுக்கு இப்படியான மகிழ்வூட்டும் சுற்றுலாக்கள் மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பது அனைவரதும் கருத்தாக உள்ளது. (க-426)

# வைத்தியரின் வாகனம் மோதியதால் ஏழு வயதுச் சிறுவன் உயிரிழப்பு

மன்னார், ஒக்.4

மன்னார் மூர்வீதி பிரதான வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவத்தின்போது 7 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளார்.

தந்தை கடமையாற்றுகின்ற அலுவலகத்திலிருந்து உணவு வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றபோதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்த சிறுவன் மன்னார் பள்ளிமுனை 49 வீட்டுத்திட்டக் கிராமத்தைச் சேர்ந்த செபஸ்ரியான் அபிஷேக் எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உயிரிழந்த சிறுவனின் தந்தை செபஸ்ரியான் தெரிவிக்கையில்:

எனது மகன் அபிஷேக் நான் காவல் கடமையில் ஈடுபடுகின்ற மன்னார் மூர்வீதியில் உள்ள அலுவலகத்துக்கு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை என்னோடு வந்தார்.

பின்பு பிற்பகல் 4மணியளவில் தனக்கு உணவு வேண்டும் எனக் கூறி அருகில் உள்ள கடைக்கு மிக்ஸர் வாங்கச் சென்றார். இதன் போது எனது மகனுக்குப் பின்புறமாக வந்த வைத்தியர் ஒருவருடைய பிக்கப் ரக வாகனம் மோதியுள்ளது.

இதன்போது எனது மகனின் கால் மற்றும் மார்புப் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. உடனடியாக அந்த இடத்துக்கு வந்த பொலிஸார் வாகனத்தினைச் செலுத்தி வந்த குறித்த வைத்தியரைக் கைது செய்தனர். எனது மகனை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.



கடைக்குச் சென்ற எனது மகனைக் காணவில்லை எனச் சற்று முன்னோக்கி வந்து பார்த்த போது மேற்படி சம்பவம் இடம் பெற்றமை எனக்குத் தெரிய வந்தது.

வீதியால் வந்த எனது மகனைக் குறித்த வைத்தியர் வாகனத்தினால் மோதியதைப் பலர் பார்த்துள்ளனர். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட எனது மகன் சில மணித்தியாலங்களில் உயிரிழந்தார் எனத் தந்தை தெரிவித்தார்.

இந்த நிலையில் குறித்த சடலத்தை மன்னார் நீதிவான் திருமதி கே.ஜீவராணி நேற்று மதியம் 12.15 மணியளவில் மன்னார் பொது வைத்திய சாலையின் பிரேத அறைக்குச் சென்று பார்வையிட்டதோடு சடலப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

குறித்த வைத்தியர் கைது செய்யப்பட்ட நிலையில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விசாரணைகளின் பின் குறித்த வைத்தியர் மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். இறந்த சிறுவன் மன்னார் பள்ளிமுனை புனித லூசியா ம.வி.பாடசாலையில் தரம்-1 இல் கல்வி கற்று வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-601)

# கால்நடையை இறைச்சிக்கு வெட்டிய மூவர் ஆள் பிணையில் விடுவிப்பு

கிளிநொச்சி நாச்சிக்குடாப் பகுதியில் சுமார் அறுபதாயிரம் ரூபா பெறுமதியான கால்நடை ஒன்றினை இறைச்சிக்காக வெட்டிய மூன்று சந்தேக நபர்களையும் தலா ஒரு லட்சம் பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

புதிய நீதிமன்றக்கட்டடத் தொகுதி திறந்துவைக்கப்பட்டதையடுத்து கிளிநொச்சி, முழங்காவில் பகுதியில் சுமார் அறுபதாயிரம் ரூபா பெறுமதியான கால்நடையினை இறைச்சிக்காக வெட்டி விற்பனை செய்தமை தொடர்பாக மூன்று சந்தேக நபர்களை கிளிநொச்சி , முழங்காவில் பொலிசார் கைது செய்து கடந்த 29 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர்.

குறித்த மூன்று சந்தேக நபர்களையும் தலா ஒரு லட்சம் பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்லுமாறு மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார். (த-6)

# பெற்றோருக்கான கூட்டம்

அக்கராயன், ஒக்.04

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் பெற்றோருக்கான விசேட கூட்டம் இன்று மதியம் 1 மணியளவில் நடைபெறவுள்ளது.

பெற்றோர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (க-410)

# போட்டி முடிவுகள்

அக்கராயன், ஒக்.4

பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 'உங்களுக்குத் தெரியுமா?' வலயமட்டப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

முதலாமிடம்-ஜெ.நிவேதன்,யோகபுரம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம்- கு.சங்கீதன், பாலிநகர் மகாவித்தியாலயம், மூன்றாமிடம்-செ.நிசாந்த், பாண்டியன்குளம் மகாவித்தியாலயம். (க-410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளருக்கு பிரதேச அபிவிருத்தி வங்கியின் உதவி

தன்னம்பிக்கையுடன் இலங்கையர்களை எழுந்து நிற்கச் செய்யும் தனது இலக்கு நோக்கிய முன்னெடுப்புக் களின் ஒரு அங்கமாக (ஆர்டிபி) வியாபார சபை திட்டத்தை பிரதேச அபிவிருத்தி வங்கி ஆரம்பித்துள்ளது. இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் 23 செப்ரெம்பர் அன்று தங்கொட்டுவ சித்றூ வரவேற்பு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆர்டிபி வியாபார சபையானது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை இலக்கு வைத்துள்ள ஒரு திட்டமாகும். இது அவர்களைப் புதுத் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் தற்போது ஈடுபடும் தொழில் முயற்சியில் எதிர் நோக்கும் பலவித பிரச்சினைகள் பற்றிய அறிவூட்டலை வழங்கவும் நோக்காகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், கணக்கு வைத்தல், சந்தைப்படுத்தல், மனிதவள முகாமைத்துவம் மற்றும் வியாபாரத்தின் அனைத்துத் துறைகளையும் சீராக நிர்வகித்து உற்பத்தியையும் லாபத்தையும் எவ்வாறு பெருக்குவது என்பது தொடர்பிலும் இந்தத் திட்டத்தில் விளக்கமளிக்கப்படுகின்றது.

தங்கொட்டுவவில் இடம்பெற்ற முதலாவது பயிற்சித் திட்டத்தில் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த 200இற்கும் மேற்பட்ட சிறிய மற்றும்நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். பயிற்சித் திட்டத்தில் தொழில் முயற்சி தொடர்பான திட்டமிடல் (Business Plan) ஏன் அவசியம் என்றும் அதனை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றியும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. மேலும் ஒரு வங்கியை எவ்வாறு அணுகி கடனுதவியைப் பெற்றுக்கொள்வது, அந்த நிதியுதவியை எவ்வாறு செயற்திறன் மிக்க வகையில் முதலிட்டு தொழில் முயற்சியை விஸ்தரிப்பது என்பது தொடர்பாகவும் எடுத்து விளக்கப்பட்டது.

வங்கியின் சமூகப் பொறுப்பான்மைத் திட்டமாக (CSR Project) அறிமுகப்படுத்தப்பட்ட ஆர்டிபி வியாபார சபை. முன்னெடுப்பானது நாட்டின் தற்போதைய அபிவிருத்தி முயற்சிகளில் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களும் பங்களிப்பதற்கு வாய்ப்பளிக்கின்றது. நாடளாவிய ரீதியில் அனைத்து மாகாணங்களிலும் இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு வங்கி எதிர்பார்த்துள்ளது.

ஆறு பிரதேச அபிவிருத்தி வங்கிகளாக ஆரம்பத்தில் உருவாகிய வங்கி இன்று அவை அனைத்தும் ஒன்றாக இணைக்கப்பட்டுதனி வங்கியாக செயற்படுகின்றது. ஒன்றாக இணைக்கப்பட்ட ஆறு வங்கிகளும் முறையே, ரஜரட்டை, றுகுணு, வயம்பா, ஊவா, கந்துரட்டை மற்றும் சப்ரமுக அபிவிருத்தி வங்கிகள், நாட்டில் உள்ள ஒரேயொரு அபிவிருத்தி வங்கியாக விளங்கும் பிரதேச அபிவிருத்தி வங்கியானது 251 கிளை வலையமைப்புகளையும் 3.5 மில்லியன் வாடிக்கையாளர்களையும் கொண்டு இயங்குகின்றது. (த)

## வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிப்பு

412.4 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் பெறு மதியான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை இந்த ஆண் டின் முதல் அரை ஆண்டு காலப் பகுதியில் இலங்கை பெற்றுள்ளது.

இது, கடந்த ஆண்டின் முதல் அரை ஆண்டுடன் ஒப்பிடுகையில் 98.6 சதவீத அதிகரிப்பு என்று மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2009 மற்றும் 2010 ஆண்டுகளில் முறையே 601 , 516 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் பெறுமதியான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை இலங்கை பெற்றுக் கொண்டதாக மத்திய வங்கியின் புள்ளிவிபரத் தரவுகள் காட்டுகின்றன.

## சிங்கப்பூரின் எடுப்பான, அழகிய பிரகாரசமான வர்ணக் கூறுகளை Multilac அறிமுகம்

Mackons Paints கம்பனியினால் தயாரிக்கப்படும் மேற்பரப்பு புச்சுக்கான இலங்கையின் முன்னணி பெயின்ட் நிறுவனமான Multilac அண்மையில் சிங்கப்பூர் கலர் கார்ட்டின் வர்ணக் கூறுகளை அறிமுகம் செய்துள்ளது. வாடிக்கையாளர்கள் வானவில் வர்ணங்களை தெரிவு செய்வதற்கு பல விருப்பத் தேர்வுகளைத் தந்த நிழற்கூற்று பலவர்ண வண்ணத் தட்டின் கருவுலத்தை முதல் முதல் உருவாக்கிய Multilac தற்போது வெப்ப வலய நிழற்கூறுகளால் உந்தப்படும் மற்றுமொரு புதுவகையான வர்ண வகையறாக்களை உருவாக்கியுள்ளது. புதிய சிங்கப்புர் கலர் கார்ட் வழமையான சிவப்பு, பச்சை, ஊதா. நீலம், மஞ்சல் நிறங்களுக்கு ஒரு கவர்ச்சியை கொடுத்து புது வகையான மினுமினுப்பை ஏற்படுத்துகிறது.

இன்றைய சிக்கலான உலகில் உங்கள் சுவரில் வர்ணம் என்பது வாழும் இடங்களின் புதிய அழகுத் தோற்றங்களை ஊருவாக்குவதாகும் என்று Multilac வியாபார ஊக்குவிப்புப் பிரிவு அதிபர் திருமதி நில்றுக்ஷி டீ சில்வா தெரிவித்தார். அதனால்தான் உங்கள் வீட்டின் தன்மைக்கு ஏற்றதாக மட்டு மன்றி தினமும் நீங்கள் அனு பவிக்கக் கூடிய சூழலை ஏற்படுத்தும் வர்ணங்களை நாம் சேர்க்கிறோம் என்றும் அவர் கூறினார்.

புது வகையான உற்பத்திகளை அறிமுகம் செய்வது வாடிக்கையாளர்களின் புரண திருப்தியை உறுதிப்படுத்துவது ஆகிய இரண்டிலும் போட்டியான முறையில் செயல்பட Multilac தன்னை அர்ப்பணித்துள்ளது. விலைப் போட்டிகள் நிறைந்த தற்போதைய சந்தை நிலைமைகள் குறித்து கருத்து தெரிவித்த திருமதி டீ சில்வா தரத்தில் தாங்கள் விட்டுக் கொடுப்பதில்லை என்றும் விலைப் போட்டிகளில் ஈடுபடுவதில்லை என்றும் கூறினார். வாடிக்கையாளர் தேவையை கருத்தில் கொண்டு அவர்களுக்கு அதிசிறந்த உற்பத்திகளை தருவதில் தங்கள் கவனம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுற்றாடல் சம்பந்தமாகவும் தாங்கள் அவதானம் செலத்துவதாக தெரிவித்த திருமதி டீ சில்வா தங்கள் உற்பத்திகள் சுற்றாடல் சாதகமானவை என்றும் கூறினார். கவர்ச்சிகரமான நிழற்கூறுகள் வீடுகளை விசாலமாக காண்பிப்பதுடன் அலுவலகங்கள் சரியான நிழற் கூற்றுப் பாவிப்பினால் பிரகாசமாகத் தெரியும். வீட்டிலோ வேலைத் தலத்திலோ கவர்ச்சிகரமான வர்ணங்கள் உற்சாகத்தை ஏற்படுத்தி உயிர்த் துடிப்பான வாழ்க்கையை வாழச் செய்யும். அழகிய வர்ணங்களை அறிமுகம் செய்யும் ஒரு வீட்டு உரிமையாளர் உற்சாகத்தையும் மன நிறைவையும் தரும் ஒப்பீட்டு நிறங்களை சுவர்களில் பயன்படுத்தலாம்.

## இலங்கையின் சென்மதி நிலுவை மிகை நிலையில்

இந்த ஆண்டின் ஜூலை மாதத்துக்கான இலங்கையின் சென்மதி நிலுவை (சர்வதேச வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் கணக்கு நிலுவை) 1,006 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் என்று சாதகமான மிகையைப் பதிவு செய்துள்ளது.

இதனால் இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்கு 8,099 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக அதிகரித்து உள்ளதுடன் கடந்த ஆண்டு இதே ஜூலை மாதத்தில், இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கு 6,610 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் என்று குறைவாக காணப்பட்டதாக மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கு இந்த ஆண்டின் ஜூலை மாதத்தில், இலங்கையின் பேரினப் பொருளாதார சூழலில் காணப்பட்ட முன்னேற்றமே காரணம் என்று மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

மிக வேகமாக வளர்ந்து வரும் சுற்றலா மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களின் பண அனுப்பல் வருமானங்கள், இந்த ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் முறையே 461 மற்றும் 2,922 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் என அதிகரித்து, பணிகள் மற்றும் வருமான கணக்கில் மிகையைத் தோற்றுவித்துள்ளன.

இதே காலத்தில், மொத்தமாக 2,754 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை வெளிநாட்டு கடன், உதவிகளாக அரசு பெற்றுள்ளது. இதில் 10 ஆண்டு கடன் பணப் பத்திர விற்பனை மூலம் 1,000 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை அரசு திரட்டியுள்ளது.

இதேவேளை இந்த ஆண்டின் முதல் அரை ஆண்டு காலப் பகுதியில் 413 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை வெளிநாட்டு நேரடி முதலீடாக இலங்கை பெற்றுக் கொண்டது.

ஆயினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டின் முதல் ஏழு மாதங்களுக்கான இலங்கையின் இறக்குமதிச் செலவுகள் 48.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. ஏற்றுமதி வருமானங்கள் 30.3 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்துள்ள நிலையில், வர்த்தக நிலுவை தொடர்ந்தும் பாதகமாகவே காணப்படுகின்றது.

இந்த நிலையில், மிகை நிலையில் காணப்பட்ட பணிகள் மற்றும் வருமானங்கள் கணக்கு நிலுவைகளுடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு கடன், உதவிகளால் சென்மதி நிலுவை மிகையை காட்டியுள்ளது. வர்த்தக நிலுவையின் 2/3 பங்குக்கு சமனான தொகையை வெளிநாட்டு தொழிலாளர்களின் பண அனுப்பல்கள் பெற்றுத் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெ. வணிகத்தில் 2ஆவது சக்தி வாய்ந்த பெண்மணி இந்திரா நூயி

வாஷிங்டன், ஒக். 4

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் செய்தி நிறுவனம் ஒன்று அமெரிக்காவின் வணிகத்தில் சிறந்து விளங்கும் 10 பேரின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்துப் பட்டியலில் அமெரிக்க வாழ் இந்தியரான இந்திரா நூயிக்கு 2ஆவது இடம் கிடைத்துள்ளது. 10 நபர்களில் அதிக வருமானம் பெறுவதில் 9ஆவது இடத்திலிருந்து, 2 ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ள ஒரே பெண்மணி இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

உலக பொருளாதாரத்தில் அங்கம் வகிக்கும் பெண்களின் முக்கியத்துவத்தை கொண்டு இந்த தரவரிசைப் பட்டியல் நிர்ணயிக்கப்படுகிறது.

மேலும் வணிகத்தில் காணப்படும் முன்னேற்றம், சமூகம் மற்றும் கலாசாரத்தில் உள்ள தொடர்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டும் இந்தத் தரவரிசை பட்டியல் வெளியிடப்படுகிறது.

# சிங்கரின் புதிய குளிரூட்டிகள் அறிமுகம்

சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனம் அதன் நம்பிக்கையான தரச் சிறப்பின் 160 ஆண்டுகால நிறைவைக் கொண்டாடும் இந்த வேளையில் பக்கவாட்டான இரு கதவுகளைக் கொண்ட Side-by-Side குளிரூட்டிகளை இலங்கைப் பாவனையாளர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. பொருளாதார ரீதியில் துரிதமாக முன்னேறிவரும் தற்கால சமூகத்துக்கு மிகவும் பொருத்தமான பல்வேறு நவீன அம்சங்களை இந்தப் புதிய குளிரூட்டிகள் கொண்டுள்ளன. வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைக்கேற்ப புதிய சாதனங்கள் வழங்குவதிலும் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அனுகூலங்களை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதிலும் சிங்கர் நிறுவனம் கொண்டுள்ள அக்கறையை இந்தக் குளிரூட்டிகள் பிரதிபலிக்கின்றன.

புதிய குளிரூட்டிகளின் அறிமுக வைபவத்தில் தகவல் வெளியிட்ட சிங்கர் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஜனாப் நஸர் மஜீத், இந்தக் குளிரூட்டியின் பாகங்கள் கொரியாவில் இருந்து தருவிக்கப்பட்டு, இ[illegible]னையிலுள்ள சிங்கர் தொழி[illegible] சாலையில் பொருத்தி அமைக்கப்படுகின்றன. குளிரூட்டிகளின் உற்பத்தியில் 1986 ஆம் ஆண்டு முதல் ஈடுபட்டு வரும் எமது இரத்மலானைத் தொழிற்சாலை தரச்சிறப்பிற்கும் உறுதிப்பாட்டிற்கும் புகழ் பெற்றதாகும். நாம் சிறந்த தொழில்நுட்ப அறிவைக் கொண்டி ருப்பது ஓர் அனுகூலமாகும். இந்தக் குளிரூட்டிகள் இந்த நாட்டிலேயே பொருத்தி அமைக்கப்படுவதால், வாடிக்கையாளர் சேவை மற்றும் தொழில் நுட்ப உதவி [illegible] ளர்கள் நன்மையடைவார்கள் என்று கூறினார்.

'Side-by-Side' குளிரூட்டிகள் இரண்டு மொடல்களில் கிடைக்கின்றன, CRN-Y22E2, CRN-X22B2 என்பனவே அவையாகும். இரண்டுமே பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன. Turbo X கூலிங், உறைபனி பிடிக்காத அமைப்பு, Energy Class A+/A, LED மற்றும் Touch Bottom Display வெவ்வேறு வகையான உணவுகளைத் துர்மணம் இன்றியும் சுவை குறையாமலும் வைத்திருக்கப் பகுதியாகப் பிரிக்கப்பட்ட உள்ளமைப்பு, மின்சக்தி பாவனையைக் குறைக்க உதவும் பக்கவாட்டான இரு கதவுகள் என்பன அவற்றுள் அடங்கும். CRN-Y22E2 குளிரூட்டியில் நீர் மற்றும் ஐஸ் டிஸ்பென்ஸர் போன்ற மேலதிக வசதிகளும் உள்ளன.

'Side-by-Side' குளிரூட்டிகள் கொரிய மூலப்பொருள்கள் மற்றும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தியே உருவாக்கப்படுகின்றன. ஆகவே தரச்சிறப்பை நாடும் தற்கால இலங்கைக் குடும்பங்களுக்கு இது ஒரு சிறந்த முதலீடாக அமையும் என்று சிங்கர் தெரிவித்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையால் ஆயிரக்கணக்கான சிறுவர்களின் கல்வி வளர்ச்சி பாதிப்பு

## இராதாகிருஷ்ணன் எம்.பி.தெரிவிப்பு

நுவரெலியா, ஒக்.4

வறுமையினால் பல்லாயிரக் கணக்கான சிறார்களின் கல்வி வளர்ச்சியில் தடைகள் ஏற்பட்டுள்ளதை நாம் காணக்கூடியதாக உள்ளது - என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதிய மலையக அமைப்பு சிறுவர் கல்வி அபிவிருத்தி கழக அங்குரார்ப்பணம் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வறுமைக்கு மத்தியில் வாழும் நுவரெலியா மாவட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு 'புதிய மலையகம்' அமைப்பு மேற்கொள்ளும் சேவைகள் மிகவும் பாராட்டத்தக்கவை. இதற்கு எப்போதும் எமது ஆதரவு உண்டு.

ஒரு தொலை நோக்குடனும், தீர்க்க தரிசனத்துடனும், மலையகச் சிறார்களின் கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை முன்னெடுத்து அபிவிருத்தி செய்து ஒரு வளமான எதிர்காலத்தை உருவாக்குவதை ஒரு சமூக கடமையாகக் கருதி இந்த அமைப்பு செயற்படுவது பாராட்டத்தக்கதாகும்.

நுவரெலியா மாவட்ட மக்கள் மிகமிக வறுமையில் உள்ளனர் என்று அரசின் புள்ளி விவரம் கூறுகின்றது.

ஒரு சமூகத்தின் மறுமலர்ச்சி மாற்றம், சுதந்திரம், சமூக அந்தஸ்து ஆகியன இளைஞர்களின் கைகளிலேயே தங்கியுள்ளன. ஒவ்வொரு மாணவ, மாணவிகளினது திறமைகளை வெளிப்படுத்தி திறமையானவர்களாக உருவாக்கி ஒரு சமூக எழுச்சியை ஏற்படுத்துவதற்கு இந்த அமைப்பு ஒரு வாய்ப்பை உருவாக்கியுள்ளது - என்றார். (ச)

# சிறுமி மீது வன்புணர்வு இளைஞர் விளக்கமறியலில்

கம்பளை, ஒக்.4

சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய இருபது வயது இளைஞரொருவரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை நீதிவான் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

தொளஸ்பாகை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபரான இளைஞர் அயல்வீட்டுச் சிறுமியை சுமார் ஆறு மாதங்களுக்கு மேலாக பாலியல் ரீதியாகத் துன்புறுத்தி வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் தனது கையடக்கத் தொலைபேசிமூலம் ஆபாசப் படங்களைக் காண்பித்து சிறுமியை தனது தேவைக்கு பயன்படுத்தி வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச)

# கண்டியில் சில தினங்களில் 8 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

கண்டி,செப்.4

கண்டி மாவட்டத்தின் ஹசலக ரங்கலை மற்றும் தெலிதெனிய பொலிஸ் பிரிவுகளில் கடந்த சில தினங்களில் எட்டு சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆண்டு ஒன்றில் கல்வி பயிலும் சிறுமியொருவரை துஷ்பிரயோகத்திற்குற்படுத்தியதாகத் தெரிவிக்கப்படும் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)



இடைநிறுத்தப்பட்டுள்ள வீடுகளுக்கான நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்குமாறு கோரி மட்டக்களப்பில் நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஓட்டமாவடி, காவத்தமுனை பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நோர்வே அகதிகளுக்கான நிறுவனம் வீடுகளை நிர்மாணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் அரசியல்வாதிகளுக்கு மக்கள் தேர்தலின்போது மட்டுமே தேவை

## கல்முனை வேட்பாளர் சீறுகிறார்

மருதமுனை, ஒக்.4

தேர்தல் காலம் வந்தால் தமிழ் அரசியல் தலைமைகள் மக்களைத் தேடி வருவார்கள். பொய்யான வாக்குறுதிகளை வழங்குவார்கள். பின்னர் மக்களை மறந்துவிடுவார்கள். இது தான் இன்றைய தமிழ் அரசியல்கள நிலைவரமாக மாறியிருக்கிறது. இதனால் தான் நான் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடுகின்றேன்.

-இவ்வாறு கல்முனை மாநகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் தாமோதரம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

பாண்டிருப்பில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும்தெரிவித்ததாவது:

தமிழ் உணர்வை மதித்தவராகவும் தமிழ்த்தரப்பால் புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் தான் எமது பிரதேச அபிவிருத்திக்காக ஐக்கிய தேசியக்கட்சியில் போட்டியிடுகிறேன். கல்முனை மாநகரப் பிரதேசத் திலே இருக்கின்ற தமிழ்க் கிராமங்களில் வடிகான் அமைப்பு, வீதிப் புனரமைப்பு, சுகாதாரப் பராமரிப்பு, பாடசாலைகளின் அபிவிருத்தி, ஆலயங்களின் அபிவிருத்தி என்பன மிகவும் பின்னடைந்த நிலையிலேயே உள்ளன. பின்தங்கியிருக்கின்ற கிராமங்களின் உட்கட்டமைப்பைக் கட்டியெழுப்ப வேண்டியது என்போன்ற இளைஞர்களின் கடமையாகும். தேர்தல் வந்தால் மாத்திரம் தங்களைத் தமிழ் உணர்வாளர்களாகக் காட்டிக் கொள்கின்ற தமிழ்த் தலைமைகளை இனங்கண்டு தக்க பாடம் புகட்டவேண்டும்- என்றார். (ச)

# ஏறாவூரில் 10 டெங்கு நோயாளிகள்

மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர் பிரதேசத்தில் டெங்கு நுளம்பின் தாக்கத்திற்கு 10 பேர் பாதிக்கப்பட்டு இனங்காணப் பட்டுள்ளனர். டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மிகத் தீவிரப் படுத்தப்பட்டு வருகின்றன என்று ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எச். எம்.தாறிக் தெரிவித்தார்.

ஏறாவூர் பிரதேசத்தில் 10 டெங்கு நோயாளர்கள் 10 தினங்களில் இனங்காணப்பட்டனர். இதையடுத்து நாடளாவிய ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சுகாதா ரப் பகுதியிலிருந்து விசேட சுகாதாரப் பரிசோதனைக் குழுவினர் வருகை தந்துள்ளனர். (ச)

# கல்முனையில் அரசுக்கு படுதோல்வியே!

## அடித்துக் கூறுகிறார் ஹக்கீம்

அம்பாறை, ஒக்.4

கல்முனை மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அடையவுள்ள படுதோல்விக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்ற அமைச்சர்களான றிஷாட் பதியுதீன், ஏ.எல். எம்.அதாவுல்லா ஆகியோரே பொறுப்பாளிகள் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக கல்முனை மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து கல்முனைக்குடி , கடற்கரை வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

கல்முனை மாநகர சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெறப்போகின்ற வெற்றி முழு இலங்கையிலும் வாழும் முஸ்லிம்களுக்கு கிடைக்கும் வெற்றியாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விருப்பத்திற்கு மாறாக கல்முனை மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு படுதோல்வியடையும்.

இதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்ற அமைச்சர்கள் இருவருமே பொறுப்பாளிகளாவர். கல்முனை மாநகர சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெறப்போகின்ற மாபெரும் வெற்றி எந்தவிதத்திலும் நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சவாலாக அமையப் போவதில்லை.

ஆனால், ஜனாதிபதியின் ஆட்சியின்கீழிருக்கின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்துசென்ற ஓரிரு அமைச்சர்கள் இந்தத் தேர்தல் ஒரு சவாலாக அமையப் போகின்றது எனத் தெரிவிக்கின்றனர்.

கல்முனை மாநகர சபைத் தேர்தலில் மூன்றாவது சக்தியாகவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு



அளிக்கின்ற வாக்குகள் அனைத்தும் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் இலக்கைச் சிதைக்கின்ற வாக்குகளாக அமையப்போகின்றது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். கல்முனை மாநகர சபைத் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பில் ஜனாதிபதியுடன் நான்கு தடவைகள் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளேன். இந்தப் பேச்சுகளிலே ஜனாதிபதி மிகுந்த திறந்த மனதோடு கல்முனை மாநகர சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்காக மரச்சின்னத்தில் போட்டியிடலாம் எனவும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் [illegible] கேட்டுக்கொண்டார் - என்றார்.

# எதிர்க்கட்சியினர் இருக்கும் வீதிக்கு வெளிச்சம் இல்லை

மட்டக்களப்பு,ஒக.4

பாலமுனைப் பிரதேசத்திலுள்ள எதிர்க்கட்சிக்காரர்களுடைய வீடுகளின் முன்னாலுள்ள சில வீதி விளக்குகள் பொருத்தப்படாமல் திட்டமிட்டுத் தவிர்க்கப்படுகின்றன என்று அட்டாளைச்சேனை பிரதேசசபைத் தவிசாளர் ஏ. எல். எம். நசீர் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனைப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த வியாழக்கிழமை பிரதேச சபை அலுவலகக் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போது, பிரதேச சபையால் வீதி விளக்குகள் பொருத்தப்படுகையில், இவ்வாறு தவிர்க்கப்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

இவ்வாறு செய்வது சரியானது அல்ல.வீதிக்கு வெளிச்சம் கொடுப்பதில் கட்சிப் பாகுபாடுகள் பார்க்கக்கூடாது - என்று பிரதேசசபையின் எதிர்க் கட்சி உறுப்பினர் எம்.எல்.எம். பரீட் இதன்போது தெரிவித் துள்ளார். இந்தக் கூற்றுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்கும் போது கட்சி பேதங்கள் பார்க்கக் கூடாது. தேர்தலில் நாம் போட்டியிட்ட போது கட்சிப் பேதங்கள் நம்மிடையே இருந்தன.

ஆனால், தற்போது நாம் மக்களுக்கு பொதுவானவர்கள். வெளிச்சம் கொடுப்பதில் கட்சி பேதங்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பது நேர்மையான செயலல்ல. அட்டாளைச்சேனை மக்கள் அனைவரும் என்னை ஒருமுகமாகவே பார்க்க வேண்டும், பிரதேசவாதம், கட்சி பேதங்களுள்ள ஒரு தவிசாளராக என்னை மக்கள் அடையாளம் காணக்கூடாது. அவ்வாறானதொரு நிலைமை உருவாகிவிடக்கூடாது என்பதில் நான் கவனமாக இருக் கின்றேன்.

எனவே, இந்த விடயத்தில் பிரதேச சபையிலுள்ள உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் அனைவரும் எனக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
தொழில் ரீதியான கூட்டங்கள், விழாக்களில் கலந்து கொள்ளலாம். சக ஊழியர்களிடம் வளைந்து கொடுத்துச் செல்வீர்கள். சேமிப்புகள் கரையும் வகையில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். உங்களின் வேலை ஒன்றுக்காக மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும்.

**இடபம்:**
உங்களிடம் உதவி பெற்ற சிலரே உங்களை உதாசீனம் செய்யலாம். தொழில் விவகாரங்களில் எச்சரிக்கை யான அணுகுமுறை அவசியம். சிக்கனமான இருக்க நினைத் தாலும் ஏதாவது ஒரு வகையில் இருட்டடிப்பு செலவுகளைச் சந்திக்கலாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி தொந்தரவு கொடுக்கலாம். மறதியால் அவதியுண்டு.

**மிதுனம்:**
வெளியிடங்களுக்குச் செல்லும் போது பழைய நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். தொழில் விடயங்களில் அவசரப்பட்டு எடுத்த முடிவு ஒன்று அனுகூலமாக அமையலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கலாம்.

**கடகம்:**
உங்களின் சிறப்பான செயற்பாடுகளைக் கண்டு மற்றவர்கள் வியப்படைவர். தொழில் ரீதியாக புதிய வாய்ப்புகள் தேடி வரலாம். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். நடக்குமோ நடக்காதோ என சந்தேகத்தில் இருந்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம்.

**சிங்கம்:**
பிரியமானவர்களுடன் யோசித்துப் பேச வேண்டிய நாள். உடன்பிறப்புகளுடன் காரசாரமாக வாக்கு வாதங்கள் செய்ய நேரிடலாம். புதிய எண்ணங்களை செயற்படுத்த முற்படுவீர்கள். நீங்கள் செய்யும் தவறுகளை உங்களுக்குத் தெரியாமலேயே மற்றவர்கள் அறிந்து கொள்வர். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம்.

**கன்னி:**
மற்றவர்களை பற்றி கவலைப்படாமல் நீங்கள் நினைத்ததே சரி என செயற்படும் நாள். நண்பர்கள் சிலரின் குறைகளைச் சுட்டிக் காட்டுவீர்கள். சக ஊழியர்களுக்காகச் சில செலவுகளைச் செய்வீர்கள். உங்களின் மனக்குறை ஒன்றை அடுத்தவர்களிடம் சொல்லி புலம்புவீர்கள்.

**துலாம்:**
கருணை, பரிவுடன் நடந்து கொள்வீர்கள். நண்பர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பாராத வகையில் கூடுதல் ஆதாயம் பெறலாம். வாகன யோகத்திற்கு வாய்ப்புகள் உண்டு. அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலையில் வாங்கலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:**
சில விடயங்களை நினைத்து மனதைப் போட்டு குழப்பிக் கொள்வீர்கள். ஒரு செலவை நினைத்துக் கவலைப்படும் நேரத்தில் வேறு சில செலவுகள் உருவாகித் தொந்தரவு கொடுக்கலாம். உங்களின் பலவீனத்தை மற்றவர்கள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். கடன் மிகுதிகளை செலுத்துவீர்கள். சோர்வு, சோம்பல் கூடும்.

**தனுசு:**
ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறலாம். வேலையாள்கள் வழியில் உருவான தொல்லைகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். முகவர் தொழில் புரிவோர் சிரமங்களை சந்தித்தாலும் எதிர்பார்த்த லாபம் பெறுவர். அயலார் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். சிலருடன் பொறாமை குறித்த பிரச்சினை உருவாகும்.

**மகரம்:**
வீட்டுக்கு வரும் விருந்தினர்களை உபசரிக்கக் கூட முடியாத அளவுக்கு சில வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியான ரகசியங்களை மற்றவர்களிடம் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. தெரிந்தவர் என யாருக்காகவும் மற்றவர்களிடம் பிணை கொடுப்பது நல்லதல்ல.

**கும்பம்:**
தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். சில விடயங்களை நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். வாடகை வீட்டில் வசிப்போர் புதிய வசதியான வீடுகளுக்கு மாறும் முயற்சிகளில் ஈடுபடலாம். உடன்பிறப்புகளுடன் இருந்த மனஸ்தாபம் மாறி பாசம் அதிகரிக்கும். அடமானமாக வைத்த பொன், பொருட்களை மீட்கலாம்.

**மீனம்:**
யாருக்காகவும் உங்களின் முடிவுகளை மாற்றிக் கொள்ள மாட்டீர்கள். மனைவி, குழந்தைகள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பழைய பொருள்களை மாற்றி புதிய பொருள்கள் வாங்க முற்படுவீர்கள். கலைஞர்களுக்கு எதிர்பார்த்த வாய்ப்பு கிடைப்பது தள்ளிப் போகும். மனதில் உற்சாகம், தெம்பு கரைபுரண்டு ஓடும் நாள்.

# இந்தக...
# புதித...
# ஒன்ற...

ஜே.வி.பிக்குள் ஏற்பட்டுள்ள பிளவு தொடர்பாக பல்வேறு தரப்பினர்கள் வெவ்வேறான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் உண்மை நிலவரம் குறித்து அக்கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மனந்திறக்கிறார்.

*கேள்வி: ஜே.வி.பிக்குள் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினையை சுருக்கமாக விளக்கமுடியுமா?*

பதில்: ஜே.வி.பிக்குள் இன்று எந்தவித பிரச்சினை, பிளவும் இல்லை என்று நான் கூறவிரும்புகிறேன். கடந்த 1965 ஆம் ஆண்டு ஜே.வி.பி. ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இரண்டு பிரச்சினைகளே ஏற்பட்டிருந்தன. குறிப்பாக 1971 ஆம் ஆண்டில் எமது கட்சிக்கு மரண அச்சுறுத்தல் ஏற்பட்டது. அத்துடன் 1989 ஆம் ஆண்டில் கட்சித் தலைவர் ரோஹண விஜேவீர உட்பட எமது கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கொலை செய்யப்பட்டனர். அது மட்டுமின்றி எனக்கும்,எனது கட்சியின் மேலும் பல பிரமுகர்களுக்கும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. இவையே எமது கட்சி எதிர்கொண்ட பிரச்சினைகளாகும். ஆனால், இன்று ஏற்பட்டிருப்பது சிறிய கருத்து முரண்பாடாகும்; சிறிய குழப்பமாகும்.

*கே: கட்சிக்குள் இன்று இவ்வாறான பிரச்சினை ஏற்பட காரணம் என்ன?*

ப: கட்சியின் முக்கியமான அனைத்துத் தீர்மானங்களும் கட்சி உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்தே மேற்கொள்வோம். இதில் எவருக்கும் தனித் தீர்மானம் எடுக்கமுடியாது. அதுபோன்று நான் இக்கட்சியின் தலைவர் என்ற போதிலும் எந்தத் தனித் தீர்மானமும் என்னால் எடுக்கமுடியாது.

*கே: பல்வேறு சந்தர்ப்பங்களில் நீங்கள் எடுத்த தீர்மானங்களும், முடிவுகளுமே ஜே.வி.பிக்குள் இன்று பிரச்சினை ஏற்படக் காரணமாக அமைந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?*

ப: அது கட்சியின் செயற்குழுவினால் எடுக்கப்பட்ட முடிவாகும். அவ்வாறான விடயங்களில் கட்சியின் செயற்குழு கூடி முடிவுசெய்யும்.

*கே: ஜே.வி.பிக்குள் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குப் பின்னால் வெளிநாட்டு சக்திகளின் நிழல் காணப்படுவதாக அறியக்கிடைத்துள்ளதே?*

ப: ஜே.வி.பிக்குள் பிளவை ஏற்படுத்தி கட்சியை சின்னா பின்னமாக்குவதற்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல்வேறு பிரிவினர் சூழ்ச்சிகளை மேற்கொண்டனர். இதற்காக வெளிநாடுகளிலிருந்து சிலர் பணம் பெற்றனர். குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளின் முன்னைய ஆட்சி காலங்களின் போது ஜே.வி.பிக்குள் பிளவை ஏற்படுத்தி கட்சியை உருக்குலையச் செய்வதற்காக இந்த இரண்டு கட்சிகளும் வெளிநாட்டிலுள்ள அமைப்புகளிடம் இருந்தும், சூழ்ச்சிக்காரர்களிடம் இருந்தும் பணம் பெற்றனர். ஆனால், நாங்கள் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்த இடங்கொடுக்கவில்லை.


*கே: குறிப்பாக இந்தியாவிலுள்ள 'றோ' என்ற உளவுப் பிரிவு ஜேவிபிக்குள் முரண்பாட்டை அல்லது பிளவை ஏற்படுத்துவதற்கு முயற்சித்ததாக ஜே.வி.பியிலுள்ள முக்கிய உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். அது தொடர்பில் உங்களுக்கு ஏதாவது தகவல் கிடைத்ததா?*

ப: 'றோ' உளவு பிரிவு எமது கட்சியினுள் பிளவை ஏற்படுத்த முயற்சித்தமை தொடர்பில் எனக்கு எந்தவித தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. அப்படி தகவல் கிடைத்தால் நான் கூறுவேன்.

அத்துடன் ஜே.வி.பிக்குள் பிளவை ஏற்படுத்த முன்னர் வெளிநாட்டு சக்திகளும், உள்நாட்டு சக்திகளும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. அவ்வாறான நிலைமை இன்று இல்லை. ஆனாலும், எமது கட்சிக்குள் பிரிவினை பிரச்சினையை ஏற்படுத்த முயற்சித்த - அதற்காக பணம் பெற்ற பிரிவினர் மற்றும் அமைப்புகளின் விவரங்கள் அடங்கிய நீண்ட பட்டியல் என்னிடம் தயாராகி வருகிறது. அப்பட்டியலை நான் வெகுவிரைவில் வெளியிட்டு அவர்களை அம்பலப்படுத்துவேன்.

*கே: ஜே.பி.வியின் சிரேஷ்ட உறுப்பினரான குணரட்ணம் என்பவர் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குத் திரும்பியுள்ளார். இவர் சார்பாக உள்ள மாற்றுக்குழு தற்போது கட்சிக்குள் பிளவை உருவாக்கியுள்ளது என்று தெரியவந்திருக்கின்றது. இது உண்மையா?*

ப: குணரட்னம்.....? அவ்வாறு பெயருடைய ஒருவர் ஜே.வி.பிக்குள் இல்லை. தவறான தகவல் வெளி யிடப்பட்டிருக்கின்றது. அது பிழையாகும். குணரட்னம் என்ற நபர் எமது கட்சியிலேயே இருக்கவில்லை. கட்சியில் எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாக இல்லாத ஒருவரிடம் எப்படிபேச்சு நடத்தமுடியும்? இருந்த போதிலும் கட்சியின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில், விசேட கூட்டம் ஒன்றை கூட்டி செயற்குழு தீர்மானித்துள்ளது. கட்சியின் யாப்பில் உள்ளவாறு 4 வருடங்களுக்கு ஒருமுறை கட்சியின் தேசிய



மாநாடு நடத்தமுடியும். அத்துடன் விசேட கூட்டம் நடத்துவதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளதால் பிரச்சினை தொடர்பில் கட்சியின் விசேட கூட்டம் கூட்டுவதற்கான அனுமதி யாப்பில் உள்ளது. அதன்படி செயற்குழுவும் இவ் விசேட கூட்டத்தை கூட்டுவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றது. இதற்கிணங்க இந்த விசேட கூட்டம் மூன்று மாதங்களுக்குள் கூட்டப்படவேண்டும். விரைவில் இக்கூட்டம் இடம்பெறும். கட்சியில் இருந்துகொண்டு மாற்றுக் கருத்துக்களையும், கட்சியை களங்கப்படுத்தும் வகையிலான பொய்ப் பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகின்ற தரப்பினர் மனசாட்சியின்படி அவற்றை திருத்திக் கொள்ள வேண்டும்.

*கே: ஜே.வி.பியின் உள்ளக உறுப்பினர்களிடம் இருந்து எமக்கு கிடைத்த தகவல்களின்படி தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் தமிழர் விவகாரங்களுக்கு முன்னுரிமை அளித்ததன் காரணமாக அதனால் அதிருப்தி ஏற்பட்டு இவ்வாறு மாற்றுக்குழு என்ற ஒன்று உருவாகி பிரச்சினையை தோற்றுவித்துள்ளது என அறியக்கிடைத்தது. இது பற்றி உங்கள் கருத்து?*

ப: இல்லை. இது முற்றிலும் பொய்யான கூற்றாகும். ஜே.வி.பி. என்ற கட்சி தமிழ், சிங்கள, இன, மத பேதம் பார்த்து உருவாக்கப்பட்டதல்ல. அனைத்து மக்களதும் பிரதிநிதித்துவம் எமது கட்சியில் உள்ளது. அன்றுமுதல் இன்று வரை நாங்கள் இன, மத மற்றும் தமிழர், சிங்களவர் என்றும் பெரும்பான்மை, சிறு பான்மை என்றும் பிரித்துப் பார்த்து செயற்படவில்லை. அதுபோன்று பக்கச்சார்பாகவும் செயற்படவில்லை. அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியே ஜே.வி.பி.

நாங்கள் தமிழ் மக்களை எதிர்ப்பவர்கள் அல்லர். 1960 ஆம், 70 ஆம் ஆண்டுகளில் தலைவர் ரோஹண விஜேவீர முதன்முறையாக தமிழ் மக்களுக்காக போராடினார். சீனகல என்ற தோட்டத்திலுள்ள தமிழ் மக்களுக்காக அவர் வீதிக்கு இறங்கிப் போராடியதை இன்றும் மறக்க முடியாது.

*கே: அரசுடன் மீண்டும் இணைந்து செயற்படுவது தொடர்பாக சிந்தித்துப் பார்த்தீர்களா? ஜே.வி.பியிலிருந்து அரசு பக்கம் தாவிய உறுப்பினர்களை மீண்டும் வந்து கட்சியில் இணையுமாறு அழைப்பு விடுப்பீர்களா?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ச் சதி ...ான ...ல்லை



எமது கட்சியைப் பிளவுபடுத்த நீண்ட காலமாக எடுக்கப்பட்ட முயற்சி இது. விரைவில் கட்சியின் விசேட மாநாடு மூன்று மாதங்களுக்குள் கூட்டப்படும். அந்தக் கூட்டத்தின் போது இந்தப் பிரச்சினைக்கு நிச்சயமாக முடிவு கட்டுவேன். குணரட்ணம் என்ற ஒருவர் கட்சியிலேயே இல்லை என்பதால் களங்கப்படுத்தும் வகையிலான பிரசாரங்களை அவர்களே தவிர்த்துக் கொள்வது நல்லது.

**சோமவன்ச உதயனுக்கு விசேட செவ்வி**

ப: ஒருபோதும் இல்லை. அவ்வாறான எண்ண ...மும் எங்களுக்கு இல்லை. அரசுடனோ, ஐக்கிய தேசியக் கட்சியுடனோ, தமிழ்த் தேசிய கூட்டமைப் ...புடனோ அல்லது வேறெந்த கட்சிகளுடனோ இணைந்து செயற்படும் எண்ணம் எமக்கு இல்லை. இணைந்து செயற்படவும் முடியாது. அதுபற்றி துளியளவுகூட நான் சிந்திக்கவில்லை.

ஜே.வி.பி ஆரம்பிக்கப்பட்டு இற்றைக்கு 46 வருடங்களாகின்றன. இந்த 4 தசாப்த காலத்துக்குள் ஜே.வி.பியிலிருந்து பல உறுப்பினர்கள் அரசுடனும், ...ஏனைய கட்சிகளுடனும், இணைந்துகொண்டு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அதுபோன்று ...ம்முடனும் சிலர் இணைந்தனர். ஜே.வி.பியின் ...பொதுச் செயலாளராக செயற்பட்ட லயனல் போபகே ...ன்பவரும் அரசுடன் இணைந்து செயற்பட்டார். இவ்வாறு பலர் கட்சி தாவினார்கள். ஆனாலும், ஜே.வி.பி. இன்றும் அசையாமல் உறுதியாகவுள்ளது. ...ங்கள் கூறியவாறு, கட்சியிலிருந்து பிரிந்துசென்று, அரசுடன் இணைந்து செயலாற்றிவரும் உறுப்பினர் ...களை மீண்டும் கட்சியில் வந்து இணையுமாறு எம்மால் அழைப்பு விடுக்க முடியாது. அவர்கள் விரும்பினால் கட்சியில் வந்து இணைந்து கொள்ளமுடியும். எனினும், பிரிந்து சென்றவர்கள் அரசுடன் இணைந்து அமைச்சராகவும், பிரதி அமைச்சராகவும் மற்றும் முக்கிய பொறுப்புகளிலும் உள்ளனர்.

*கே: மாற்றுக்குழுவினர் புதிய கட்சி ஒன்றை உருவாக்கி, அதன்கீழ் செயற்பட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என அறியக்கிடைத்தது. இது தொடர்பாக உங்களுக்கு ஏதாவது தகவல் கிடைத்ததா?*

ப: அவ்வாறான ஒரு தகவல் எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. எனினும், மாற்றுக் குழுவிலுள்ள உறுப்பினர்கள் இன்னும் கட்சியின் அங்கத்தவர்களாகவே செயற்பட்டு வருகின்றனர். கட்சியிலிருந்து வெளியேறவில்லை.

*கே: கொழும்பு மாநகரசபை தேர்தல் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெற உள்ளது. ஜே.வி.பிக்குள் இன்று பிரச்சினை ஏற்பட்டுள்ள நிலையில் நடைபெறவுள்ள தேர்தலில் பின்னடைவுகள் ஏற்படுமா?*

ப: எந்தவித தாக்கமும் செலுத்தாது. ஊடகவியலாளர்கள், நண்பர்கள் மட்டுமே எம்மிடம் தொடர்புகொண்டு கட்சிப் பிரச்சினை தொடர்பில் வினவுகின்றனர். சாதாரண குடிமகனோ அல்லது வாக்காளர்களோ இதில் அக்கறை செலுத்துவதில்லை.

*கே: தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் இடம்பெற்றுவரு கின்ற இனப்பிரச்சினை தீர்வு திட்டப்பேச்சு தற்போது 12 ஆவது சுற்றையும் தாண்டியுள்ளது. இது குறித்து?*

ப: இரண்டு தரப்பினரும் பொய் கூறிவருகின்றனர். வெறும் அரசியல் நாடகத்தையே கடந்த 8 மாதங்களாக அவர்கள் அரங்கேற்றிவருகின்றனர். உண்மையிலேயே தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும் விடயத்தில் அரசு இழுத்தடிப்பை மேற்கொண்டு வருகின்றது. அரசுக்கு உண்மையாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்திருந்தால், சர்வகட்சி மாநாட்டின் பின்னர் தயாரிக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை குப்பையில் தூக்கி வீசியிருக்காது.

அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் போலி நாடகத்தையே தமிழ் மக்கள் மத்தியில் அரங்கேற்றி வருகின்றது. தமிழ் மக்களுக்கு தங்களால் மாத்திரமே அரசிடமிருந்து அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்கமுடியும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறது கூட்டமைப்பு. அத்து டன், தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் தாங்களே என்றும், தங்களை விட்டால் வேறெவரும்இல்லைஎன்றும்பெருமை கொண்டுள்ளனர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர்.

*கே: இனப்பிரச்சினை தீர்வை தமிழர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசுடன் யார் பேச வேண்டும் ?*

ப: பேச்சு நடத்தியது போதும். எட்டு மாதங்களாகியும் இன்றுவரை உருப்படியான விடயங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மை என்பதால் பேச்சு போதும். இனிமேலும் பேச்சு நடத்தி காலத்தை வீணடிக்காது தீர்வை முன்வையுங்கள்.

*கே: பேச்சுவேண்டாம் என்கிறீர்கள். அப்படியானால் இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெறுவது எப்படி?*

ப: இனப்பிரச்சினைக்கு இதுதான் தீர்வு என்று தனது தீர்வு யோசனையை முன்வைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்கவேண்டிய தருணம் உருவாகியுள்ளது. ஜனாதிபதிதான் அரசின் யோசனையை முன்வைக்கவேண்டும்.

சர்வகட்சி மாநாட்டு அறிக்கைக்கு இன்று என்ன நடந்துள்ளது? 128 தடவைகள் கூடி ஆராய்ந்து தயாரிக்கப்பட்ட 110 பக்கங்களைக் கொண்ட சர்வ கட்சிக் குழுவின் அறிக்கை எங்கே உள்ளது? அன்று காலத்தை வீணடிப்பதற்காக அரசு மேற்கொண்ட தந்திரோபாய முறையே சர்வகட்சி குழுவாகும். அதே தந்திரோபாய நடவடிக்கையை அரசு இன்று மேற்கொள்ளத்தான் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. இது காலத்தை வீணடிக்கும் செயலாகவே கருதமுடிகிறது. அதனால் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வுயோசனையை அனைவர் முன்னிலையிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைக்கவேண்டும். அதை அனைத்துக் கட்சிகளும் ஆராய்ந்து அதிலுள்ள குறைநிறைகளைக் கண்டறிந்து தங்களது யோசனைகளை கட்சிகள் முன்வைக்கும் சந்தர்ப்பத்தில் அவற்றை செவிமடுத்து நடவடிக்கை எடுக்க அரசு தயாராக வேண்டும்.

அது மட்டுமன்றி பெடரல் அரசு மற்றும் முதலாளித்துவ அரசு முறைமையை முற்றிலும் மாற்றி, அனைத்து இனங்களும் ஏற்றுக்கொள்கின்றவாறான ஜனநாயகம், சம உரிமை ... மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச முறைமை உருவாக்கப்படவேண்டும். அதற்காக ஜே.வி.பியுடன் அனைவரும் கைகோர்க்கவேண்டும்.

## கவலைக் கடலும் கருணைக் கடலும்!



ஓவென்ற இரைச்சலுடன் கட்டிப் புரண்டு ஓடி வந்து தரையில் மோதி 'சலீர்' என்று திரும்பி ஓடும் அலைகள் நிறைந்தது அந்தக் கடற்கரை. கன்னத்தில் கைவைத்தபடி கரையில் உட்கார்ந்திருந்தார் பெரியவர் ஒருவர்.

''ஏன் சுவாமி இப்படி உட்கார்ந்து இருக்கிறீர்?'' என்று நயந்து கேட்டார் இன்னொரு பெரியவர்.

''கடலில் குளிக்க வேண்டும். கொஞ்சம் அலைகள் அடங்கி அமைதியானதும் குளிக்கலாம் என்றுதான் காத்திருக்கிறேன்'' என்றார் பெரியவர். நடக்கிற காரியமா இது!

'அலை எப்போ ஓய்வது.. தலை எப்ப மூழ்குகிறது' என்ற பழமொழி வாழ்க்கையின் ரத்தினச் சுருக்கம். இந்தக் கடல் அலைகள் பிறவிப் பெருங்கடலான சம்சார சாகரத்தின் அடையாளங்கள். இந்தக் கரு(ங்)கடலைக் கடப்பதற்கு என்றே தம் திருவடியாகிய தெப்பங்களுடன் கால் கடுக்க நிற்கிறார் ஒரு சுவாமி! அவர்தான் செந்தில் ஆண்டவர் என்று அழைக்கப்படும் சுப்ரமணியர். தம் தந்தையாருக்கு உரிய கைலாசத்தில் தங்காது, தாயாருக்கு உரிய மணித் துவீத்தில் இல்லாது, தமக்கே உரிய ஸ்கந்தகிரியிலும் வசிக்காது, உப்புக் காற்று வீசும் திருச்செந்தூர்த் தலத்தில் குடியிருக்கிறாராம் சுவாமி. எதற்கு?

தம் சுப்பிரமண்ய புஜங்கம் என்கிற தோத்திரப் பாடலில் பாம்பு நெளிகிற பாணியில் பாடும் புஜங்கம் ஒன்றை வயிற்றுவலியால் துடித்தபோது பகவத் பாதர் பாடினார் என்று சொல்வார்கள். சம்சாரமாகிய கடலைக் கடக்க நான் இருக்கிறேன் என்பதை விளக்கவே சமுத்திரக் கரையில் சந்நிதி அமைத்துக் கொண்டார் சுவாமி என்பது சுப்ரமண்ய புஜங்கத்தின் நான்காம் பாட்டின் பொருள்.

அலைவாய், திருச்சீர் அலைவாய் என்று அழகுத் தமிழில் வழங்கப்படும் திருச்செந்தூர் ஆறுபடை வீடுகளில் ஒன்று.. ''திருமணி விளக்கின் அலைவாய்ச் செருமிகு சேஎய்'' என்று அகநானூறும் ''வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்'' என்று புறநானூறும் பாடும் பழைய தலம் செந்தில்.

'சூரபதுமன் என்கிற ஆணவ அசுரனை வென்ற பின் ஜயம் குறித்த ஜயாபிஷேகம் செய்த ஜயந்திபுரம் செந்தி என்று ஆகி, செந்தில் ஆனது' என்பது சிலரது கருத்து. 'இங்கு இறைவனைத் தரிசிப்பது கயிலை மலையில் சிவனைத் தரிசித்த புண்யத்துக்கு நிகர்' என்ற அடிப்படையில் சற்குரு அருணகிரிநாதர், ''கயிலை மலையனை செந்தில் பதி'' என்று பாடியருளினார். தீபாவளிக்கு மறுநாள் முதல் தொடங்கி ஆறுநாள் விரதமிருந்து, சூரசம்ஹாரத்தைக் கண்டு, கடலில் நீராடி விரதத்தை நிறைவு செய்யும் கந்தர் சஷ்டிப் பெருவிழா இத்தலத்தில் நடக்கும் தனிப் பெரும் விழா.

ஸ்ரீ வைகுண்டத்தில் சைவ வேளாள மரபில் பிறந்து பெரும் புகழ் பெற்ற ஸ்ரீ குமரகுருபரர் ஐந்து வயது வரை பேசாநிலையில் இருந்தார். ஊமை என்றே உலகம் நினைத்தது. செந்தில் ஆண்டவர் சந்நிதியில் பிள்ளையை இட்டுப் பெற்றோர் அழுதபோது ''பூமேவு செங்கமலம்'' என்று குழந்தை பேசியது! ஊனப் பேச்சாக இன்றி ஞானப் பேச்சாகக் கந்தர் கலிவெண்பா பாடினார் குமரகுருபரர்.

பிரமனுடைய ஐந்து தலைகளில் ஒன்று சிவபெருமானால் கிள்ளப்பட்டது என்று ஒரு வரலாறு உண்டு. அப்படி பிரமன் இழந்த தலையை இங்குள்ள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மீண்டும் பெற்றான். மற்றும் அங்க சுந்தரி என்ற பாண்டிய அரசன் திருமகள் ஒருத்திக்குச் சாபத்தால் குதிரை முகம் வந்தது. இங்குள்ள தீர்த்தத்தில் நீராடி அவள் அழகு முகம் பெற்றாள். இதன் காரணமாக இங்குள்ள தீர்த்தம், 'வதனாரம்ப தீர்த்தம்' எனப் பெற்றது. கோயிலுக்குத் தெற்கே கடலோரத்தில் உள்ள நாழிக் கிணறு புண்ய தீர்த்தம். இது உட்பட கோயிலைச் சுற்றி காயத்ரி மந்திரத்தின் இருபத்து நாலு எழுத்துக்களைக் குறிக்கும் வகையில் இருபத்து நாலு புண்ய தீர்த்தங்கள் உள்ளன என்பது ஐதீகம்.

'இலை விபூதி' திருச்செந்தூரின் இன்னொரு சிறப்பம்சம். விபூதிப் பிரசாதத்தைப் பன்னீரிலையில் மடித்துத் தருவார்கள். அந்த இலையில் பன்னிரு நரம்புகள் ஓடுவதால், பன்னிருகரத்தால் ஆறுமுகன் தருகிற அருட்பிரசாதம் அது என்று விசேஷமாகக் கருதப்படுகிறது. திருச்செந்தூரில் சந்தனப் பிரசாதமும் தனிச்சிறப்புடையது.

மேளதாளங்கள் முழங்க, பக்தி ஆவேசத்தோடு பால்காவடி ஏந்தி வருகிற பக்தர்கள் வெளிப்படுத்தும் ஆனந்த நிலையும், அங்கப் பிரதட்சணம் செய்யும் அன்பர்கள் அநுபவ நிலையும் உணர்ந்து உருக வேண்டியவை.

தமிழின் பழைய இலக்கியமாகிய திருமுருகாற்றுப்படையில் செந்திலம்பதியில் அறுமுகத்துடன் கூடிய இறைவர் திருப்புகழே பேசப்படுகிறது. இருள் படர்ந்த உயிர்களுக்கு ஒளிதரும் ஒருமுகம், வேண்டி வருவோர் வேண்டுவது வழங்கும் வரம் தரும் ஒருமுகம், அந்தணர் வேள்வியை ஆதரித்து அருளும் ஒருமுகம், விளங்க முடியாதவற்றை விளங்க வைக்கும் ஞானகுருவாக ஒருமுகம், எதிரிகளை வீழ்த்தும் வெற்றித் திருமுகமாக ஒருமுகம், வள்ளியின் மொழி கேட்டுப் புன்னகை புரியும் காதல் மலர்ந்த ஒருமுகம் என்று ஆறுமுகங்களை வர்ணித்தார் நக்கீரர்.

இப்படியே முருகப் பெருமான் தோள்கள், திருமார்பு, தொடைகள் என்று திருவுருவ அழகைத் திருமுருகாற்றுப் படை 90 ஆவது வரி தொடங்கி 125 ஆவது வரி வரை வர்ணிக்கிறது.

இந்தத் தலத்தின் இறைவர் மீது பிரபந்தங்கள் பல உண்டு. எனினும் நேயர் விருப்பமாக முருகனே வலிந்து கேட்ட நூல் ஒன்று உண்டு! அது திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ். பகழிக் கூத்தர் என்ற பரம வைணவரை பாடுபடுத்தி பாட்டு வாங்கிக் கொண்டார் செந்தில் ஆண்டவர். திருமாலை அன்றி வேறு தெய்வம் தொழுதறியாத பரம வைணவர் பகழிக் கூத்தர். பாட்டு வல்லார். அவர் தமிழ் மீது தனிக்காதல் முருகனுக்கு. அவர் மூலம் தன் புகழ் கேட்க அவா. ஆனால் வைணவர் மசிவதாக இல்லை. வயிற்றில் வலியை வரவழைத்து, திருமாலைத் தனக்காகப் பரிந்துரை செய்யச் சொல்லி இறுதியில் பிள்ளைத் தமிழ் பாடவைத்தான் செந்தமிழ்ச் செந்தில்நாதன்.

**சுகி. சிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் தெற்குப் பிரதேச சபையால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு விசேட வாசிப்புக் கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் இதனைத் திறந்து வைத்த பின்னர் பார்வையிடுகிறார்.
(ம–86)

# பொதுச் சுகாதாரப் பரிசோதகருடன் ஒத்துழைத்தால் பிரதேச மக்கள் கூடிய சுக நலன்களைப் பெறலாம்

## சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.04

பிரதேச மக்களின் சுகாதார நலன்களின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் பங்களிப்பு அதிகமாக உள்ளது. இதற்குப் பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு ஒத்துழைப்பு வழங்கினால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சுகாதார நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ளவாய்ப்பாக அமையும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கே.சிவராணி. உலக விலங்கு விசர்நோய் தினத்தை முன்னிட்டு யாழ்.சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு தியாதிகள் அறக்கொடை நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

பொதுமக்கள் மத்தியில் நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது கட்டாயமாக உள்ளது.

இது மிகவும் கடினமான விடயமும் கூட. தனியொருவரின் பிரச்சினை மட்டுமல்லாது பிரதேசங்கள் சார்ந்த பிரச்சினைகளாக இருப்பதால் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டிய கடமை உள்ளது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் தமது கடமையைச் செய்யும் போது மக்கள் ஒத்துழைப்பு வழங்காமல் ஏனோதானோ என்று இருந்தால் எந்தவித பயனும் கிடைக்காது.

அவர்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் மக்களின் நலன்களைக் கருத்தில்கொண்டே இடம் பெறுகிறது என்பதை முதலில் உணர வேண்டும்.

நோய் தொடர்பான விழிப்புணர்வு சமூகத்தவரிடையே ஏற்படுமானால் ஆரோக்கியமான மாவட்டமாக யாழ். மாவட்டத்தை மாற்றியமைக்க முடியும் என்றார். (ம-313)

# மனித வரலாற்றை முன்னெடுத்துச் செல்லும் வலிமை புத்தகங்களுடன் வாழ்பவர்களுக்குத்தான் உள்ளது

## மகாஜனக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் உரை

சுன்னாகம்,ஒக்.4

புத்தகங்களோடு வாழ்பவர்கள் தான் மனித வரலாற்றை முன்னெடுத்துச் செல்லும் வலிமை மிக்கவர்களாவர்.

அத்தகைய அறிவுச்செழுமை மிக்கவர்களால்தான் கடந்த வரலாறு நகர்ந்துள்ளது. இனியும் அத்தகையவர்களே வரலாற்றை வழிநடத்தப் போகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் மகாஜனக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் சிவமலர் அனந்தசயனன்.

சுன்னாகம் பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி விசேட வாசிப்புக் கூடம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு வலி. தெற்குப் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நூலக தின உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனித வாழ்வில் விழுமிய பண்புகளை வளர்ப்பதில் நூல்கள் பெரும் பங்காற்றுகின்றன. நூலகம் வெறுமனே நூல்கள் வைக்கப்படும் இடமன்று. அவை மனித ஆன்மாவுக்கு மிகச் சிறந்த மருத்துவமளிக்கும் மருத்துவ நிலையமுமாகும்.

ஒவ்வொரு சமூகத்திலும் நூலகங்களின் வகிபாகம் காத்திரமானது. நூலகம் சம்பந்தமான விடயங்கள் தொடர்பில் ஒவ்வொருவருக்கும் விழிப்புணர்வு ஊட்டப்படுவது அவசியமாகும்.

அவ்வகையில் விசேட காட்சிக் கூடம் செயற்படுவது சமூக முக்கியத்துவம் மிக்கதாகும். 47 ஆண்டுகளாகச் சுன்னாகம் பொது நூலகம் அறிவாற்றல் மிக்க சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதில் சிறப்பான முதன்மைப் பங்களிப்பை வழங்கியுள்ளது.- என்றார்.

இந்த நிகழ்வில் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் து.குலசிங்கம் பயனுள்ள இறுவெட்டுக்களை நூலகத்துக்கும், விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்துக்கும் கையளித்தார். (ம-38)

# பாடசாலை மாணவர்கள் துன்புறுத்தப்பட்டால் அச்சமின்றி அதனை வெளிப்படுத்த வேண்டும்

## நடவடிக்கை எடுக்க இது உதவும் என்கிறார் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்

சுன்னாகம், ஒக்.4

பாடசாலை மாணவர்கள் எவ்வகையிலேனும் துன்புறுத்தப்பட்டால் அச்சமின்றி அதனை வெளிப்படுத்த வேண்டும் என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் இணுவில் மத்திய கல்லூரியில் கல்லூரியின் அதிபர் அ.சதானந்தன் தலைமையில் சிறுவர் தின விழா இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

பல்வேறு வழிகளிலும் சிறுவர்கள் துன்புறுத்தப்படுவது பற்றி அண்மைக் காலத்தில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

சிறுவர்கள் நாளைய சமூகத்தின் முக்கிய பிரஜைகளாவர். அவர்கள் எவ்வகையிலேனும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பெரியவர்களது கடமையாகும்.

எங்கேயாவது சிறுவர்கள் துன்புறுத்தப்பட்டால், துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டால் அச்சப்படாது முதலில் பெற்றோருக்குத் தெரியப்படுத்த வேண்டும். அடுத்து நெருக்கமான உறவினர்கள், ஆசிரியர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அவர்கள் மூலம் நடவடிக்கை எடுத்து துன்புறுத்துபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடியும்.- என்றார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஷாந்த பண்டார, உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகியோரும் இந்த நிகழ்வில் உரையாற்றினர். (ம-38)

# உடுவில் பிரதேச சிறுவர் தினப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஒக்.4

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு உடுவில் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பிரதேச பாடசாலைகள் மட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

**கட்டுரை**

கீழ்ப்பிரிவு- வி.கஜன்சிகா- ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், இ.கோபிகா - சுன்னாகம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம், ஏ.ஜனனி - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, ம.கீர்த்திகா- சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம்.

மத்திய பிரிவு - சி.கம்ஷாயினி-இணுவில் இந்துக் கல்லூரி, செ.ஷாலினி - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, உ.உதயதர்சினி - சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

மேற்பிரிவு - இ.றெனோஜா - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, த.சுகிதா - இணுவில் இந்துக் கல்லூரி, ம.தர்சிகா - இணுவில் மத்திய கல்லூரி.

**கவிதை**

கீழ்ப் பிரிவு- பா.திலக்சனா-மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, தே.சனுஜியா -இணுவில் மத்திய கல்லூரி, ச.சஜீவன் - சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

மத்திய பிரிவு - கு.நிலாந்தினி-சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம், ம.மதுஷா - இணுவில் மத்திய இந்துக் கல்லூரி, பா.பாலஜீவன் - இணுவில் மத்திய கல்லூரி, இ.டெனா - ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்.

மேற்பிரிவு - கோ.சங்கீரனா - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, க.வினுசியா - சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யூ.சஜீவினி - இணுவில் மத்திய கல்லூரி. (ம-86)

# காரைநகரில் மாதர் சங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.4

காரைநகர் தென் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் புதிய மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சங்கத்தின் தலைவியாக திருமதி ம.புஸ்பராணியும் செயலாளராக திருமதி கி.நேசமலரும் பொருளாளராக செல்வி வி.வேதமனோகரியும் உப தலைவராக திருமதி ச.சந்திராவும் உப செயலாளராக செல்வி தே.தியாகினியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக சி.கலா ஜெ.சோபா, ர.கிருஸ்ணவேணி, கி.றோகினி, ச.அஜந்தா, க.நித்தியலட்சுமி, கி.லோகேஸ்வரி, ச.இரத்தினமலர் ஆகிய எட்டுப் பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-250)

# இலங்கையின் வரலாற்றை மீட்டிப் பார்த்தல்

## 1640 ஆம் ஆண்டு முதல் 1900 வரை



பிரிட்டன் நூலகம் மற்றும் பிரிட்டன் பேரவையால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலங்கையின் வரலாற்றை மீட்டிப் பார்த்தல் என்ற பெயரிலான கண்காட்சி பிரிட்டன் தெரிவுகளில் இருந்து எடுக்கப்பட்ட, கிட்டத்திட்ட 300 வருடங்களுக்குரிய இலங்கையின் வரலாற்றை உள்ளடக்கக் கூடிய வகையில், 150 இற்கு மேற்பட்ட இலத்திரனியல் உரு மாதிரியான தோற்றங்களை கொண்ட ஓலைச்சுவடிகள், வரைபடங் கள், அச்சு வடிவங்கள், சித்திரங்கள், நிழற்படங்கள் மற்றும் ஏனைய கலைத் தொழிற்பாடுகளமைந்த பொருள்கள் ஊடாக தனித்துவமான அரிய தெரிவு களை காணக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

இந்தக் கண்காட்சி பலதரப்பட்ட வழிகளில் இலங்கையால் ஊக்குவிக்கப்பட்ட வெளிநாட்டு, உள்நாட்டு கலைஞர்களால் ஆவணப்படுத்தப்பட்ட, இந்தநாட்டு மக்களை, தரைத் தோற்றங்களை மற்றும் கலாசாரங்களை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

இலங்கை பற்றிய ஐரோப்பியர்களின் கவர்ச்சிக்கு ஆரம்பத் தூண்டுதலாக அமைந்தவை.

தெற்காசியாவில் காலணித்துவ மேலாதிக்கத்தை மேம்படுத்தும் வகையில் போர்த்திறன் நடவடிக்கை சார்ந்த பிரச்சினைக்குரிய முக்கிய பகுதிகளை அடையாளப்படுத்துதலும், ஐரோப்பாவின் வர்த்தக பலத்தை மேம்படுத்துவதற்காக எல்லையற்ற இலாபம் தரக்கூடி வாசனத் திரவி யங்களுக்குரிய மூலங்களை கண்டு கொள்வது மேயாகும்.

காலணித்துவ ஆட்சிக் காலப் பகுதியில் ஐரோப்பியர்கள் நாட்டி னுடைய வனப்பு மற்றும் அதனுடைய வளமார்ந்த கலாச்சாரத்தைப் பற்றி அதிகளவு தெரிந்து கொள்ள முற்பட்டதுடன், அவற்றைப் பதிவு செய்வதற்குமான முயற்சிகளையும் எடுத்துள்ளார்கள். இப்பதிவு செய்தல் முயற்சி, தொல்பொருள் துறையில் இருந்து இயற்கை வரலாற்றுத்துறைவரை காணப் பட்டது.

இந்த நூற்றாண்டு காலப் பகுதியில், ஐரோப்பிய வாடிக்கையாளர்களினதும், அதன் சந்தையின் பெருக்கமானதும் இலங்கைக்கேயான சொந்த துடிப்பு டைய கலைக்குரிய பாரம்பரிய பொருள்களுக்கான தேவைகளை அபிவிருத்தி செய்தன.ஐரோப்பா மற்றும் இலங்கைக்கு மிடையிலான நீண்டகால தொடர்பு களின் பெறுபேறு காரணமாக, தரமான தும் வேறுபட்ட பாரம்பரிய வடிவங்களையுடைய படைப்புக்களையும் பெறக் கூடியதாக இருந்தது. இவை காலணித்துவ ஆட்சிக் காலத்தில் வசீரகரிப்பும், அர்த்தமுள்ளதுமான இலங்கையின் ஆழ்ந்த வரலாற்றை வழங்குகின் றன.

இலங்கையின் வரலாற்றை மீட்டிப் பார்த் தல் என்ற கண்காட்சியானது, பல் வேறுபட்ட பிரதான பிரிட்டன் தெரிவு களில் இருந்து பெறப்பட்ட பொதுவான மரபுரிமை சார்ந்த, தனித்துவமான தெரிவுகளைக் கொண்ட இலத் திரனியல் உரு மாதிரியான தோற்றங்களையு டைய ஆவணங்களை இலங் கையின் பார்வை யாளர்களுக்கு வழங்குகின்றது.

இக்கண்காட்சி ஒக்ரோபர் 5ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி உலக திரட்டல்கள் நிகழ்ச் சித் திட்டத்தின் அனுசரணையுடன் பிரிட்டன் நூலகம் மற்றும் பிரித்தானிய பேரவையால் தயாரிக்கப்பட்டது.

உலக திரட்டல்கள் நிகழ்ச்சியானது பிரிட் டன் அரசின் அனுசரணையுடன், பரஸ்பர தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு, சிறந்த அடைவுத் தன்மை கொண்ட தொகுப்புக்கள் மற்றும் பிரிட்டன் தொகுப்புக்களின் கிடைப் பனவை பரந்தளவிலான சரிவதேச பார்வையாளர்களுக்கு கிடைக்கக் செய்வதற்கும் வழி வகுக்கின்றது.இந்தக் கண்காட்சியின் முடிவில் அனைத்து காட்சிப் பொருள்களும் பெருமளவிலான இலங்கையின் பார்வையாளர் களை சென்றடைவதற்காக மரபுரிமைகள் அமைச்சுக்கு அன்பளிப்பாக வழங்கப்படும். இந்தக் கண் காட்சியினுடைய இணையத்தள பதிப்புருவின் கிடைப்பனவு பிரிட்டன் பேரவையால் மேற் கொள்ளப்படும்.

ஜோன் பெல் கோணர் மற்றும் மெனிக்கா வான் டீர் போர்ரீன் ஆகிய இருவரும் இக் கண் காட்சியினுடைய இணைக்காப்பாளர்களாகின்றனர்.

ஜோன் பெல் கோணர், கட்புலக் கலையில் பிரதான காப்பாளராகவும், பிரிட் டன் நூலகத்தின் நிழற்படக் கலையின் காப்பாளராகவும் செயற் படுகின்றார். இவர் ஆசியாவில் நிழற் படத்துறை வரலாற்றில் சிறந்த வல்லுனராக உள்ளார்.

இலங்கையின் பிரிட்டன் பேரவையால் 2000 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மீளுருவாக்கம் என்ற நில அளவீடு தொடர்பான நிழற்படக்கண்காட்சி உட்பட இங்கிலாந்து மற்றும் சர்வதேச ரீதியில் வரலாற்று ரீதியிலான பல நிழற்படக் கண் காட்சிகளை மேற்கொள்வதற்கு உறு து ணை யா க இவர் இருந்துள்ளார்.

மெனிக்கா வான் டீர் போர்ரீன் என்பவர் இலங்கையை மையமாகக் கொண்ட ஒரு நிழற்படக் கலைஞர்; விரிவுரையாளர் மற்றும் சுயமாக தொழிற் படுகின்ற கலை முகாமையாளருமாவார். இந்தக் கண் காட்சிக்கான அனுசரணையை மரபுரிமை அமைச்சு மற்றும் கண்டி சிட்டி சென்டர் ஆகியன வழங்குகின்றன.

---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் செல்லத்துரை துரைரத்தினம் (சாந்தா)**

[முன்னாள் கணக்கு இலிகிதர்
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம் – கிளிநொச்சி]

| மண் மகிழ | மனம் நெகிழ |
| --- | --- |
| 18.12.1948 | 04.09.2011 |

*அன்னை மடியில் நல்லவராக செயல் வீரராக வந்துதித்து
சிரித்த முகத்துடன் துள்ளித் திரிந்தீர் எம் கண்முன்னே இருப்பீர் – என
இருந்த வேளை திடீரென காலன் இட்ட கட்டளையை –
ஏற்று எமைப் பிரிந்தீர் – எம்மிடம் நீர் வருவீர் என இருக்க இடியாக வந்தது – உம்
மறைவுச் செய்தி அன்றிலிருந்து நீர் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உமது அழியாத நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில் அணையாத
தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும்
என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

கமலா வைத்தியசாலை
கொக்குவில்.

Dr. க.ஸ்ரீதரன்
குடும்பத்தினர்.

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
11.03.1956

மறைவு
15.10.2010

**அமரர் ஐயாத்துரை தர்மரத்தினம்**

திதி: அட்டமி

சீரார் செழுந்திருவும் தேன் வார்க்கும் வாய்மொழியும்
வேராய் இருந்தெம்மை வாழ வைத்த வடிவும் போய்
ஓராண்டாய் ஆனதையா உள்ளம் இன்னும் வெம்புகின்றோம்
நீராய் விழும் கண்ணீர் உம் ஆத்மா சாந்தி பெற
வளர்பிறைக்கு நிகர்த்த முகம் வாய்ப்பேச்சில் ஒரு நேர்மை
தளர்வறியா செம்மை மனம் தாழ்வறியா உயர் வாழ்வு
இளந்தேனீ போல் உழைப்பு எமக்கென்றே அர்ப்பணித்து
விளக்கொளியாய் நீர் மறைந்து வீழ்ந்ததையா ஓராண்டு

வீரபத்திரர் கோயிலடி,
மல்லாகம்.

குடும்பத்தினர்.

---

### பாதுகாப்பு சேவைக்கு விண்ணப்பம் கோருதல்

மேற்படி சங்கானை வர்த்தகர் கைத்தொழில் உரிமையாளர் சங்கம் தமது வர்த்தக நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு 18-55 வயதுக்குட்பட்டவர்களிடம் இருந்து பாதுகாப்பு சேவைக்கு விண்ணப்பம் கோருகின்றது. விண்ணப்பம் அனுப்ப வேண்டியவர்கள் 12.10.2011 இற்கு முன் தலைவர், சங்கானை வர்த்தகர் கைத்தொழில் உரிமையாளர் சங்கம், சங்கானை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றனர்.

தலைவர்
சங்கானை வர்த்தகர் கைத்தொழில்உரிமையானர் சங்கம்,
சங்கானை.

---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



**அமரர் செல்லத்துரை துரைரத்தினம் (சாந்தா)**

(முன்னாள் கணக்கு இலிகிதர்
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம் – கிளிநொச்சி)

மண் மகிழ
18.12.1948

மனம் நெகிழ
04.09.2011

எமது அன்புத் தெய்வத்தின் உயிர் பிரிந்த வேளை தோளோடு தோள் நின்று உதவிய நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள், வைத்திய அதிகாரி, வைத்தியர்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அன்னாரது இறுதிக் கிரியையில் கலந்து மலர் வளையங்கள், மலர்கள், மலர் மாலைகள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர்களுக்கும், பத்திரிகைகள் மூலம் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர்களுக்கும், இரங்கல் உரைகள் நிகழ்த்தியவர்களுக்கும், தொலைபேசி, தந்திகள் மூலம் துன்பத்தைப் பகிர்ந்துகொண்டு ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எம் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (04.10.2011) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கருவேலடி லேன், கொக்குவில்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 5 ஆம் ஆண்டு நினைவலைகளில்

திருமதி **கந்தவனம் தவமணி**



தோற்றம்
26 ★05 ★1933

மறைவு
30 ★09★2006

அம்மம்மா..........
அன்பிற்கெல்லாம் உன்னைப் போல்
ஒரு கோயில் இங்கேதும் இல்லையம்மா.....
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உன் நினைவோடு:
கணவர், பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மூத்தவிநாயகர் கோயிலடி,
கரணவாய், கரவெட்டி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
23 . 04 . 1928



ஆண்டவன் அடியில்
15 . 10 . 2010

**இராமலிங்கம் கந்தையா**
(ஓவசியர்)

திதி. அட்டமி (4.10.2011)

*ஓராண்டு கடுகதியாய் விரைந்து விட்டதப்பா*
*எனினும் உங்கள் அழகான புன் சிரிப்பு*
*மறையவில்லையப்பா*
*என்றும் எங்கள் நெஞ்சில் நிறைந்திருக்கும்*
*எங்கள் குடும்ப விளக்கு.*

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

4 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.

குடும்பத்தினர்.

## கேதார கௌரி பூசைகள்

ஆனைக்கோட்டை வீரமா பிடாரி அம்பாள் ஆலயத்தில் கேதாரகௌரி விரத்தின் விசேட பூசைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமைவரை நடைபெறவுள்ளது.

இடம்பெறும் கிரியா காலத்தில் காலை 8 மணிக்கு அபிஷேகம் ஆரம்பம், காலை 8.45 மணிக்கு மூலமூர்த்தி பூசை, காலை 9 மணிக்கு விரதகாரர் சங்கற்பம், காலை 9.15 மணிக்கு தீபாராதனை பஞ்சமுக அர்ச்சனை, முற்பகல் 10.30 மணிக்கு பிரதக்சணம், ஹோம சமர்ப்பணம், தொடர்ந்து வேத பாராயணம், ஸ்தோத்திர பாராயணம், ஆசிர்வாதம், மங்கள ஆராத்தி, முற்பகல் 11 மணிக்கு விரதகாரர் அன்பர்கள் வழிபாடு, பாராயணம் என்பன இடம்பெறும்.
(ம-313)

## சேவை

Singapore, UK போன்ற நாடுகளுக்கான கற்கையுடன் கூடிய வேலைவாய்ப்பு.
தொடர்பு: 0779692434

## தவறிவிட்டது

அம்மன் வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த சிவலிங்கம் சிவராஜ் என்பவருடைய தே.அ.அ.(இல 880222287V)யாழ் நகரில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட விலாசத்தில் தொடர்பு கொண்டு ஒப்படைத் துதவவும். T.P:0778446465

## பணிநிலை வெற்றிடம்

Elephant House இல் ஐஸ்பழ வியாபாரம் செய்வதற்கு முச்சக்கர வண்டிச் சாரதிகளும், ஐஸ்பழவானில் வியாபாரம் செய்வதற்கு விற்பனையாளரும் தேவை.
தொடர்பு: 0214918407
இல.56, மணிக்கூட்டு ஒழுங்கை,
(நீராவியடி), யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 7 சிறி.... எனும் தொடரிலக்கமுடைய ஒக்ஸ்போட்கார் சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. (பொருள்கள் பூட்டிய நிலையில்)
தொடர்பு: 0771726840

## வீடு வாடகைக்கு

புலவர் வீதி,நவாலி வடக்கு மானிப்பாய் என்னும் முகவரியில் அமைந்துள்ள 7பரப்புக் காணியில் அமைந்துள்ள 3அறைகள் 2விறாந்தைகள், குளியல் அறை, வாகனத்தரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. மாதவாடகை 3000/=முற்பணம் 200000/=
தொடர்பு: 0778350478

## ஆசிரியர் வே. அன்பழகன்

அவர்களின்
தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012
தரம் - 4 வகுப்பு (தற்போது தரம் -3 )
ஆகியன ஆரம்பமாகின்றன.

| | |
|---|---|
| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
| அன்பொளி கல்வியகம் | அன்பொளி கல்வி நிலையம் |
| யாழ். இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். | தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. |

அனுமதிகளை 08.10.2011 இற்கு முன்னதாக உடன் பெற்றுக்கொள்ளவும்
இயக்குநர்கள்.

## பெயர் மாற்றம்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி உதயகுமார் சுவாதினி ஆகிய நான் 03.10.2011 முதல் எனது பெயரை திருமதி. உதயகுமார் சுவாசினி எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

திருமதி உதயகுமார்
சுவாசினி

## மரண அறிவித்தல்

### ஞானப்பிரகாசம் மகேந்திரன்
(பெயின்ரர்)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் நீதிமன்ற வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் மகேந் திரன் நேற்று (03.10. 2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவநேசத்தின் (கருமணி) அன்புக் கணவரும் சாந்தநாயகி, சுரேஸ் குமார் (தொழிலாளர்களின் மேற்பார்வை யாளர் ஆர்.டி.ஏ கிளிநொச்சி), சுபாஜினி, சுகாஜினி ஆகியோரின் அன்புத்தந்தையும், தவச் செல்வம், எழிலரசி (செக்கோ நிறுவனம்) சிவாநந்தன் , (சீலன்- மெக்கானிக்) பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமனும், டெவின்சிகா, டெமின்சிகா, திருசாளினி, திகழோவியன், தியாணன், திகழிசை, கவித்மன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2011) செவ்வாய்க் கிழமை ந.ப.12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர். (8912)

எமது மண்ணிலேயே பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்து Degree Certificateயை வழங்கிவரும் தன்னிகரற்ற தனித்துவமான நிறுவனமாக எப்போதும் விளங்கிவரும் **NORTH LANKA IIT & LANKA CITY CAMPUS**
விஜய தசமியை முன்னிட்டு வழங்கும்

# SPECIAL OFFER!

**COURSES :-**

**B.Sc. in Computer Science**
Duration: 3 Years(O/L) or 2 Years(A/L) or 01 Year(HND|Adv. Dip.)

**B.Com. with Computer Application**
Duration: 3 Years(O/L) or 2 Years(A/L) or 01 Year(HNDA|Adv. Dip.)

**Post Graduate Diploma in Comp. Sc. >> M.Sc.**
Duration: 01 Year (Any Degree)

இச் சலுகை 06-10-2011 வரை மட்டுமே!

தேசிய சேமிப்பு வங்கிகளில் பணிபுரியும் எமது பட்டதாரி மாணவர்கள் எமது Degree Certificate மூலம் பதவிநிலைகளில் தரமுயர்த்தப்பட்டுள்ள செய்தியை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் பெருமையடைகின்றோம்!



No.01 British Qualification

முன்னுரிமை அடிப்படையில்...
Course Fee ல் 10% - 50% வரை Special Offer!
பதிவுகளுக்கு முந்துங்கள்...



வெகுவிரைவில்...
Sri Lanka Isles International University(SLIIU)
யாழ் மண்ணில்....


**NORTH LANKA IIT**
#113, NAVALAR ROAD, JAFFNA.
Phone: 021 567 7774

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தியின் கோட்பாட்டின் அடிப்படையில் தோற்றம் பெற்ற காந்தியூர் சனசமூக நிலையம்

வடமராட்சிப் பிரதேசத்தில் புலவர்கள் ஒலி கேட்கும் புலோலியில் காந்தியூர் எனும் கிராமத்தில் கடந்த 63 வருடங்களாக நல்லறிவு, நல்லொழுக்கம், ஒற்றுமை, பாரம்பரியக் கலாசாரம் என்பவற்றைக் காந்தியூர் சனசமூக நிலையம் வளர்த்து வருகிறது.

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதியின் அல்வாய்க் கிராமத்திற்கும், புலோலிக் கிராமத்திற்கும் ஊரெல்லையாக அமைந்துள்ள தெரு மூடி மடத்தடியில் இருந்து தம்பசிட்டிக்குச் செல்லும் பாதையில் மத்தியில் அமைந்துள்ளது. காந்தியூர் ச.ச. நிலையம் முன்னைய காலங்களில் பருத்தித்துறை -யாழ்ப்பாணம் இடையே பயணம் செய்யும் வழிப்போக்கர்கள் தங்கிச் செல்வதற்காகக் கொடைவள்ளல் தினகர உடையார் என்பவரால் தெருவை மூடி ஒரு மடம் அமைக்கப்பட்டிருந்தது. இதுவே தெரு மூடிமடம் எனப்பெயர் பெற்றது. தற் போது இந்தத் தெரு மூடிமடம் அழிக்கப்பட்டுள்ளது.



காந்தியூர் கிராமமானது முற்காலத்தில் முன்னேற்றம் காணமுடியாது இருந்தது. காந்தியூர் என இந்த கிராமம் பெயர் பெறுவதற்கு முன்னதாக இந்தக் கிராமம் வத்துப்பளை என அழைக்கப்பட்டிருந்தது. வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் மரபுவழி வந்த கண்ணகை அம்மன் கோயில் ஒன்று இருந்ததால் காந்தியூர் கிராமம் வத்தாப்பளை என பேச்சு வழக்கில் அழைக்கப்பட்டு வந்தது. முன்னேற்றம் அபிவிருத்திகளைக் காணாத இந்தக் கிராமத்தில் 1940 களில் தமிழ், ஆங்கில மொழிகளைக் கற்ற ஒருசில புத்திஜீவிகள் உருவானார்கள். அந்தப் புத்திஜீவிகளில் ஒருவரும் கல்வி அறிவில் சிறந்து விளங்கிய ஓய்வுபெற்ற அதிபராக சோதிமாஸ்ரர் என அழைக்கப்படும் நாகபர் கந்தையா அகிம்சா மூர்த்தி மகாத்மா காந்தியின் அகிம்சை வழியினைப் பின்பற்றி வந்தார்.

'' ஒரு நூல் நிலையம் திறந்தால் ஆயிரம் சிறைச் சாலைகள் மூடப்படும்'' என்ற காந்தியின்கோட்பாட்டின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்ட அவர் இந்தச் சனசமூக நிலையம் உருவாகுவதற்கான ஒரு நூல்நிலையம் ஒன்றை சிறிய கொட்டகையில் ஆரம் பித்து வைத்தார். இந்த நூல் நிலையத்தை அமைக்க சோதிமாஸ்ரருக்கு பக்கபலமாக ஏனைய அறிஞர் பெருமக்களும், அவரின் நண்பர்களுமான அமரர்கள் க.வேலாயுதம், க.சுப்ரமணியம், வே. கணபதிப்பிள்ளை மற்றும் வே. பசுபதி, சு.பசுபதி, ச.இராசையா , சி.பரஞ்சோதி, க.மாணிக்கவாசகம் ஆகியோரும் இருந்தார்கள். இந்த நூல் நிலையம் சனசமூக நிலையமாக மாற்றமடைந்தது.

வத்தாப்பளை சனசமூக நிலையத்தை நிர்வகித்து வந்த சோதி மாஸ்ரர் தலைமையிலான இந்தக்கிராமத்து புத்திசாலிகள் குழு மகாத்மாகாந்தியின் பெயரையே வத்தாப்பளை கிராமத்துக்கும் சனசமூக நிலையத்துக்கும் சூட்டினார்கள். கடந்த 1948 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வத்தாப்பளை கிராமத்துக்கு காந்தியூர்என்றும், சனசமூக நிலையத்துக்கு காந்தியூர் சனமூக நிலையம் எனவும் பெயர் சூட்டப்பட்டது. அதே தினத்தில் காந்தியூர் சனசமூக நிலையம் எனப்பதிவு செய்யப்பட்டு பதிவு இலக்கமும் பெறப்பட்டது. கிராமத்திற்கும், சனசமூக நிலையத்துக்குமென புதிய பெயர் சூட்டப்பட்டதும் இது தொடர்பாக அனைத்து அரச திணைக்களங்களுக்கும், பொது அமைப்புக்களுக்கும், கிராமாட்சி மன்றத்துக்கும் சனசமூக நிலைய நிர்வாகக் குழுவினர் அறிவித்து கிராமத்திற்கான புதிய பெயரைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருந்தனர். இந்தப் புதிய பெயர்மாற்றத்துடன் இந்தக்கிராமம் புத்துணர்வும், புத்தெழுச்சியும் பெற்றுக் கொண்டது.சோதிமாஸ்டரைத் தொடர்ந்து அமரர் நா.கந்தையாவின் மேற்பார்வையில் ஒரு சில ஆண்டுகள் காந்தியூர் சனசமூக நிலையம் இயங்கியது.

அவரின் மேற்பார்வையில் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களால் சனசமூக நிலையம் சிறப்பான முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

**கர்ணன்**

(தொடரும்)

நெஞ்சைவிட்டு நீங்காத நினைவுகளுடன்
## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி சின்னத்தம்பி கண்மணி



ஏழாண்டென்ன...?
ஓராயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
சீர்போற்ற வாழ்ந்த என் - தாயின்
சீர்முகம் என் சிந்தையை விட்டு
அகலாது...!

மகன் - சி.குமார்
மருமகள்- சத்தியா
கோப்பாய் வடக்கு, பூதர்மடம்.

தோற்றம்: 13.08.1932
மறைவு: 06.10.2004

Children's World
Child Development Centre
பாலர் பாடசாலை
சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின்
சிறுவர் செயலகத்தின் தேசிய கொள்கைக்கு அமைவானது.
Open The Door To Your Child's Future
- Language Development
- Knowledge Development
- Skill Development
- Values Development
- Speach & Drama Class
- Gama Abacus in Rainbow Programme
(மனக்கணிதம், ஞாபக் கலை என்பவற்றை விருத்தி செய்யும் விசேட பயிற்சி நெறி)



வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு அனுமதிக்கட்டணம் இல்லை
ஒவ்வொரு தவணையும் இலவச கல்வி சுற்றுலா
விஜய தசமி அன்று புதிய அனுமதிகள் 06.10.2011
அனுமதிகள் 2 1/2 வயது முதல்



Play - bassed " Learning Through Play"
British curriculum
No 14, 2nd Lane, Palaly Road, Jaffna. T.P :- 0777729525

## மரண அறிவித்தல்
### குமரையா இராஜலிங்கம்
### (சக்தி)



(ஓய்வுபெற்ற அரச ஊழியர்-கச்சேரி)

யாழ். சுண்டுக்குளி சந்தனமாதா கோயில் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமரையா இராஜலிங்கம் 29.09. 2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரையா-அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவண முத்து- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் மற்றும் கிருஷ்ண பவானி (றாதா)வின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான நடராஜா, ஜானகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் தவமணிதேவி, கண்ணபிரான் (கண்ணன்), இராமச்சந்திரன்(றவி), கௌரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சத்தியபாமா (லண்டன்) முருகானந்தன் (பிரான்ஸ்), கணேசானந்தன் (ஜேர்மனி), பாரதி (ஹொலன்ட்), காலஞ்சென்ற விவேகானந்தன் ஆகியோரது பாசமிகு தந்தையும சுரேஸ் (லண்டன்), வாசுகி (பிரான்ஸ்), சுசிப்பிரியா(ஜேர்மனி), விஜயகுமார் (ஹொலன்ட்), ஆகியோரது மாமனும் செந்தூரன், கிரன், நிறோஷ், சாரனன், எழில், ஆதிரன், நிலானி, அபிஷா, ஹரணி, அர்ச்சயன், விஷால், வைஷ்ணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.10.2011) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சேரியடி,
சந்தனமாதா கோயில் வீதி,
சுண்டுக்குளி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளின் மாயவலையில் தமிழர் சிக்கக்கூடாது

## ஐ.தே.க. வேட்பாளர் விஜயராஜ்

கொழும்பு, ஒக். 4

தமிழ்மக்கள் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளின் மாய வலையில் சிக்கித் தமது வாக்குகளை வீணடித்துவிடக்கூடாது. கடந்தகால அனுபவங்களை கருத்திற்கொண்டு எதிர்வரும் 8ஆம் திகதி வாக்களிக்கவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகரசபை வேட்பாளர் விஜயராஜ் தெரிவித்தார்.

மட்டக்குளிப் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்மக்கள் வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்பதை உணர்ந்துகொண்டுள்ள அரசு அவர்களின் வாக்குக்களைச் சிதைவடையச் செய்து அதன் மூலம் கொழும்பு மாநகரசபையைக் கைப்பற்றிவிடலாம் என கனவு காண்கிறது .

ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள சிறுபான்மையினரின் வாக்குகளைக் குறைப்பதற்கு சிறுபான்மையினரையே மிகவும் தந்திரோபாயமாக அரசு பயன்படுத்துகிறது. இதனை தமிழ்ப் பேசும் வாக்காளர்கள் நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும்.

கொழும்பு மாநகரசபையை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. அந்த வெற்றியில் தமிழ்ப்பேசும் மக்களின்பங்களிப்பு எந்தளவு உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் கணிசமான தமிழ்ப்பேசும் வேட்பாளர்களையும் வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

முகவர்களினூடாக சேவைகளைப் பெற்றுக்கொள்வதை விட நேரடியாகப் பெற்றுக்கொள்வதே சிறந்ததும் இலகுவானதும் கூட. அதனை உணர்ந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதனூடாகப் போட்டியிடும் தமிழ்ப்பேசும் வாக்காளர்களுக்கும் உங்கள் விருப்பு வாக்குகளை வழங்குங்கள்.

தேர்தல் காலத்தில் மாத்திரம் மக்களிடம் வரும் மாயாஜாலக்காரர்களின் பசப்பு வார்த்தைகளையும், வாரி வழங்கும் செய்ய முடியாத வாக்குறுதிகளையும் பொதுமக்கள் இனங்கண்டுகொள்ளவேண்டும். அத்தோடு, அவ்வாறானவர்களுக்குத் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்- என்றார்.



சிறுவர் தினத்தை முன்னிட்டு அச்சுவேலிப் பொலிஸாரால் நடத்தப்பட்ட ஓவியப் போட்டிகளின்போது பங்குபற்றிய மாணவர்களை அவதானிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள்.

# டெங்கு ஒழிப்புப் பணிகளுக்கு ஓய்வு பெற்ற சுகாதாரப் பரிசோதகர்கள்

கொழும்பு, ஒக்.4

டெங்கு நோய் ஒழிப்புப் பணிகளை சரிவர நிறைவேற்றுவதற்காக 69 ஓய்வுபெற்ற சுகாதார வைத்தியப் பரிசோதகர்களை உள்ளூராட்சி சபைகளில் நியமிப்பதற்கு உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவர்கள் ஆறுமாத கால ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவர் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

உள்ளூராட்சி சபைகளில் 69 சுகாதார வைத்திய பரிசேதகர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காகவே ஓய்வு பெற்றவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அவர்கள் 67 வயதைத் தாண்டாதவர்களாக இருக்க வேண்டும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுகாதார அமைச்சு தற்சமயம் 187 பேருக்கு சுகாதார வைத்தியப் பரிசோதகர் துறையில் பயிற்சியளித்து வருவதாகவும், பயிற்சி முடிந்த பின் தற்போது நிலவும் வெற்றிடங்கள் முற்றாக நிரப்பப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ச-5)

# கல்வி அமைச்சின் செயலரின் கையெப்பம் மோசடி;

## ஆசிரியர்கள் மீது முறைப்பாடு

கொழும்பு, ஒக்.4

கல்வியமைச்சு செயலாளரின் கையொப்பத்தை போலியாக இட்டு கடிதமொன்றை தயாரித்து கொழும்பிலுள்ள பாடசாலையொன்றில் மாணவன் ஒருவனை சேர்க்க முயன்றனர் என்று மூன்று ஆசிரியர்கள் மீது இலஞ்ச ஊழல் மற்றும் துஷ்பிரயோக ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாணவனை பாடசாலையில் சேர்ப்பதற்காக மூன்று ஆசிரியர்களும் மாணவனின் பெற்றோர்களிடமிருந்து பணம் அறவிட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவனை பாடசாலையில் சேர்ப்பதற்காக அதே பாடசாலையில் பணிபுரியும் இரண்டு ஆசிரியர்களும் ஒரு ஆசிரியையும் இந்த மோசடியை செய்துள்ளனர். அவர்கள் மூவரினதும் பணியை இடைநிறுத்தம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ச-5)

# முதியோர் எண்ணிக்கை 25 சதவீதமாக உயரும்

கொழும்பு, ஒக்.4

2050 ஆம் ஆண்டளவில் இலங்கையில் முதியவர்களின் எண்ணிக்கை 25 சதவீதமாக அதிகரிக்கும் என்று பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

முதியவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் ஏற்படும் சவால்களை எதிர் கொள்வதற்கு முறையான வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் தற்போது 9.6 சதவீதம் முதியவர்கள் வாழ்கின்றனர்.

முதியவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் நாளுக்கு நாள் முறைப்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

# மோதலைத் தடுக்கச் சென்ற பொலிஸ்காரர் மரணம்

கொழும்பு,ஒக்.4

மோதல் சம்பவமொன்றைத் தடுக்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தாக்குதல் சம்பவமொன்றில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மொரட்டுவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இரண்டு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றைத் தடுப்பதற்காகச் சென்றபோதே இந்த உத்தியோகத்தர் கொல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்த உத்தியோகத்தரும் மேலும் ஐந்து உத்தியோகத்தர்களும் சம்பவ இடத்துக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


# துயர் பகிர்கின்றோம்



எமது பீடத்தின்
விவசாய பொறியியல்துறை தலைவர்
பொன்னையா ஆழ்வாப்பிள்ளை
அவர்களின் அன்புத் தாய்
பொன்னையா சரஸ்வதி அவர்கள்
24.08.2011 அன்று சிவபதம்
அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
விவசாயபீட நலன்புரி சங்கம்
விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.



# ஆறு மாத கால டிப்ளோமா

- தபால் மூலம் -

Course Length - Six Month

SEPT. 2011 TO FEBRUARY 2012

22

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.10.2011



# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சின்னத்தம்பி செல்வசீலன்
(அலோமாஸ், சுன்னாகம்)

மண்ணில்: 02.02.1953



விண்ணில்: 04.10.2006

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

இராமலிங்கம் வீதி,
உடுவில்,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.


# புத்தளத்தில் வரட்சி ; குடிதண்ணீர் வழங்குவதற்கு 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஒக்.4

புத்தளம் மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு குடிதண்ணீரை விநியோகம் செய்வதற்காக அனர்த்த நிவாரண சேவைகள் திணைக்களத்திலிருந்து ஐந்து லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி இர்பான் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் வரட்சியால் [illegible] டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பழனி நவரத்தினம்
(சோதிடர்)
திதி: அட்டமி



ஆண்டு இரண்டு கழிந்துவிட்டபோதிலும்
ஆறவில்லை அப்பா எங்கள் சோகங்கள்
சோதிடத்தில் வல்லவனாக நீங்கள்
சாதித்த சாதனைகள் ஊர் அறியும்
அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் கவர்ந்தவரே
அழியாத நினைவுகளை
எமக்குத் தந்து சென்றீரே
என்றும் உங்கள் நினைவில் நெஞ்சம் வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

மலர்வு: 04.08.1934
உதிர்வு: 11.10.2009


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அகதி முகாமில் உள்ள 15 இலங்கையர்கள் விடுதலை

சென்னை,ஒக்.4

தமிழ்நாடு, செங்கல்பட்டு இலங்கை அகதிகள் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 15 இலங்கைத் தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டில் உள்ள இலங்கை அகதிகள் சிறப்பு முகாமில், பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்ட 41 இலங்கை தமிழர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் மீது சில வழக்குகள் நிலுவையில் இருந்தன. அதில் 15 இலங்கைத் தமிழர்கள் மீதான வழக்குகள் நிறைவு பெற்றதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே கடந்த சில நாள்களுக்கு முன்பு, முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழர்கள், தங்களை விடுவித்து தமது உறவினர்களுடன் சேர்த்து வைக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தனர்.

அவர்களுடன் அதிகாரிகள் சமரசப் பேச்சு நடத்தி, வழக்குகள் முடிந்தவர்களை மட்டும் விடுவிப்பதாக உறுதி அளித்தனர். இந்த நிலையில், வழக்குகள் முடிவடைந்த பின்னரும், இலங்கை அகதிகள் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 15 இலங்கைத் தமிழர்களை விடுதலை செய்ய தமிழக அரசு உத்தரவிட்டது. இதையடுத்து, காஞ்சிபுரம் மாவட்ட ஆளுநர் எஸ்.சிவசண்முகராஜா, அந்த 15 பேரையும் விடுவிக்க பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அதன்படி, செங்கல்பட்டு அகதிகள் சிறப்பு முகாமில் தங்கியிருந்த டேனியல், தேவகரன், ஆனந்தகுமார், சந்திரகாந்தன், சுதர்சன், பிரசன்னா, தர்மராஜா, சுதாகர், கிரிதரன், நாராயணதாஸ், சங்கர், சீலன், சுதன், ஷேக்பரீத், சூரிய குமார் ஆகிய 15 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்களில் சிலர் தங்களுடைய உறவினர்கள் வசித்து வரும் இலங்கை அகதிகள் முகாமுக்கும், சிலர் தங்களது உறவினர் வீடுகளுக்கும் சென்றனர். விடுதலை அளித்து, தங்கள் மனைவி மற்றும் உறவினர்களுடன் சேர்ந்து வாழ நடவடிக்கை எடுத்த தமிழக முதல்வர் ஜெயலலி தாவுக்கும், காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகத்திற்கும் இலங்கைத் தமிழர்கள் நன்றி தெரிவித்தனர்.

## 'ஏயார் இந்தியா' வுக்கு ஒஸ்கார் விருது

டில்லி, ஒக்.4

இந்திய அரசின் விமான சேவை நிறுவனமான 'ஏயார் இந்தியா' பொருளாதார வகுப்பில் அதிக பயணிகளை ஏற்றிச் சென்றமைக்கான சிறந்த சேவைக்கான ஆசிய விருதைப் பெற்றுள்ளது.

விமான சேவைக்கு அளிக்கப்படும் மதிப்புமிக்க விருதாகக் கருதப்படும் இந்த விருதிற்கு - விமான சேவைக்கு வழங்கப்படும் ஒஸ்கார் என்று வர்ணிக்கப்படுகிறது.

இதற்கான போட்டியில் ஏயார் இந்தியாவுடன் கேத்தி பசுபிக், தாய் ஏர்வேஸ், சிங்கப்பூர் ஏர் லைன்ஸ், ஜப்பான் ஏர்லைன்ஸ் உள்ளிட்ட ஆசியாவின் மிகப் பெரிய விமான சேவை நிறுவனங்கள் போட்டியிட்டன.

இதில் ஏர் இந்தியா நிறுவனத்திற்கு பொருளாதார வகுப்பில் அதிக பயணிகளைச் சுமந்துச் சென்றமைக்காக சிறந்த விமான சேவை நிறுவன விருது கிடைத்துள்ளது. இதற்கான விழா தாய்லாந்து நாட்டின் தலைநகரில் ஒஸ்திரேலியா, ஆசியாவுக்கான உலகப் பயண விருது அமைப்பு நடத்தியுள்ளது.

ஏயார் இந்தியாவிற்கு வழங்கப்பட்ட விருதை அதன் தாய் லாந்து நாட்டு மேலாளர் ஆர். மன்சுக்கானி பெற்றுக்கொண் டார். 66 உள்நாட்டுப் பயணத் தடங்கலில் 33 அயல் நாட்டுத் தடங்களிலும் வான் சேவையை நடத்தி வரும் ஏயார் இந்தியா விமான நிறுவனம், ஏர்பஸ் ஏ319, ஏ 320, ஏ310, ஏ330, போயிங் பி737, பி777 போன்ற சிறந்த விமானங்களகளை இயக்கி வருகிறது.

## கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூடாவிட்டால் மீண்டும் உண்ணாவிரதம்

கூடங்குளம் அணு உலையை மூட நடவடிக்கை எடுக்காவிட்டால் மீண்டும் எதிர்வரும் 9 ஆம் திகதி உண்ணா விரதத்தை ஆரம்பிப்போம் என்று உண்ணா விரதப் போராட்டக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கூடங்குளத்தில் கட்டப்பட்டுள்ள அணுமின் நிலையத்தில் உற்பத்தியை ஆரம்பிக்கக் கூடாது என்று வலியுறுத்தி இடிந்தகரையில் 11 நாள்கள் நடந்த உண்ணாவிரதப் போராட்டம் மத்திய, மாநில அமைச்சர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கைவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கூடங்குளம் அணு உலையை மூட நடவடிக்கை எடுக்காவிட்டால் மீண்டும் எதிர்வரும் 9 ஆம் திகதி உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க உள்ளதாக போராட்ட குழுவினர் அறிவித்துள்ளனர்.

இதற்கிடையே நேற்று முன்தினம் இடிந்தகரையில் காந்தி ஜெயந்தியை ஒட்டி அகிம்சை வழியில் போராட்டம் என்பது தொடர்பான கருத்தரங்கம் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் அடுத்தக்கட்ட போராட்டம் குறித்து கூறுகையில்:

அணுமின் நிலையத்திற்கு எதிரான மாநில அரசின் தீர்மானம் குறித்து மத்திய அரசு இது வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே மாநில அரசு அதனை மீண்டும் வலியுறுத்த வேண்டும். அணு உலை வளாகத்தில் தொடர்ந்து நடந்துவரும் பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டும். இதற்காக மத்திய, மாநில அரசுகளுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதி வரையிலும் காலக்கெடு தருவதெனவும் அதற்குள் முடிவு ஏற்படாத பட்சத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி இடிந்தகரையில் மீண்டும் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து அரசுகள் தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்வரும் 9ஆம் திகதி மாலையில் இருந்து தொடர் உண்ணா விரதம் இருப்பது குறித்தும் முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்தனர்.

## தேர்தல் விதிகளை மீறியதால் விஜயகாந்த் மனைவி மீது வழக்கு

தேர்தல் விதிகளை மீறி பிரசாரத்தில் ஈடுபட்டதாக தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் மனைவி பிரேமலதா மீது மதுரையில் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

மதுரை மாநகராட்சி மேயர் பதவிக்கு தே.மு.தி.க. சார்பில் கவியரசு போட்டியிடுகிறார். இவரை ஆதரித்து பிரேமலதா பிரசாரம் செய்தார். அப்போது அனுமதிக்கப்பட்டதை விட கூடுதல் வாகனங்களைப் பிரசாரத்தில் பயன்படுத்தியதாக கூறி மதுரை பொலிஸார் பிரேமலதா, வேட்பாளர் கவியரசு மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து தே.மு.தி.க. பிரிந்து வந்த பின்னர் அந்தக்கட்சியின் முக்கியப் பிரமுகர் மீது அதுவும் விஜயகாந்த் மனைவி மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்திருப்பது சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.



இந்திய கப்பல் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா மும்பையில் நடந்தது. விழாவில் கப்பல் போக்குவரத்து தொடர்பான விவரங்கள் அடங்கிய விழா மலரை பிரதமர் மன்மோகன் சிங் வெளியிட கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் வாசன் பெற்றுக் கொண்டார். அருகில் கப்பல் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் முகுல் ராய்,மும்பை மாநில முதல்வர் பிரிதிவிராஜ் சவுகான் ஆகியோர் நிற்கின்றனர்.

## ஆந்திராவில் ரூபாவுக்கு ஒரு கிலோ அரிசி முதல்வர் அறிவிப்பு

ஹைதராபாத், ஒக்.4

ஆந்திராவில் ஒரு ரூபாவுக்கு அரிசி வழங்கும் புதிய திட்டத்தை முதல்வர் கிரண் குமார் ரெட்டி அடுத்த மாதம் முதல் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

ஆந்திராவில் ஒரு கிலோ அரிசியை ஒரு ரூபாவுக்கு வழங்கும் திட்டத்தை மாநில முதலமைச்சர் கிரண்குமார்ரெட்டி ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இது தொடர்பாக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஏழை மக்களுக்கு ரூபாவுக்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை மாநில அரசு அமுல்படுத்த முடிவெடுத்துள்ளது. மாநிலம் தோற்றம் பெற்ற தினமான நாளான நவம்பர் முதலாம் திகதி இந்தத் திட்டம் அமுலுக்கு வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் மாநிலத்தில் உள்ள 7.50 கோடி ஏழைகள் பயன்பெறுவர்.

# தெலுங்கானாவுக்கான தீர்வில் கால அவகாசம் தேவை - பிரணாப்

டில்லி, ஒக்.4

தெலுங்கானா விவகாரத்தில், மத்திய அரசு விரைவாக முடிவெடுக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வரும் நிலையில், சர்ச்சைக்குரிய இந்தக் கோரிக்கை தொடர்பாக, பல்வேறு அரசியல் கட்சிகளுடன் மேலும் ஆலோசனை நடத்த வேண்டியுள்ளது. இந்தப் பணிகள் முடிவடைய இன்னும் கால அவகாசமாகும்' என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தெலுங்கானா தனி மாநில கோரிக்கை தொடர்பாக, கடந்த வெள்ளிக்கிழமை காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டக் குழு, ஆலோசனை நடத்தியது. இந்தக் கூட்டத்தில், தெலுங்கானா தொடர்பாக, ஆந்திர மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டபேரவை உறுப்பினர்கள் மற்றும் காங்கிரஸ் தலைவர்களிடம் கருத்துக் கேட்டு, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத், கட்சித் தலைவர் சோனி யாவிடம் சமர்ப்பித்த அறிக்கை பற்றி விவாதிக்கப்பட்டது.

இந்தநிலையில், அதே தெலுங்கானா பிரச்சினை தொடர்பாக, நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் குலாம்நபி ஆசாத், சோனியாவின் அரசியல் ஆலோசகர் அகமது படேல் ஆகியோர் கடந்த சனிக்கிழமை நிதி அமைச்சகத்தில் ஆலோசனை நடத்தினர்.

இந்த ஆலோசனைக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய, மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறுகையில்:

தெலுங்கானா தனி மாநில கோரிக்கை தொடர்பாக, நாம் ஆலோசனைகள் நடத்தி வருகிறோம். கடந்த வெள்ளிக்கிழமை காங்கிரஸ் உயர்மட்டக் குழு ஆலோசனை நடத்தியது. கடந்த சனிக்கிழமை அமைச்சர்கள் சிலருடன் அதுபற்றி விவாதித்தேன். பல்வேறு அரசியல் கட்சிகளுடன் மேலும் ஆலோசனை நடத்த வேண்டியது அவசியம். இந்தப் பணிகள் எல்லாம் முடிவடைய கால அவகாசமாகும்.

இதேவேளை, தனித் தெலுங்கானா அமைப்பதில் தாமதம் ஏற்படுவதாகக் கூறி 18 வயது மாணவி ஒருவர் ஹைதராபாத் அருகே கோஹெதா கிராமத்தில் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார்.

இந்த விவகாரத்தில் கடந்த 2 நாள்களில் இது 2 ஆவது சம்பவமாகும்.

முதலாம் ஆண்டு இன்டர் மீடியேட் மாணவியான பவானி தனது வீட்டில் உள்ள அறையில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டார். இதையடுத்து சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்ததாக ஹயாத் நகர் பொலிஸ் அத்தியட்சகர் பாஸ்கர் தெரிவித்தார்.

முன்னதாக மேடக் மாவட்டத்தில் தெலுங் கானாவுக்கு ஆதரவு தெரிவித்து ரவீந்தர் என்ற மாணவர் தீக்குளித்தார். அவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் காலை உயிரிழந்தார்.

## 14 ஆவது வயதில் 32 இணையத்தளப் பரீட்சைகள் எழுதிய மாணவன்

பதினான்காவது வயதில் 32 இணையத் தளப் பரீட்சைகளை எழுதி 9 வகுப்பு மாணவனான அவினாஷ் மகராஜ் சாதனை படைத்துள்ளார்.

சென்னையில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனை டாக்டர் ரத்தினவேல், டாக்டர் கலையரசி ஆகியோரது மகனான இவர் நெல்லை மாவட்டம் பாளையங் கோட்டையில் உள்ள ரோஸ்மேரி மாடல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 9 ஆம் வகுப்பில் கல்வி கற்று வருகிறார்.

முதலில் கணினி வீடியோ விளையாட்டில் ஆர்வம் காட்டியவர், பின்னர் அதில் உள்ள நுணுக்கங்களைக் கற்றார். உலகின் முன்னணி கணினி நிறுவனமான மைக்ரோசாப்ட் நிறுவனம் ஒன்லைன் புரொபஷனல் என்ற பெயரில் பரீட்சைகளை அறிமுகப்படுத்தியது. இந்தப் பரீட்சையில் கலந்து கொண்ட அவினாஷ் அந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஒன்லைன் புரொபஷனல் என்ற சான்றிதழைப் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அடாவடியால் நிலைமை மோசம்

## அமைச்சர் வாசு

பொலிஸாரால் கைதுசெய்யப்படும் நபரொருவர் மர்மமான முறையில் உயிரிழப்பாராயின் இந்தச் சம்பவம் நிச்சயம் மக்களை கொதிப்படையச் செய்யும். பொலிஸ் அதிகாரிகளுள் சிலர் அடாவடித்தனத்தில் ஈடுபடுவதால் தான் மக்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டுத் தாக்குதல் நடத்தும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அரசு கவனம் செலுத்தி பொலிஸ் அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கவேண்டும்- என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

## பொலிஸ் - பொதுமக்கள் உறவு எப்படி?

பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையே சமீபகாலமாக முறுகல் நிலைமை நிலவிவருகின்றது. பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு தீக்கிரையாக்கும் அளவுக்கு இந்த முறுகல் நிலை பூதாகரமாக உருவெடுத்துள்ளது. பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையே சிநேகபூர்வமான உறவு அவசியம் என்றே வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், இன்று பொலிஸார் - பொதுமக்களுக்கிடையிலான உறவில் விரிசல் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான காரணம் என்னவென அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் கூறியுள்ள கருத்துக்கள்

# பாதுகாவலரே அச்சுறுத்தினால் நாம் எங்கே போய் முறையிடுவது?

## விக்கிரமபாகு

அவசரகாலச் சட்டத்திலுள்ள முக்கியமான சில ஷரத்துக்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் புகுத்தப்பட்டுள்ளன. அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தியே பொலிஸார் அடாவடித்தனத்தில் ஈடுபடுகின்றனர். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் வரையில் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டதன் பயனை மக்கள் அடைய முடியாது. பாதுகாப்பு வழங்க வேண்டிய பொலிஸாரே பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தால் நாம் எங்கு சென்று முறையிடுவது? நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

# அரசுக்குச் சோரம் போகும் பொலிஸார்

## ராஜேந்திரன்

பொலிஸார் ஒருதலைப்பட்சமாக செயற்படுவதால்தான் மக்கள் சட்டத்தை கையில் எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பொலிஸாரின் நடவடிக்கைகளில் நம்பகத்தன்மை இல்லை என்பதனையே கடந்த கால சம்பவங்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

எதிர்க்கட்சியினர் சுதந்திரமாகத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதளவு பொலிஸாரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. ஆனால், அரச தரப்பினர் அடாவடித்தனத்தில் ஈடுபடும்போது பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றனர்.

மக்களுக்கான சிநேகபூர்வமான சேவையே பொலிஸ் சேவை. அந்தச் சேவை இன்று அரச சேவையாக அதாவது அரசுக்கு சோரம் போகும் சேவையாக மாறியுள்ளது. இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

# சட்டங்கள் உறங்குகின்றன

## கயந்த கருணாதிலக்க

நாட்டிலுள்ள சட்டதிட்டங்கள் உறங்குகின்றன என்பதையே பொலிஸாரின் நடவடிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.

சட்டதிட்டங்களைப் பாதுகாக்கவேண்டிய பொலிஸார் சட்டத்தை மீறி செயற்படக் கூடாது.

அவ்வாறு செயற்படும் பட்சத்திலேயே நிலைமை மோசமடைகின்றது.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

# தரம் 5 மாணவி கௌரவிப்பு

தென்மராட்சி,ஒக்.4

கெற்பேலி அ.த.க. பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவி பாடசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப் படவுள்ளார்.

பாடசாலை மண்டபத்தில் நாளை புதன்கிழமை மாணவியும் ஆசிரியையும் கௌரவிக்கப்படவுள்ளனர். பாடசாலை அதிபர் நடேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசாவும் கலந்து கொள்வர். (ம-207)

# அலரி மாளிகையில் ஆயிரம் ஆசிரியர் கௌரவிப்பு

இலங்கையில் உள்ள 54 கல்வி வலயங்களைச் சேர்ந்த 1000 ஆசிரியர்கள் கொழும்பு அலரிமாளிகையில் நடைபெறவுள்ள உலக ஆசிரியர் தின விழாவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் கௌரவிக்கப் படவுள்ளனர்.

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கல்வி அமைச்சால் நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் நடத்திய ஆய்வுகளின் பிரகாரம் வலய ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நாளை மறுதினம் கொழும்பில் வைத்து ஜனாதிபதி விருது வழங்கப் படவுள்ளது.

(ம-207)

# நவம்பர் மாதத்தில் சூறாவளி அபாயம்

## வளி மண்டலவியல் திணைக்களம் தகவல்

கொழும்பு,ஒக.4

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் சூறாவளி ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப் படுவதாக வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவுகின்ற வெப்பமான காலநிலையே வங்காள விரிகுடாவில் சூறாவளி உருவாகக் காரணமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் தினங்களில் மேல், தென், மத்திய, வட மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணப் பகுதிகளில் மாலை வேளைகளில் மழைபெய்யக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

காலி, மாத்தறை மாவட்டப் பகுதிகள் மற்றும் மேல்மாகாணத்தில் காலை வேளை மழையும் பலத்த காற்றும் வீசக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மின்னல் தாக்கங்கள் ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதால் மக்களைப் பாதுகாப்பாக இருந்து தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்பினைக் குறைக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மின்னல் தாக்கியதில் இந்த வருடத்தில் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் 30 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.4

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகை அம்மன் ஆலயத்தின் நவராத்திரி பூசைகள் தினமும் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்று வருகின்றன.

நவராத்திரி பூசையின் இறுதி நாளான நாளை மறுதினம் வியாழக்கிழமை இலுப் பையடி ஞானவைரவர் ஆலயத்தில் வாழைவெட்டு நிகழ்வு இடம் பெறும்.

(ம-313)

***

யாழ்ப்பாணம், ஒக்.4

அராலி தெற்கு கோகுலம், கோமாதா ஆகிய அற நெறிப் பாடசாலைகளின் கலைமகள் விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அராலி ஆகாயக்குளம் விநாயகர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் அறங்காவலர் சு.செந்தில்நாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

அத்துடன் இந்த நிகழ்வில் அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகளும், நூலகத்துக்கு நூல்கள் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

(ம-313)

***

யாழ்ப்பாணம், ஒக்.4

இளங்கலைஞர் மன்ற நவராத்திரி நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்றக் கலாமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருமதி நா.மகாலிங்கம் நெறியாள்கையில் மன்ற மாணவர்களின் பாட்டு இடம்பெறும். யாழ்ப்பாண ஏழிசை மிருதங்க நர்த்தலாய மாணவிகளின் நடனமும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பாட்டு, வயலின், மிருதங்கம், நடனம் ஆகிய வகுப்புக்களில் புதிதாக சேரவிரும்பும் மாணவர்களுக்கான வித்தியாரம்பமும் இடம் பெறவுள்ளது.

(ம-319)

***

தென்மராட்சி, ஒக்.4

சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் நவராத்திரி விழா கடந்த 28 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இந்த விழாவையொட்டி சிறார்களிடையே நவராத்திரி தொடர் பான பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு விஜய தசமியன்று பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(ம-207)

***

யாழ்ப்பாணம், ஒக்.4

சென்றல் இன்வெஸ்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி நடத்தும் வாணிவிழா நிகழ்வு ஸ்ரான்லி வீதியில் உள்ள அதன் அலுவலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பூஜை வழிபாடும் எம்.பி.அருளானந்தத்தின் சமய சொற்பொழிவும் இசை நிகழ்ச்சியும் இடம் பெறும்.

(ம-319

# இளையோரின் சுயதொழிலை ஊக்குவிக்க நிஸ்கோ நிறுவனத்தின் கடன் உதவிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.4

யாழ்.மாவட்ட இளைஞர் யுவதிகளின் சுயதொழில் வாய்ப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் நிஸ்கோ நிறுவனம் ஏழு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவைக் கடனாக வழங்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 22 பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது என்று நிஸ்கோ நிறுவனத்தின் பொதுமுகாமையாளர் ப.பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட இளைஞர், யுவதிகளின் சுயதொழில் வேலை வாய்ப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் இளைஞர், யுவதிகள் 22 பேருக்கு சுய தொழில் கடன் வழங்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதில் அறிமுக உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



யாழ்.தேசிய இளைஞர் சேவை கள் மன்றத்தின் உதவி இயக்குநர் த.ஈஸ்வரராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் க.சுஜீந்திரன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து 22 இளைஞர், யுவதிகளுக்கும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப் பட்டன. (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிர்ட் நகரில் வெடித்தது உக்கிர மோதல்; ஆயிரக்கணக்கில் மக்கள் வெளியேற்றம்

திரிபோலி,ஒக்.4

லிபியாவின் சிர்ட் நகர் மீதான தாக்குதல் உக்கிரமடைந்து வருவதால், அந்த நகரில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி வருகின்றனர்.



லிபியாவின் முன்னாள் தலைவர் கடாபி ஆதரவாளர்கள் வசம், சிர்ட் மற்றும் பானி வாலித் ஆகிய இரு நகரங்கள் மட்டும் உள்ளன. இவற்றை மீட்பதற்கு இடைக்கால அரசு மேற்கொண்ட பேச்சு தோல்வி அடைந்த நிலையில், இரு தரப்புக்கும் இடையே கடும் மோதல்கள் வெடித்துள்ளன.

பானி வாலித் நகரில் சண்டை நடந்து கொண்டிருக் கும் நிலையில், சிர்ட் நகரின் துறைமுகம் மற்றும் விமான நிலையத்தை எதிர்ப்பாளர்கள் கைப்பற்றியுள்ளனர். கிழக்கு மற்றும் மேற்கில் இருந்து எதிர்ப்பாளர்கள், நகரின் மையப் பகுதியை நெருங்கி வருகின்றனர். இதனால், அந்தநகரில் இருந்து ஆயிரக்கணக்கானோர் கார்கள், லொறிகள், மூலம் வெளியேறி வருகின்றனர். எல்லைப் பகுதிகளில் உள்ள சாவடிகளில், பல்வேறு பரிசோதனைகளுக்குப் பின் அவர்கள் ஏனைய பகுதிகளுக்கு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை நிலைமை மோசமான கட்டத்தை நெருங்கியுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.சிர்ட் நகரில் உள்ள மருத்துவமனைகளின் நிலைமையும் மோசமாக உள்ளது. அங்கு, அடிப்படை மருத்துவ வசதிகள், ஒக்சிசன், எரி பொருள் என எதுவுமே இல்லாததால், சிகிச்சைக்காக வந்தோர் பரிதாபமாக மரணித்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது. உடனடியாக மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என, மருத்துவமனைகளை நேரில் பார்வையிட்ட சர்வதேச செஞ்சிலுவை சங்கக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

# கடாபியின் மகனை ஒப்படைக்கமாட்டோம் நைஜீரியா தொடர்ந்து பிடிவாதம்

திரிபோலி,ஒக்.4

கடாபியின் மகன் சாதியை லிபிய இடைக்கால அரசிடம் ஒப்படைக்க மாட்டோம் என்று நைஜீரியா பிடிவாதம் பிடித்து வருகிறது.

சர்வாதிகாரி கடாபியின் 3ஆவது மகன் சாதி, நைஜீரியாவுக்குத் தப்பியோடிவிட்டார். அங்கு நைஜீரிய அரசின் பாதுகாப்பில் இருக்கிறார். அவருக்கு எதிராக லிபிய இடைக்கால அரசு பிடியாணை பிறப்பித்துள்ளது. அவரை கண்டு பிடிக்க உதவுமாறு சர்வதேச பொலிஸ், அனைத்து நாடுகளுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இருப்பினும், சாதியை லிபியாவிடம் இப்போதைக்கு ஒப்படைக்கமாட்டோம் என்று நைஜீரியப் பிரதமர் பிரிஜிரபனி நேற்றுமுன்தினம் அறிவித்தார். லிபியாவில், நேர்மையான விசாரணை நடப்பதற்கான சூழ்நிலை இல்லை என்றும் அவர் கூறினார். இதற்கிடையே, கடாபியின் செய்தித் தொடர்பாளர் மூசா இப்ராகிம் பிடிபட்டு இருப்பதாக லிபிய இடைக்கால அரசு கூறியுள்ளது.



கிரீஸ் தலைநகர் எதென்ஸ் நகரில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் அந்த நாட்டுப் பிரதமர் ஜோர்ஜ் பாபான்ட்ரு (வலது) கட்டார் நாட்டுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்துப் பேசினார்.

# அல்குவைதா அமைப்புக்கு குண்டு தயாரித்த தீவிரவாதி படுகொலை

ஏமன் நாட்டின் மத்தியப் பகுதியில், அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில், அல்குவைதாவுக்காக குண்டு தயாரித்த தீவிரவாதி, இப்ராகிம் அல் அசிரி கொல்லப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அல்குவைதாவின் அரபுத் தீபகற்பப் பிரிவுக்காகக் குண்டு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டவர் இப்ராகிம் அல் அசிரி. சவுதி அரேபிய அரசால், மிகத் தீவிரமாகத் தேடப்படும் குற்றவாளிகள் பட்டியலில் இருந்தவர்.

அசிரியின் மரணத்தை, உளவுப் பிரிவு மூலம், அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அசிரி கொல்லப்பட்ட அதே நாளில் தான், ஏமனின் மரிப் மாகாணத்தில் நடந்த குண்டு வீச்சில், அல்குவைதாவின் முக்கிய நபரான அன்வர் அல் அவ்லாகி கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமது முகாம் மீதே நடத்திய தாக்குதலில் 30வீரர்கள் சாவு

ஏமன் நாட்டில் அந்த நாட்டு விமானப் படையினர் தவறுதலாகத் தங்களது ராணுவ முகாம் மீதே குண்டு வீசியதில் அதில் இருந்த 30 வீரர்கள் பலியாகிவிட்டனர். தெற்கு அபயான் மாகாணத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

அங்குள்ள ஒரு பாடசாலையில் ராணுவத்தின் 119ஆவது பிரிவைச் சேர்ந்த வீரர்கள் தங்கியுள்ளனர்.

இந்தநிலையில் அருகில் உள்ள ஜின்ஜிபாரில் அல்குவைதா தீவிரவாதிகள் கொட்டத்தை அடக்குவதற்காக விமானப்படையினர் தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர். அப்போது தவறுதலாக ராணுவத்தினர் தங்கியிருந்த பாடசாலை மீது குண்டுவீசப்பட்டது. இதில் சிக்கி 30 ராணுவத்தினர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்துள்ளனர்.

# நியூயோர்க்கில் ஆர்ப்பாட்டம்; 700 பேர் கைது

நியூயோர்க் ,ஒக்.04

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, ப்ரூக்ளின் பாலத்தில் பேரணி நடத்த முயன்ற ஆயிரக்கணக்கானோரில், 700க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

அமெரிக்க அரசியலில், தனியார் நிறுவனங்களின் ஆதிக்கத்தை நீக்க வேண்டும், அமெரிக்க சமூகத்தில் நிலவி வரும் ஏற்றத் தாழ்வு அகற்றப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த செப்ரெம்பர் 17ஆம் திகதி முதல், 'வால் தெரு ஆக்கிரமிப்பு இயக்கம்' தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அசாத்துக்கு எதிரான போராட்டங்களை வலுவாக்க

# சிரியாவில் எதிர்க்கட்சிகளின் தேசிய ஐக்கிய கவுன்சில் உதயம்

வெளிநாடுகளில் இயங்கும் சிரிய எதிர்க்கட்சிகள் அனைத்தும் தேசிய ஐக்கிய கவுன்சில் என்ற பெயரில் ஒருங்கிணைந்துள்ளன. இதன் மூலம் அந்த நாட்டின் எதிர்க் கட்சிகள் அதிபர் பஷர் அல் அசாத்துக்கு எதிரான போராட்டங்களை இன்னும் வலுவாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

சிரியாவில் அதிபர் அசாத்துக்கு எதிரான போராட்டம் மேலும் தீவிரம் அடையாததற்கு அங்குள்ள எதிர்க்கட்சிகள் ஓரணியாகத் திரளாததே காரணம் என அரசியல் நிபுணர்கள் கூறி வந்தனர். இந்தநிலையில் துருக்கியின் இஸ்தான்புல் நகரில் கூடிய சிரிய எதிர்க்கட்சிகள் மாநாட்டில் தேசிய ஐக்கிய கவுன்சில் உருவாக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் உள்ள சோர்போர்ன் பல்கலைகழகத்தில் சமூகவியல் பேராசிரியராகப் பணியாற்றிவரும் புர்ஹான் கில்யோன் கவுன்சிலின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது;

இந்தக்கவுன்சிலில் அனைத்து சிரிய மக்களும் சேரலாம். சிரிய மக்களின் விடுதலைக் கான போராட்டத்தில் அவர் களின் இறையாண்மையைக் காக்கும் சுயேச்சையான அமைப் பாக இது செயற்படும் என்றார்.

சிரிய விவகாரத்தில் வெளிநாடுகளின் தலையீட்டை நிராகரித்துள்ள கவுன்சில் சிரியா மக்களைப் பாதுகாக்க ஐ.நா சிரிய அரசைக் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கோரியுள்ளது. சிரியா போராட்டத்தில் கவுன்சிலின் உருவாக்கம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயலாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையில் தலைநகர் டமாஸ்கசில் இருந்து 180 கி.மீ தொலைவில் உள்ள ரஸ்தான் நகரின் பெரும்பகுதியை எதிர்ப்பாளர்களிடம் இருந்து சிரியா ராணுவம் கைப்பற்றியுள்ளது.

# தாம் தயாரித்த விமானத்திலேயே 23 நாடுகளைச் சுற்றிய தம்பதியர்



பிரிட்டனைச் சேர்ந்த ஒரு தம்பதி தாமே பிரத்தியேகமாகத் தயாரித்த விமானத்தில் 23 நாடுகளைச் சுற்றி வலம் வந்து சாதனை படைத்துள்ளனர்.

பிரிட்டன் வான்சேவையில் பணியாற்றி ஓய்வுபெற்ற விமானியும் அவரது மனைவியும் தான் இந்தச் சாதனையைப் படைத்துள்ளனர்.

இவர்கள் தாஜ்மகால் மற்றும் கிசாவிலுள்ள பிரமிட்டுக்கள் அடங் கலாக உலக அதிசயங்களையும் கண்டுகழித்துள்ளனர். 23 நாடு களையும் சுற்றிப் பார்ப்பதற்கு ஒரு வருடமும் ஒரு நாளும் தேவைப் பட்டுள்ளது. இதற்கு 1320 கலன் எரி பொருள்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன இச் சுற்றுலாவுக்கு 2,400,000 ரூபா செலவாகியுள்ளது.

## பிறப்பு விகிதம் அதிகரிப்பால்

# உலக மக்களின் தொகை 700 கோடி!

"இந்த மாதத்தில், உலகின் மொத்த மக்கள் தொகை எண்ணிக்கை, 700 கோடியாகி விடும்; 2100ஆம் ஆண்டுக்குள், இந்தத் தொகை, ஆயிரம் கோடியாக அதிகரிக்கும்" என, ஐ.நா., வின் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 1804ஆம் ஆண்டு வரை, உலகின் மொத்த மக்கள் தொகை 100 கோடியாக இருந்தது. 1960களில், 300 கோடியாக அதிகரித்தது.இன்னும் ஒரு நூற்றாண்டில், ஆயிரம் கோடியாக உயர்ந்துவிடும். மக்கள் தொகை அதிகரிப்பு, வளர்ந்து வரும் நாடுகளில்தான் காணப்படுகிறது. உலகில், மக்கள் தொகை அதிகரிப்பு பட்டியலில் இடம்பெற்றுள்ள 10 நாடுகளில், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஜப்பான் ஆகிய, மூன்று வளர்ந்த நாடுகள் மட்டும் தான் இடம் பெற்றுள்ளன.

இந்த அதிகரிப்புக்கு பொருளாதார வளர்ச்சி, பிறப்பு விகிதம் அதிகரிப்பு, இறப்பு விகிதம் குறைவு ஆகிய காரணங்களை நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதேநேரம், கருத்தடை வசதிகளை அதிகளவில் மக்கள் உபயோகப்படுத்தும் போது தான், பிறப்பு விகிதம் குறைய வாய்ப்பு என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

# அமெரிக்காவுடனான 'மோதலில்' பாகிஸ்தானுக்குத்தான் வெற்றி

## கிலானி பெருமிதம்

இஸ்லாமாபாத், ஒக். 4

அமெரிக்காவுடன் ஏற்பட்ட கருத்து மோதலில் பாகிஸ்தானுக்கு வெற்றி கிடைத்து உள்ளது என்று பாகிஸ்தான் பிரதமர் கிலானி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசிடம் இருந்து தனக்கு ஒரு செய்தி வந்து இருப்பதாகவும், அதில் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தானின் ஆதரவு தேவை என்று குறிப்பிட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறிய தாவது:-

பாகிஸ்தானின் அனைத்துக்கட்சி கூட்டத்தாலும், அனைத்து அரசியல் தலைவர்களும் காட்டிய ஒற்றுமையாலும் இது சாத்தியமானது. பாகிஸ்தானின் உதவி இல்லாமல் அவர்களால் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் வெற்றி பெற முடியாது. இது பாகிஸ்தானுக்குக் கிடைத்த வெற்றி ஆகும். நாங்கள் போரை விரும்பவில்லை. அமைதியைத் தான் விரும்புகிறோம். இவ்வாறு கிலானி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தாவின் இலக்கை விரட்டிப் பிடித்து வெற்றி பெற்றது யாழ்.ஜொலிஸ்ரார்

வலி வடக்கு, ஒக். 04

இருபதுக்கு இருபது போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் பெரும் இலக்கை வெற்றி இலக்காக வைத்தபோதிலும் சுன்னாகம் ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக்கழகம் விரட்டிப் பிடித்தது. எனினும் பின்னணி வீரர்களின் துடுப்பாட்டம் சோபிக்காமையால் ஜொலிஸ்ரார் விளையாட்டக்கழகம் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் இருபதுக்கு இருபது கிரிக்கெட்போட்டி ஆட்டத்தின் அரையிறுதி ஆட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

அரையிறுதிப் போட்டியில் ஸ்கந்த ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 30 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது. உமாதரன் 68, டிலக்சன் 56, மணிவண்ணன் 54, அருண் 21 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 22 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த விஸ்னு பிரகாஸ் நிரோஜன் தலா 6 ஓவர்கள் பந்து வீசி முறையே 50, 51 ஓட்டங்களைக் கொடுத்து தலா 02 விக்கெட்டுக்களையும் புருசோத்தமன் 02 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சஞ்சயன் 45 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

259 என்ற பெரு இலக்குடன் களமிறங்கிய ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக்கழகம் 27.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 183 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

கே.நிரோஜன் 59, ஜெனக்சன் 28 , ரி.நிரோஜன் 27 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த உமாதரன் 06 ஓவர்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் ஜனார்த்தனா 4.1 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் சைலேஸ்வரன் சஞ்சித் முறையே 27 49 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (ம-86)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.4

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர் மலையங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது.

இன்று செவ்வாய்க் கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* பிற்பகல் 3 மணி - சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம்
* மாலை 4 மணி - வெற்றவத்தை சிவானந்த விளையாட்டுக் கழகம் எதிர் கொற்றாவத்தை றோஞ்சஸ் விளையாட்டுக் கழகம். (ம-23)

## பரீஸ் வி. க. அணி கிறாஸ்கொப்பஸ்ஸை வென்றது

யாழ்ப்பாணம், ஒக்.4

கிறாஸ்கொப்பஸ் விளையாட்டுக்கழக அணியை 30 ஓட்டங்களால் வெற்றி கொண்டது மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழக அணி.

படையினர் பொது மக்கள் நல்லுறவு வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்குஇடையேநடைபெற்றுவரும் 20-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் காலை இடம் பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத் தாடிய மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப்பெற்றது.

இதில் வினோத் 66, ஜெயதீபன் 41 , நிதர்சனன் 17 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் கிறாஸ்கொப்பஸ் விளையாட்டு அணி சார்பாக பிரகலாதன் 3 விக் கெட்டுக்களையும், மதுஷன் 2 விக்கெட்டுக்களையும், டிலக்சன், அஜித் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

159 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பேஸ் அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் அஜித் 36 , காந்தசீலன் 35 , பிரதீபன் 27 ஓட்டங்களையும் தமது அணிசார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழக அணி சார்பாக வினோத் 3 விக்கெட்டுக்களையும், கரிகரன், திலக்ராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ம-23)

## சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வென்றது மன்னார் அணி

யாழ்ப்பாணம், ஒக்.4

சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி பெற்று அரை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது மன்னார் உதைபந்தாட்ட லீக் அணி.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் இன்ர லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் கால் இறுதியாட்டம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது.

ஆட்டத்தில் மன்னார் உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் தத்தமது அணியினர் வெற்றி பெறவேண்டும் என்ற நோக்கோடு களம் இறங்கினர்.

இதனால் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்றது.

இந்த நிலையில் முதலாம் பாதி ஆட்டம் இடை வேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது இரு அணியினரும் எது வித கோல்களையும் பெறவில்லை.

முதலாம்பாதி ஆட்டம் இடை வேளையில் நிறுத்தப்பட்டு இரண்டாம் பாதி ஆட்டத்துக்காக ஆரம்பமான போது இரண்டு அணியினரும் உற்சாகத்தோடு களம் இறங்கினர்.

இரண்டு அணியினரும் தமக்கு கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பங்களை தவறவிட்டனர். ஆட்டம் முடிவில் இரு அணியினரும் கோல்களைப் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப் பட்டன. இதில் மன்னார் உதை பந்தாட்ட லீக் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டுப் பேரவை யாழ். மாவட்ட ஹொக்கிப் பாடசாலை அணிகள் கழக அணிகளுக்கு இடையே நடத்திய ஹொக்கிப் போட்டியில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட் விளையாட்டுக் கழகத்துக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் சிறந்த வீரனாக தெரிவு செய்யப்பட்ட ஓல்கோல்ட் வீரன் எஸ்.உதயணன் பரிசளித்து கௌரவிக்கப்படுகிறார். (எ-86)

## மழையால் கைவிடப்பட்ட உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.4

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடந்தும் பிறிமியர் லீக் பிரிவு III இற்கான ஆட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெறவிருந்தது.

இந்த ஆட்டம் கடும் மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

## வெளிச்சம் போதாமையால் சமநிலையானது ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.4

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிறிமியர் லீக் பிரிவு III இற்கான ஆட்டம் ஒன்று வெளிச்சம் போதாமையால் சம நிலையில் முடிவடைந்துள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப் பாணம் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருகோணமலை அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் இரண்டு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு தமது அணிக்காகக் கோல்கள் பெற வேண்டும் என்ற நோக்கோடு மோதிக் கொண்டனர்.

முதலாம் பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறவில்லை.

இதனால் முதல்பாதி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானது. இதன் போது இரண்டு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு எதிர் அணியினரின் கோல் பரப்பிலுள்ள கோல் பெறும் நோக்கோடு மாறி மாறி ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.


இதன் பயனாக 58 ஆவது நிமிடத்தில் திருகோணமலை அன்ரனிஸ் அணி தனது முதலாவது கோலை அடித்தது.

இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. ஊரெழு றோயல் அணி தனது அணிக்காக கோல் பெறவேண்டும் என்ற நோக்கோடு ஆட்டத்தை வேகப்படுத்தியது.

82 ஆவது நிமிடத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துக்கு ஒரு தண்டனை உதை கிடைத்தது. அதனை கஜகோபன் கோல் ஆக்கினார். இதனால் ஆட்டம் சமநிலையில்முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

திருகோணமலை அன்ரனிஸ் விளைாட்டுக் கழக அணி வெளிச்சம் போதாமையால் சமநிலை தவிர்ப்பு உதைக்கு மறுத்தனர். இதனால் மத்தியஸ்தர்கள் ஆட்டத்தை நிறைவு செய்தனர். (ம-23)




யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுப்பேரவை அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திய 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட்போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல் கலைக்கழக அணிக்கும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்ட கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுகழக வீரன் பி. பங்குஜனுக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வர்த்தக வங்கி திருநெல்வேலிக் கிளையின் முகாமையாளர் சி.இராஜமனோகரன் கிண்ணம் வழங்கிக் கௌரவிக்கிறார். (ம-86)

## கைதடியில் தாச்சிப் போட்டி

கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக்கழகம் தென்மராட்சிக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே மின்னொளியில் நடத்தி வரும் தாச்சிச்சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு மறவன்புலவு அம்பிகை விளையாட்டுக்கழகம் "பி" பிரிவை எதிர்த்து கைதடி துல்லியம் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ம-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெயில் முழக்கம் பெங்களூர் வெற்றி



கெயிலின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஷொமசெட் அணியை பெங்களூர் நேற்று வீழத்தியது. சொந்த மண்ணில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சகல துறைகளிலும் ஜொலித்த பெங்களூர் இந்த முறை சம்பயன் லீக் தொடரின் முதலாவது வெற்றியைப் பெற்றது.

சம்பயன் லீக் தொடரின் குழு 'பி' ஆட்டம் பெங்களூரில் நேற்று நடைபெற்றது. இரவு இடம்பெற்ற ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி வென்றாக வேண்டிய கட்டாயத்திலும், இங்கிலாந்தின் பிராந்திய அணியான ஷொமசெட் அணியும் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஷொமசெட் அணித்தலைவர் தோமஸ் முதலில் களத்தடுப்புச் செய்ய தீர்மானித்தார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கெயில், டில்ஷான் ஜோடி களமிறங்கியது. ஆட்டத்தின் ஆரம்பத்தில் டில்ஷான் அதிரடியில் ஆதிக்கம் செலுத்தினார். ஆட்டத்தின் மூன்றாவது பந்து பரிமாற்றத்தினை ரேக்கோ வீச டில்ஷான் அதிரடியாய் முதல் மூன்று பந்திலும் நான்கு ஓட்டங்கள் விளாசினார். தொடர்ந்து இறுதிப் பந்தில் ஆறு ஓட்டங்கள் விளாச அணியின் ஓட்ட வேகம் உச்சத்தை தொட்டது. இருப்பினும் டில்ஷானின் அதிரடி வண்ட மேர்வ் வீசிய 5 ஆவது பந்து பரிமாற்றத்துடன் நிறைவை எட்டியது. அணி 38 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், டில்ஷான் 16 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 23 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். தொடர்ந்து களம் புகுந்த ஹோக்லி வந்த வேகத்திலேயே நான்கு ஓட்டம் விளாசினார்.

36 பந்துகளில் பெங்களூர் தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தது. அதன் பின்னர் கெயில் தனது அதிரடியைத் தொடங்கினார். வண்ட மேர்வ் வீசிய 7 ஆவது பந்து பரிமாற்றத்தில் நான்கு, ஆறு என்று அடுத்தடுத்து விளாசினார். டொக்ரெல் வீசிய 11 ஆவது பந்து பரிமாற்றத்தில் கெயில் 3 ஆறு ஓட்டங்கள் விளாச அணி 100 ஓட்டங்களைத் தாண்டியது. இரண்டாவது இலக்குக்காக 40 பந்துகளில் 70 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஹோக்லியின் இலக்கு வீழ்த்தப்பட்டது. 22 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 33 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்தும் அதரடியாக ஆடிய கெயில் 31 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார். கெயிலின் அதிரடியில் 23 பந்துகளில் அணியின் மூன்றாவது அரைச்சதம் பெறப்பட்டது. திவாரி 15 பந்துகளில் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய அகர்வால் 8 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், ஒரு நான்கு ஓட்டம் அடங்கலாக 19 ஓட்டங்களுடன் 18 ஆவது பந்து பரிமாற்றத்தில் ஆட்டமிழந்தார். அடுத்த பந்திலேயே அதிரடியாய் ஆடிய கெயில் 46 பந்துகளில் 8 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 86 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பெங்களூர் இறுதியில் 20 பந்து பரிமாற்றங்கள் முடிவில் 6 இலக்குகளை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பகாட்கல் 4, அருண் கார்த்திக் 13 ஓட்டங்களினையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் அணித் தலைவர் தோமஸ், கிரிப்ப தலா 2 இலக்குகளை கைப்பற்றினர். ரேக்கோ 3 பந்து பரிமாற்றங்கள் வீசி 50 ஓட்டங்களைக் கொடுத்து இலக்கு எதனையும் கைப்பற்றவில்லை.

பதிலுக்கு பலமான இலக்கை விரட்டத் தொடங்கியது ஷொமசெட். பீற்றர் ரேக்கோ, கீஸ்வெஸ்டர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். நனிஸ் வீசிய முதலாவது பந்து பரிமாற்றத்தில் அள்ளிக் கொடுத்தார் உதிரி ஓட்டங்கள். அரவிண்ட் வீசிய 2 ஆவது பந்து பரிமாற்றத்துடன் ஷொமசெட்டின் அதிரடி ஆட்டம் தொடங்கியது. தொடர்ச்சியாக அதிரடியாய் ஆடிய ஷொமசெட் அணி 4 பந்து பரிமாற்ங்கள் நிறைவில் 38 ஓட்டங்கள் பெற்றது. 5 ஆவது பந்து பரிமாற்றத்தை அணித் தலைவர் வெற்றோரி வீசினார். முதலாவது பந்தில் கீஸ்வெஸ்ரர் நான்கு ஓட்டம் விளாசினார். அடுத்த பந்திலேயே ஆட்டமிழந்தார். கீஸ்வெஸ்ரர் 19 பந்துகளை எதிர்கொண்டு 3 நான்கு ஓட்டங்கள், 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து வெளியேறினார். அடுத்து நுழைந்த வண்ட மேர்வ் வந்த வேகத்தில் ஆறு ஓட்டம் விளாசினார். அடுத்த பந்து வீச்சிலேயே ஆட்டமிழந்தார். வெற்றோரி 5 ஆவது பந்து பரிமாற்றத்தில் இரண்டு இலக்குகளை சரித்து ஷொசெட்டின் அதிரடி ஆட்டத்தை அடக்கினார்.

அடுத்து நுழைந்த ஜேம்ஸ் ஹில்டர்த் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரேக்கோவுடன் இணைந்து அதிரடி ஆட்டத்தை தொடர்ந்தார். ஆட்டத்தின் பத்தாவது பந்து பரிமாற்றத்தை கெயில் வீசினார். உரிய வகையில் பயன்படுத்திய ரேக்கோ 24 ஓட்டங்களை விளாசினார். அத்துடன் அணி 61 பந்துகளில் 100 ஓட்டங்களைத் தொட்டது.

இருப்பினும் அடுத்த பந்து பரிமாற்றத்தை நனிஸ் வீச மூன்றாவது இலக்கு சரிக்கப்பட்டது. ஹில்டர்த் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாக ஆடிய ரேக்கோ 31 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். அடுத்து நுழைந்த பட்லர் 12 பந்துகளில் 4 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். 13.1 பந்து பரிமாற்றங்களில் 118 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்திருந்தது. தொடர்ந்து கொம்ரன் களம் புகுந்தார்.

4 ஆவது இலக்கு வீழ்த்தப்பட்ட பின்னர் பெங்களூரின் கை ஓங்கியிருந்தது. அதிரடி ஆட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் பெங்களூர் வைத்துக் கொண்டது. 16.1 பந்து பரிமாற்றத்தில் 131 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 5 ஆவது இலக்கு வீழ்த்தப்பட்டது. அதிரடியாக ஆடிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரேக்கோ 38 பந்துகளில் 6 நான்கு ஓட்டங்கள், 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதன் மூலம் 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது. பந்து வீச்சில் அரவிண்ட், வெற்றோரி தலா 2 இலக்குகளை கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக கெயில் தெரிவானார். (15)

# சங்காவுக்கு எதிரான விசாரணை 'அவுட்'

லண்டனில் கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற எம்.சி.சி. கொலின் கௌட்ரி 2011 சொற்பொழிவின்போது, கிரிக்கெட் நிர்வாகத்தில் இடம்பெறும் ஊழல்கள் குறித்து விமர்சித்த இலங்கை கிரிக்கெட் அணி வீரர்குமார் சங்க்காரவுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்று விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

குமார் சங்கக்காரவின் மேற்படி உரை தொடர்பாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு இலங்கை கிரிக்கெட்டுக்கு அமைச்சர் அளுத்கமகே உத்தரவிட்டிருந்தார். இலங்கை அணியின் முன்னாள் தலைவரான சங்ககாரவிடம் ஆஸ்திரேலிய அணியுடனான சுற்றுப் போட்டி முடிந்த பின்னர் இதுதொடர்பாக பேசவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழுத் தலைவர் உபாலி தர்மதாஸ கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், சங்கக்காரவிடம் இது தொடர்பாக விளக்கம் கோரப்படவில்லை என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். அது ஒரு மிகச்சிறந்த சொற்பொழிவு என்பதில் சந்தேகமில்லை. அவரின் உரையின் கடைசி பகுதிதான் எமது கரிசனைக்குரியதாக இருந்தது. அதை அவர் இலங்கையில் கூறியிருக்க வேண்டும், இங்கிலாந்தில்அல்ல எனினும் அவரிடம் நாம் விளக்கம் கோரவில்லை. விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை, என்று அமைச்சர் அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சின் மருத்துவப் பரிவு விளையாட்டு வீரர்கள் பலருக்கு தடை செய்யப்பட்ட மருந்துகளை வழங்கியதாக புகார்கள் கிடைத்துள்ளது என்று விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அமைச்சு விசாரணை நடத்தும் எனவும் அவர் கூறினார். விளையாட்டுத்துறை அமைச்சின் மருத்துவப் பரிவு தலைவர் டாக்டர் கீதான்ஜன மெண்டிஸை பதவி நீக்கியுள்ளதோடு மருத்துவ நிபுணர்கள் குழுவை முற்றாக மாற்றியுள்ளதாகவும் அமைச்சர் அளுத்கமமே தெரிவித்தார்.

இந்த பிரிவில் எந்தவொரு விளையாட்டுத்துறை மருத்துவ நிபுணரும் இல்லை. இந்தச் சுழ்நிலையில் குறிப்பாக அண்மைக்கால தடைசெய்யப்பட்ட போதைப் பொருள் சம்பவங்களின் பின்னணியில், நாடாளாவிய ரீதியில் போதை எதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுக்கும் நோக்குடன் இந்தப் பிரிவை நாம் பலப்படுத்த வேண்டியுள்ளது என்று அவர் கூறினார். (15)

## தமிழருக்கு சுதந்திரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரலாறு மீண்டும் சுழன்று ஜனநாயகத்தின் பக்கம் வருகிறது. இலங்கைத் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழும் காலம் வெகுவிரைவில் வரும்'' என்றார் அவர்.

கனேடிய நாடாளுமன்றத்தில் மனிதவுரிமை கண்காணிப்பகத்துடன் இணைந்து 'சிறிலங்காவின் கொலைக் களம்' விவரணத்தைத் திரை யிட்டவர் பிரவுண். 2009 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தர இவர் முயன்ற வேளை அவருக்கு விஸா தர கொழும்பு அரசு மறுத்து விட்டது.

கனடிய மனிதவுரிமை மையத்துடன் நடந்த சந்திப்பில், இலங்கை தொடர்பான தனது அனுபவங்களை பிரவுண் பகிர்ந்து கொண்டார்.

''2009இல் இலங்கைக்குப் பயணம் செய்ய நான் முயன்றதில் இருந்து கொழும்பின் வரம்பு மீறிய அழுத்தத்தைச் சந்தித்து வருகிறேன். எனினும் இந்த விவகாரத்தில் விட்டுக் கொடுக்கப்போவதில்லை. என் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அளவுக்கு இங்குள்ள இலங்கைத் தூதரகம் எனக்கு அழுத்தங்களைக் கொடுத்துள்ளது'' என்றார்.

இலங்கை அரசு ஏதோ ஒன்றை மறைப்பதால் தான் இவ்வாறு தனக்கு மிரட்டல்களை விடுகிறது என்பதைத் தான் உணர்ந்து கொண்டிருக்கிறார் என்றும் அவர் கூறினார்.

தான் சார்ந்திருந்தும் கன்சவேட்டிவ் கட்சி இலங்கை விவகாரத்தில் மிகவும் அழுத்தமான நடவடிக்கைகளை எடுப்பதையிட்டு தான் மிகவும் சந்தோசமடைவதாகவும், கனேடியப் பிரதமர் காப்பர், ''மனித உரிமைகள் விவகாரத்தில் முன்னேற்றம் காணாவிட்டால் 2013ஆம் ஆண்டு பொதுநலவாய மாநாட்டு கொழும்பில் நடைபெற்றால் கலந்து கொள்ளப்போவதில்லை'' என்று தெரிவித்தது மிகவும் சக்திவாய்ந்த ஒரு எச்சரிக்கை என்று தான் கருதுகிறார் எனவும் பற்றிக் பிரவுண் தெரிவித்தார். (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 2013 அமெரிக்கா லொத்தர் வீசா



கடந்த 12 வருடங்களாக அமெரிக்கா லொத்தர் வீசா சேவையை வழங்கி வரும் எம் ஊடாக 04.10.2011 – 05.11.2011 வரை லொத்தர் வீசாவை அனுப்பிக்கொள்ளலாம்

குறிப்பு :- புகைப்படம் எம்மால் இலவசமாக எடுக்கப்படும்.

**Arrul Global Express**
International Courier & Cargo Service
T.P : 021 222 6113
இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதி,விற்பனை உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு
0773866250

## தவறிவிட்டது

01.10.2011 சனிக்கிழமை காலை உடுவில் மாதா கோவிலடியில் இருந்து-றொட்டியாலடி ஊடாக சுன்னாகம் மின்சார சபைக்கு செல்லும் வீதிக்கு இடைப்பட்ட தூரத்தில் 3/4 பவுண் எடை கொண்ட தங்கக் கைச்செயின் ஒன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தகவல் தரவும் சன்மானம் வழங்கப்படும்.

T.P:0779386407

## யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய சமூகத்தின் பாராட்டு வாழ்த்து



செல்வன்
**கணேசபிள்ளை கிந்துஷன்**

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று எமது பாடசாலைக்குப் புகழ் சேர்த்த க.கிந்துஷனையும் இவரை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியை திருமதி கௌ.சிவசிதம்பரம் மற்றும் உறுதுணையாக இருந்த அனைவரையும் மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்.**

## வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை



### தீபாவளியை முன்னிட்டு

**01.10.2011 – 31.10.2011 வரை சிறப்பு சலுகை கட்டணம்.**

- ✓ கடலுணவுப் பொருட்கள், எண்ணை வகைகள், மருந்துப் பொருட்கள் என்பனவும் அனுப்பி வைக்கப்படும்.
- ✓ எம் ஊடாக அனுப்பப்படும் சகல பொதிகளுக்கும் 100% சுங்கதீர்வை (Customs Duty) விலக்கு உண்டு.

- பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்பு வழங்கப்படும்
- ஏற்கனவே பொதிகளை அனுப்பிய பற்று சீட்டை கொண்டு வரும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு சலுகை

உலகின் முன்னணி கூரியர் சேவை நிறுவனத்தின் முகவர்

**Arrul Global Express**
International Courier & Cargo Service
T.P : 021 222 6113
இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/ தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை [2011]இல் சித்திபெற்ற 06 மாணவர்களையும் பாராட்டுவதோடு அவர்கள் மேலும் சிறப்புப்பெற வாழ்த்துகின்றோம். அத்துடன் அவர்களுக்கு மிகவும் சிறந்த முறையில் கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



பாடசாலையின் அதிபர் இரா.ஸ்ரீ நடராசா அவர்களுடன் ஆசிரியைகள் திருமதி சொ.சுபாஸ்கரன், திருமதி ஜெ.பரணிதரன் ஆகியோருடன் சித்தி பெற்ற மாணவர்களான

ப.பவதனுஜன்(159), ப.மாதுஜா(158), ர.ரக்ஷாளினி(154), கு.ரிஷிரேகா(161), சி.லக்ஷாயினி(152), சா.தாருகா (162) ஆகியோர் காணப்படுகின்றனர்.

| 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் | |
|---|---|
| வி.டினோஸ்- | 142 |
| ச.ஜேதுஷா- | 139 |
| வ.சரண்ஜா- | 139 |
| அ.ஆறுமுகவேல்- | 132 |
| கு.லவன்ஜா- | 131 |
| ப.டிலெக்ஷா- | 122 |
| த.நிலானி- | 117 |
| ம.கிருஷாந்தி- | 109 |
| சு.திவாகரன்- | 106 |
| இ.இன்பநிலா- | 104 |
| ம.சியானி- | 104 |
| பி.பிரதீப்- | 103 |

**வாழ்த்துவோர்**
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ தொண்டமானாறு
வீரகத்திப்பிள்ளை ம.வி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தியாலய அதிபர்
உயர்திரு.
**வே.சுந்தரலிங்கம்**

அவர்கள் தென்மராட்சி கல்வி வலயத்தில் சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு 06.10.2011 அன்று அலரிமாளிகையில் அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் "ஆசிரியர் பிரதீபா பிரபா" என்னும் கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்படும் நிலையில் அவரது சேவையை எமது பாடசாலை சமூகம் மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் அவரது பணி சிறக்கவும், பாடசாலையின் வளர்ச்சி மேன்மேலும் வளரவும் ஆசிரியர் தின நன்நாளில் வேரக்கேணி கந்தன் அருள் வேண்டி நிற்கின்றோம்.

**பாடசாலை சமூகம்**

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை செல்லத்துரை

(ஓய்வு பெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர், ஆயுள்வேத போதனா வைத்தியசாலை, கைதடி)



புற்றளை.புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் 12,B.A தம்பிலேன், வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை செல்லத்துரை 01.10.2011 சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-பார்வதி தம்பதியரின் மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் நிசாந்தி, நிவேதினி(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோகுலனின்(கனடா) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

12,B.A தம்பிலேன்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்.

## 5ம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம் 2011

### மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்



பு.பிருந்துதி 181 | க.டிலக்சன் 177 | செ.கஜானன் 166 | பு.பிரீத்திகா 166



க.விஷ்ணுவர்த்தனன் 164 | சி.தரன்யா 164 | க.ஜனாதனன் 157 | சி.அபிராமி 157

### மாதகல் சென்தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை



செ.யூட்டிலக்ஸன் 186 | அ.நிவோஸ்ரா 170 | வி.மேரி விதர்ஷா 160 | க.நதுஷா 159



ந.சுகன்யா 152 | கி.கிறிஸ்ரிக்கா 157 | ஜெ.பௌஸ்ரீனா 152

### மாதகல் சென்யோசப் மகா வித்தியாலயம்



ர.டிஜிசா 153

வி.சிற்றம்பலம்
தலைவர்

சா.அருள்ஞானநந்தன்
செயலாளர்

பல் கலையும் பெற்று சிறப்புற வாழ்த்துகிறோம்

[illegible] அபிவிருத்தி சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்ற கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. தமிழர்களுக்கு அநீதிகள் இழைக்கப்படும் போது நாம் அதனை உரிமையுடன் தட்டிக்கேட்போம்.

தமிழ் மக்களால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நாங்கள். தமிழ் மக்களுக்கு செய்யவேண்டிய சேவைகளைச் சரியாகச் செய்யவேண்டும் என்ற கடப்பாடு எமக்குள்ளது.

இன ஐக்கியத்தைச் சீர்குலைப்பதற்கு அரசியல் பிழைப்பு நடத்தும் இனவாதிகள் தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்டே சிங்களவர்களிடம் ஆதரவு பெறுகின்றனர். எனவே, இவர்கள் தொடர்பாக நாம் அலட்டிக்கொள்ளத் தேவை யில்லை.

ஐ.நா. நிபுணர் குழுவுக்கு நாம் தகவல்களைக் கொடுத்தோமா, இல்லையா என்பதைப் பற்றி பிறகு பேசலாம். ஆனால், சிங்களப் பேரினவாதிகள் கூறுவதுபோல் நாம் ஐ.நா.நிபுணர் குழுவுக்குத் தகவல்களை வழங்கியிருந்தால் அதில் என்ன தவறு என நான் கேட்கின்றேன்?

தமிழினத்திற்கு இலங்கைத்தீவில் நேர்ந்த அவலங்களையே நிபுணர் குழு அறிக்கையாக வடிவமைத்துள்ளது என்பதையும் பேரினவாதிகளுக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் - என்றார்.

(சி)

## வேலை வாய்ப்பு

திருநெல்வேலி சந்தியில் இயங்கும் பிரபல பலசரக்குக் கடை ஒன்றுக்கு வேலை ஆள்கள் தேவை.

01.சிட்டை எழுதுநர் (Bill Clerk)
02.உதவியாளர்கள் (Sales Man)

தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி
இலக்கம் 0777769231

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை சரஸ்வதி



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும், இல.463/2, கே.கே.எஸ் வீதி, சிவலிங்கப் புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சரஸ்வதி நேற்று (03.10.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ராமலிங்கம்- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், வசந்தாதேவி, மகேஸ்வரி, சிவலிங்கம்(இத்தாலி), இந்திராணி, சிவஞானசுந்தரம்(ஞானம் ஸ்ரோர்ஸ், சிவலிங்கப் புளியடி , யாழ்ப்பாணம்), மலர்விழி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற விஜயபாஸ்கரன் மற்றும் சிவபாதசுந்தரம், விஜயகுமாரி, வைகுந்தவாசன், சாந்தினிதேவி, புவனேந்திரன்(ராசு) ஆகியோரின் அன்பு மாமியும் விஜிதா காலஞ்சென்ற சசிகலா மற்றும் சிவகரன் (கரன் ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி), சிறிகரன், காலஞ்சென்ற கவிதா மற்றும் மயூரி, பமீனா, டிலக்சனா, மௌசிகன், சிந்துயா, சிவமோகி, கௌதமன், சிவானுயா, தனுஜா, ஜெகஜீவன், உசாந்தினி, ஐங்கரன், அபிராமி, தனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கீர்த்திகன், டிலக்ஸன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், சிவப்பிரகாசம், சவுந்தரம், காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் கமலாதேவி, இராமச்சந்திரன், தவமணி, இராசலிங்கம், இராசலட்சுமி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சிவப்பிரகாசம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற சின்னராசா, மற்றும் பரஞ்சோதி, பரமேஸ்வரி, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.10.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.சிவஞானசுந்தரம் (மகன்)
(ஞானம் குடும்பத்தினர்).
463/2, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(நீலாம்பரி ஹோட்டல் முன்பாக).

## இப்போது விற்பனையில்...........




செப்ரெம்பர் மாத இதழில்

- அமெரிக்க லொத்தரும் நம்மவரும்.....
- கற்கைகளும், வாய்ப்புகளும்....
- மின்னஞ்சல் முகவரியைப் பாதுகாக்க....
- ஆலோசனை இணையம்.......
- இலவச அன்ரி வைரஸ் .....
- பணம் சம்பாதிக்க உதவும் பேஸ்ஃபுக்

மற்றும்

PHP, MS Excel 2007, Auto CAD, MS Word 2007, Photoshop CS4

வழக்கமான தொடர்கள்.......

சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

## பயங்கரவாத..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையை எடுப்பதற்கு வசதியாக நாடாளுமன்றம் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவல் ஏற்பாட்டை செய்திருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவின்பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்கள் தொடர்பாக அவர் மேற்கொள்ளும் எந்தவொரு விதியும் அவரது அதிகார வரம்புக்குப் புறம்பானது என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள ஒழுங்குப்பிரமாணங்கள் மூலம் நாட்டு மக்களுக்கு அரசமைப்பில் உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளான சித்திரவதையிலிருந்து சுதந்திரம், சம உரிமை மற்றும் சட்டப் பாதுகாப்பு உரிமை, தன்னிச்சையான கைது மற்றும் தடுத்துவைப்பிலிருந்து சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் மற்றும் சட்டபூர்வ தொழிலில் ஈடுபடுவதற்கான உரிமைகளை அமைச்சர் மீறுகிறார் என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

(சி)

## கூட்டமைப்பினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட் டுக்கோதமிழ்மக்க ளுக்கோ நன்மை செய்தது கிடை யாது. பிரிவினை வாதத்தைத் தூண் டிவிட்டு அழிவு கணையும்பின்னடை வுகளையுமே தமிழர்களுக்கு கூட் டமைப்புக் கொடுத்துள்ளது -என்றார்.

(உ)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியது.

இப்போது அரசு - கூட்டமைப்பு இடையி லான 12 ஆவது சுற்றுப் பேச்சு எதிர்வரும் 16ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

(உ-சி)

## கூட்டமைப்பு ஒருபோதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தமக்கு ஆலோசனை வழங்கு வதற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் மூவரடங்கிய நிபுணர்கள் குழுவொன்றை நியமித்தார்.

இந்த நிபுணர் குழு பல்வேறு கோணங்களில் பல்வேறு தரப்பினர்களிடம் எழுத்துமூலம் சாட்சியங்களைத் திரட்டி அறிக்கை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டது.

தருஸ்மன் தலைமையிலான இந்த நிபுணர் குழுவிற்கு வன்னியில் நடந்த அவலங்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இரகசியமாகத் தகவல்களை வழங்கியுள்ளது என ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

சிங்கள பேரினவாதிகள் ஐ.நா. அறிக்கைக்கு ஆரம்பம் முதலே கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வந்தவர்கள். இதனால் கொதிப்படைந்தனர். பல்வேறு கோணங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிக்கத் தொடங்கினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த நடவடிக்கை இனப்பிரச்சினைத் தொடர்பான பேச்சுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனப் பரவலாகப் பேசப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரகசியமாக ஐ.நா. அறிக்கைக்கு சாட்சியம் வழங்கியுள்ளது எனக் கூறப்படுகின்றதே. இந்த விடயம் இனப்பிரச்சினைத் தொடர்பான பேச்சுகளில் தாக்கத்தை ஏற்படுத்துமா எனக் கேட்டபோதே, அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கிடையிலான பேச்சுகளில் அரசுத் தரப்புக்குத் தலைமை வகிப்பவரும், அமைச்சருமான நிமல் சிறிபால டிசில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர்தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு மீது எமக்கு நம்பிக்கை உள் ளது. அவர்க்ள் நாட் டுக்கு எதிராக முக் கியமான தருணங்களில் செயற்படமாட்டார்கள் என்றேநம்கருதுகின்றோம்.

அதே போன்றுதான் ஐ.நா.நிபுணர் குழுவுக்கும் அவர்கள் சாட்சியம் வழங்கியிருக்கமாட்டார்கள் என நாம் நம்புகின் றோம். ஊடகங்க ளில்தான் இவ்வாறான தகவல்கள் வெளி வருகின்றன. ஊடகங்கள்தான் பிரச்சினை களைத் தோற்றுவிக்கின்றன என்பதை யும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் புரிந்துணர்வுடன் நாம் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றோம். இது அவர்களுக்கும் தெரியுமென நினைக்கின்றோம். இவ்வாறானதொரு சூழ்நிலையில் எமக்கு எதிராகக் கூட்டமைப்பு செயற்படாது என்ற நம்பிக்கை எமக்குள்ளது - என்றார் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா.

அதேவேளை, ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையை அரசு அடியோடு நிராகரித்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த அறிக்கையை ஏற்றுள்ளதுடன் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துமாறும் அரசை வலியுறுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## கேள்வி அறிவித்தல்

கீழ் வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி:- 04.10.2011 - 13.10.2011 பி.ப 2 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- 14.10.2011 நண்பகல் 12 மணிவரை
கேள்விப் பத்திரம் திறந்து பார்க்கும் திகதி:- 14.10.2011 பி.ப ஒரு மணி
கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இடம்:- தலைமை அலுவலகம், சுன்னாகம்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 1. கெலன்காமம் வீதி மீள் தாரிடல் (துரையன் தோட்ட வீதி) | 13500.00 | 560.00 | M7/C8 |
| 2. தாவடி சக்கடத்தார் வீதி திருத்தம் | 15000.00 | 560.00 | M8/C9 |
| 3. மல்வம் வீதி, மல்வம் 1ஆம் ஒழுங்கை திருத்த வேலையும் மீள் தாரிடலும் | 19000.00 | 560.00 | M8/C9 |
| 4. ஏழாலை காளி கோயில் வீதி மீள் தாரிடல் | 23500.00 | 560.00 | M7/C8 |
| 5. மருதனார் மடம் சந்தை கொட்டகை திருத்தம் | 5000.00 | 560.00 | M7/C8 |
| 6. மோட்டார் அறையும் தண்ணீர்த் தொட்டிக்கான தாங்கி அமைத்தலும் | 2000.00 | 560.00 | M9/C10 |
| 7. சுன்னாகம் பொது நூலகம் புனரமைப்பு | 16000.00 | 560.00 | M9/C10 |
| 8. மருதனார் மடம் சந்தை உட்பகுதி தாரிடல் | 31000.00 | 560.00 | M7/C8 |
| 9. தாவடி மோகன் வீதி புனரமைப்பு | 21500.00 | 560.00 | M7/C8 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட "இக்ராட்" தரத்துக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

தேசத்தைக் கட்டியெழுப்பும் (NBT) வரியாக மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்துடன் மேலதிகமாக 3% அறவிடப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி "தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை , சுன்னாகம்" என்ற முகவரிக்கும் அதன் பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் உரிய காலத்துக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப் படுவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தி.பிரகாஷ்,
தலைவர்,
வலிகாமம் தெற்குப் பிரதேச சபை, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் யாழ்.மண்ணில்...

## அரசியல் - K.சுகாஷ் (LLB)

2008 வரை யாழ்-முன்னணி ஆசிரியர்
தற்போதைய கொழும்பின் பிரபல ஆசிரியர்

வகுப்புக்கள் ஆரம்பம் - 08 . 10. 2011

• **D.C.M** யாழ்-நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
• **BITSMANS** மானிப்பாய் • **SUBRA** சித்தன்கேணி

2012 - இலங்கை அரசியல், Paper Class
2013 - ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக
மற்றும் நுழைவு மாணவர்களுக்கான
இலவச ஆங்கில இரண்டுநாள் வகுப்பு

அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்


05.10.2011 காலை 11-1 மற்றும் 06.10.2011 காலை 11-1
கதைத்தலுக்கு தேவையான ஆங்கிலம் முழுமையாக கற்பிக்கப்படும்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## மாபெரும் விலைத் தள்ளுபடி

(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)

| | | |
|---|---|---|
| இரும்புக் கட்டில் | ~~6660~~ | 4250 |
| மரக் கட்டில் | ~~7250~~ | 6000 |
| ஸ்ரீல் அலுமாரி | ~~13500~~ | 11250 |



(மெத்தை(Arpico), கணினி மேசை, கணினி கதிரை, றெசின்ரேபிள், சோக்கேஸ், அபன்ரேபிள், பிளாஸ்ரிக் கதிரைகள், T.V. ஸ்ராண்ட், அலுவலக



தொடர்புகளுக்கு- 0773583879, 0212227892

## தவறிவிட்டது

EPWW XXXX இலக்க புதிய தகடு கிராமக்கோட்டுக்கும் தும்பளைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். T.P: 0771381492

## கல்வி

தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளரினால் [M.B.A.பட்டதாரி] அனைத்து தரப்பினருக்கும் ஆங்கிலம், கணினி பாடநெறிகளும், Diploma in Marketing, HRM பாடநெறிகளும், உயர்தர வணிகப்பிரிவினருக்கு பொருளியல், வணிகக்கல்வி பாடங்களும் வீடு வந்து கற்பித்து தரப்படும். சர்வதேச அங்கீகாரமிக்க சான்றிதழ்கள் பாடநெறி முடிவில் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0772301539, 0716035903

விசேட சலுகையுடனான பதிவுகள் நடைபெறுகிறது NIBM
அரச சான்றிதழுடனான கற்கை நெறிகள்

சிங்கள மொழிக்கற்கைநெறி
(வாரஇறுதி) - 4 months
கணினிக்கற்கைநெறி (வார/வாரஇறுதி)
Business Management
(Week days)

077 071 6974 , 021 222 0360
No-40 College Road , Jaffna

## றோயல் அக்கடமி சங்கானை

வலி-மேற்கில் ஓர் புதிய உதயம்
கல்வியால் புதிய சகாப்தம் படைப்போம்

A/L 2012, 2013 வர்த்தகப் பிரிவு

★ பொருளியல் – S. வரதராஜன்
★ கணக்கீடு – P. பகீரதன்
★ வணிகக்கல்வி- V. முரளி

அனுமதிகள் வழங்கப்படுகின்றது

ஆரம்பம்
06.10.2011 வியாழக்கிழமை பி.ப 4.00 மணி

## கண்ணீர்க் காணிக்கை



அமரர்
தாமோதரம்பிள்ளை குமாரகுலசிங்கம்

மண்ணில்
09.06.1940

விண்ணில்
02.10.2011

பெற்ற பிள்ளைகளை பெரிதுயர வளர்த்துவிட்ட பெரியவனே...
உற்றமும் சுற்றமும் ஊர்போற்ற வாழ்ந்து விட்டு
நீ பிரிந்து சென்ற காயங்களின்
கண்ணீரோடு வாழும் உறவுகளுக்கு
எமது கண்ணீரின் சங்கமம்
உங்கள் பிரிவால் துயருறும்
மருத்துவர்கள் 26 ஆம் அணி

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் பசுபதி

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இல. 139, பாண்டியன் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பசுபதி கடந்த (02.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வலட்சுமியின் அன்புக் கணவரும், தயாசீலி, குணசீலி, குகனேஸ்வரன், ஜெகதீஸ்வரன், வாணி ஆகியோரின் பாசமிகுதந்தையும், தனுக்கோடி (நெடுந்தீவு), கார்த்தியேசு (முரசுமோட்டை), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (மல்லாவி), மற்றும் தம்பிப்பிள்ளை (நெடுந்தீவு), சவுந்தரி (காந்தி), நாகம்மா (பாண்டியன் குளம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவராசா, ஞானசேகரம், தர்மினி ஆகியோரின் மாமனும், கஜேந்தினி, புவிதா, தனுசாந், சஞ்சை, சங்கவி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.10 மணியளவில் தகனக்கிரியைக்காக பாலியாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முரசுமோட்டை.

தகவல்:
சு.பாஸ்கரன் (மருமகன்)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் இலட்சுமணன்



கரந்தன், நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமணன் சிவபாக்கியம் நேற்று (03.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பறுபதம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இலட்சுமணனின் அன்பு மனைவியும், லோகநாதன் (ராசு), ஆனந்தன் (லண்டன்), குயலவநாதன் (இத்தாலி), சிறிகாந் (லண்டன்), அசோகன் (இத்தாலி), கமலநாதன் ஆகியோரின் பாசமிகு தாயும், சாரதாதேவி, பாக்கியலட்சுமி (லண்டன்), ரஜனி (இத்தாலி), அனுரா (லண்டன்), சறோஜினிதேவி (இத்தாலி), தயாவதனி ஆகியோரின் பாசமிகு மாமியும், சரஸ்வதி, கோமதி, காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் சந்திரசேகரம், தேவசிகாமணி, யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.10.2011) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்துமாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன் , நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சிறிராணி சந்திரகாந்தன்

(காந்தன் கொம்பியூட்டர் சிஸ்ரம் - திருநெல்வேலி)



யாழ்ப்பாணம், மணிக்கூட்டு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிறிராணி சந்திரகாந்தன் நேற்று (03.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சந்திரகாந்தனின் பாசமிகு மனைவியும், சண்கீரன் (யாழ்.இந்துக்கல்லூரி - A/L 2011 (COM), விபூஷன் (யாழ். இந்துக்கல்லூரி - தரம் 11), காலஞ்சென்ற ஐஸ்வர்யா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும், பாலசிங்கம் (அளவெட்டி), ஞானேஸ்வரி, சாந்தினி (லண்டன்), சிறிதரன் (காந்தன் கொம்பியூட்டர் சிஸ்ரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாதேவி, இராஜேந்திரன், சண்முகராஜா (லண்டன்), சசிகலா (ஆசிரியை), சந்திரபிரேமா (தாதிய உத்தியோகத்தர்), லோகேஸ்வரன் (ஆஸ்திரேலியா), தில்லேஸ்வரன், காலஞ்சென்ற விஜயநாதன் மற்றும் நிசாளினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.10.2011) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் மாலை 4 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.331, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

## விநியோகஸ்தர் (விற்பனை முகவர்) தேவை

இலங்கையின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான
ஹேலீஸ் கொன்ஸ்யுமர் (Hayleys Consumer) நிறுவனத்தின்
பொருள்களை யாழ். மாவட்டத்தில் சந்தைப்படுத்த தகுதி வாய்ந்த

★ விநியோகஸ்தர் (விற்பனை முகவர்)
★ மொத்த விற்பனையாளர் தேவை.

விண்ணப்பிக்க விரும்புவோர் 05.10.2011(புதன்கிழமை) காலை 9.00 மணி
தொடக்கம் "ஹேலீஸ் காட்சியறை" (The World of Hayleys)
இல. 51. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம் எனும் முகவரியில்
ஹேலீஸ் கொன்ஸ்யுமர்
விற்பனைப் பிரிவுத் தலைவரை நேரில் சந்திக்கவும்.

தொ.பே : 077 7328463, 021 2221292

குறிப்பு :
கீழே தரப்படும் தகைமைகள் விரும்பத்தக்கது
★ வங்கிப் பிணை -
(BANK GUARANTEE) Rs. 1, 000, 000.00
★ களஞ்சிய, விநியோக வசதி

Hayleys CONSUMER

## விற்பனைப் பிரதிநிதி (Sales Representative) தேவை

இலங்கையின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான ஹேலீஸ் கொன்ஸ்யுமர் (Hayleys Consumer) நிறுவனத்தின் பொருள்களை யாழ். மாவட்டத்தில் சந்தைப்படுத்த தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### தகைமைகள்

★ கல்வித்தகைமை சாதாரண தரத்தில் (O/L) சித்தி
★ விற்பனை, சந்தைப்படுத்தல் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
★ தமிழ், ஆங்கிலத்தில் தேர்ச்சி
★ கணினி பற்றிய அறிவு விரும்பத்தக்கது

விண்ணப்பிக்க விரும்புவோர் 05.10.2011(புதன்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம் "ஹேலீஸ் காட்சியறை"( The World of Hayleys) இல. 51, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்கு உரிய ஆவணங்களுடன் சமுகம் தரவும்.

தொடர்புகளுக்கு: விற்பனைப் பிரிவுத் தலைவர்,
ஹேலீஸ் கொன்ஸ்யுமர்,
தொ.பே: 077 7328463, 021 2221292

Hayleys CONSUMER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.